வெற்றியின் முகவரி
SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

TNPSC MAINS

# TNPSC GROUP - II ASPIRANTS

## JUNE -2022 CURRENT ISSUES

- SOCIO ECONOMIC ISSUES
- TAMILNADU ADMINISTRATION
- SCIENCE & TECHNOLOGY
- STATE CURRENT ISSUES
- NATIONAL CURRENT ISSUES

சுரேஷ் பாடசாலை


**தூத்துக்குடி**
162-A, எட்டையபுரம் ரோடு
0461 - 4000970
99445 11344

**திருநெல்வேலி**
8A/1, இலந்தைகுளம் ரோடு,
பாளையங்கோட்டை
0462-2560123
98942 41422

**இராமநாதபுரம்**
82, புளிகாரத்தெரு,
கண்ணன் கோவில் அருகில்
75503 52916
75503 52917

**மதுரை**
மாஸ்டர் மஹால் பின்புறம்
முடக்குச்சாலை, காளவாசல்
0452 - 2383777
98431 10566

விரைவில்
சென்னை

SURESH' IAS ACADEMY

# June Month Current Affairs

## பொருளடக்கம்

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|


1. மத்திய நிகழ்வுகள்

- குழந்தைத் திருமணம் ... 01
- பாலியல் தொழில் கடந்து வந்த பாதை ... 01
- மகளிருக்கான மத்திய அரசுத் திட்டங்கள் ... 02
- ஜம்மு காஷ்மீர் தீவிரவாதிகள் ... 02
- பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் ... 03
- தாய்மொழி வழிக்கல்வி பழங்குடி மக்கள் ... 03
- தேசிய கல்விக்கொள்கை ... 04
- இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்க திட்டம் ... 04
- சாதிவாரி கணக்கெடுப்பு ... 05
- இந்தியா குழந்தை இறப்பு விகிதம் 28 ... 05
- மகப்பேறு உயிரிழப்புகள் ... 06
- சிசு மரணம் ... 06
- நெகிழிக்குத் தடை ... 07
- புவிசார் குறியீடு ... 07
- வலுவான உள்கட்டமைப்பு ... 08
- பெண் குழந்தைகளை காப்போம்: கற்பிப்போம் திட்டம் ... 09
- சுற்றுச்சூழல் ... 09
- சுற்றுச்சூழல் செயல்திறன் ... 10
- ராம்சார் ஸ்தலம் ... 11
- ஸ்டாக்ஹோம் மாநாடு ... 11
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு ... 12
- சுகாதாரச் சேவைகள் ... 13
- ஒரே நாடு, ஒரே போலீஸ் சீருடை ... 13
- டிஜிட்டல் சேவைகள் ... 14
- குழந்தைத் தொழிலாளர் கொடுமை ... 15
- குழந்தைகளின் பாதுகாப்பு புதிய சட்டம் ... 16
- திருநங்கைகள் ஆய்வு – ஆவண மையம் ... 17
- புற்றுநோய் சிகிச்சையில் புதிய வெளிச்சம் ... 17
- அக்னி பாதை திட்டம் ... 18
- பெண்களுக்கு இடஒதுக்கீடு ... 21
- கற்றல் இழப்பு ... 22
- மூத்த குடிமக்கள் ... 22
- பி.எம். கிசான் ... 23
- சிறைச் சீர்திருத்தம் ... 23
- புல்டோசர் (அ) நீதி ... 24


SURESH'



தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

- குடியரசுத்தலைவர் தேர்தல் ........ 24
- குடியரசுத் தலைவர்கள் ........ 24
- பிரதமரின் வேட்பாளர் ........ 26
- தேர்தல் ஆணையத்தின் பரிந்துரை ........ 26
- முந்தைய பூகம்பங்கள் ........ 27
- ஆயுஷ் துறை ........ 27
- மண் காப்போம் ........ 28
- சித்ரவதைகள் ........ 28
- நகர்ப்புற வளர்ச்சி ........ 29
- கருக்கலைப்பு செய்வதற்கு தடை ........ 30
- சுகாதார கட்டமைப்பு ........ 31
- 5 டிரில்லியன் டாலர் – பொருளாதார இலக்கு ........ 31
- பேச்சு சுதந்திரம் ........ 32
- கைவிடப்பட்ட 46 அகதிகள் ........ 33
- ஜிஎஸ்டி இழப்பீடு ........ 33
- சொகுசு விடுதி அரசியல் ........ 33
- பழங்குடியினர் உயர்கல்வி ........ 35
- தலைமைச் செயலாளர்கள் மாநாடு ........ 35

**2. மாநில நிகழ்வுகள்**

- இல்லம் தேடிக் கல்வி ........ 36
- தமிழக மாநில கல்விக் கொள்கை ........ 36
- கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் ........ 36
- அனைத்தும் சாத்தியம் ........ 37
- தமிழகத்தில் சந்தை ஒப்பந்த சாகுபடி ........ 37
- தமிழ்நாடானது உணவு பாதுகாப்பு குறியீட்டில் முன்னணி வகிக்கிறது ........ 37
- ஓயா உழைப்பின் ஓராண்டு ........ 38
- ஆன்லைன் சூதாட்டத்துக்குத் தடை ........ 39
- எண்ணும் எழுத்தும் திட்டம் ........ 41
- உணவுப் பாதுகாப்பில் முதலிடம் தொடரட்டும் ........ 42
- இ-சேவை தமிழகத்திற்கு 2வது இடம் ........ 42
- மகளிர் காவல் நிலையங்கள் ........ 43
- வேலைக்காக காத்திருத்தல் ........ 43
- 2022-ன் முதல் காலாண்டில் வேலையற்றோருக்கான விகிதம் ........ 43
- தமிழக கல்வி வளர்ச்சி ........ 43
- கௌரவ கொலை ........ 44
- தமிழகத்தில் கல்வி ........ 45
- உயர்நீதிமன்றத்தில் தமிழ் ........ 45
- முதல்வரின் சரியான யோசனை ........ 45
- மூவலூர் இராமாமிர்தம் உயர்கல்வி உறுதித்திட்டம் ........ 46
- தமிழகத்தில் சூரியமின்சார உற்பத்தி ........ 47
- பாரத் நெட் திட்டம் ........ 47
- சோப்தார் பதவிக்கு பெண் நியமனம் ........ 47
- 6.70 லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதவில்லை ........ 48
- நான் முதல்வன் ........ 48

SURESH' IAS ACADEMY MOST TRUSTED SINCE 2006

# 01 மத்திய நிகழ்வுகள்

## குழந்தைத் திருமணம்

### குழந்தை திருமணத்திற்கான காரணங்கள்

- சிறுமியர் மட்டுமின்றி, சிறுவர்களும் திருமணத்துக்கு தள்ளப்படுகின்றனர்.
- பெற்றோரை கொரோனாவுக்கு பறிகொடுத்த, பல சிறுவயது பிள்ளைகளுக்கு திருமணம் நடந்துள்ளது.
- 16 – 18 வயதுள்ள பள்ளி பிள்ளைகள் விரும்பிச் சென்று திருமணம் செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து உள்ளது.
- சில மாவட்டங்களில் குழந்தை திருமணங்களுக்கு அடிப்படையாக ஜாதி இருக்கிறது.
- பெண்கள் வயதுக்கு வந்ததும், பெற்றோரே அவசரமாக திருமணம் செய்து வைத்து விடுகின்றனர்.

**குழந்தை திருமணம் அதிகம் நிகழ்ந்த மாநிலங்களின் புள்ளி விவரங்கள்**

| | |
|---|---|
| பீகார் | 39.1 சதவீதம் |
| ஜார்கண்ட் | 35.4 சதவீதம் |
| மத்தியப்பிரதேசம் | 30 சதவீதம் |
| மகாராஷ்டிரா | 25.1 சதவீதம் |

- குழந்தை திருமணங்களை தடுக்க சமூக நலத்துறை, **'ஸ்டேட் ஆக்ன் பிளான்'** ஒன்றை செயல்படுத்தி வருகிறது.

- குழந்தை திருமணம் செய்தவர்கள், குடும்ப வன்முறைக்கு ஆளாகும் வாய்ப்புகள் இருக்கிறது.
- வறுமையின் காரணமாக, பெண்களுக்கு சிறுவயதிலேயே திருமணம் செய்வது முதல் தலைமுறை பிரச்சனை.
- தங்கள் பெண்கள் காதலிப்பரோ, ஜாதி மறுப்பு திருமணம் செய்து விடுவரோ என்ற பயத்திலேயே, குழந்தை திருமணங்களை செய்து வைத்து விடுகின்றனர்.
- பெண் குழந்தைகளுடனும், பெற்றோருடனும் தொடர்ந்து உரையாடுவதன் வாயிலாகவே, இத்தகைய பிரச்சனைகளை சரி செய்ய முடியும்.



### குழந்தைத் திருமணம் அதிகரிப்பது ஏன்?

- பெண்களை ஒரு சுமையாக கருதுதல்
- பெண்கள் பாதுகாப்பு
- பெண்கள் தவறான வழியில் செல்வார்கள் என்ற அச்சம்
- வரதட்சணை, வறுமை, பெண்களின் குறைவான கல்வி நிலை

## பாலியல் தொழில் கடந்து வந்த பாதை

- இந்திய தண்டனைச் சட்டம் 497 என்பது ஒரு பெண் தனது திருமண பந்தத்துக்கு அப்பாற்பட்டு, வேறு ஒரு ஆணுடன் பாலியல் உறவு கொண்டால் அது தண்டனைக்குரிய குற்றம்
- ஆனால் இதில் அந்த பெண் தண்டிக்கப்படமாட்டார். ஆண் மட்டுமே தண்டிக்கப்படுவார் – ஆணுக்கு மட்டுமே தண்டனை
- தகாத உறவால் யாரும் தற்கொலைக்கு தூண்டப்படாதவரை அது கிரிமினல் குற்றம் இல்லை.
- பெண்ணின் எஜமானர் கணவர் அல்ல. கற்பு என்பது பெண்ணுக்கு மட்டுமல்ல. ஆணுக்கும் சரிசமமாக பொருந்தும் என்று 2018ம் ஆண்டு உச்சநீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு வழங்கியது.

### 2022 உச்சநீதிமன்ற நெறிமுறைகள்

- பாலியல் தொழிலாளர்கள் சட்டப் பாதுகாப்பை பெற தகுதியானவர்களே.
- 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் தாங்களாக விரும்பி பாலியல் தொழிலில் ஈடுபடுவது குற்றமல்ல.

- அரசியலமைப்பு சட்டம் 21வது பிரிவு அளித்துள்ள தனிநபர் சுதந்திரத்தின் அடிப்படையில், அவர்கள் மீது போலீசார் குற்ற நடவடிக்கை எடுக்க இயலாது.
- விபச்சார விடுதிகளில் சோதனை செய்யும் போது பாலியல் தொழிலாளர்களை கைது செய்வதோ, அபராதம் விதிப்பதோ, அவர்களை துன்புறுத்துவதோ கூடாது.
- பாலியல் தொழில் செய்வது குற்றமல்ல என்ற போதிலும், விவச்சார விடுதிகள் வைத்து பாலியல் தொழில் செய்வது குற்றமாகும்.
- பாலியல் தொழிலாளியுடன் உள்ள 18 வயதுக்கு உட்பட்ட மைனர் குழந்தைகளை அவரிடம் இருந்து பிரிக்கக்கூடாது.
- கைது அல்லது மீட்பு நவடிக்கைகளின் போது பாலியல் தொழிலாளியின் அடையாளம், பெயர் எக்காரணம் கொண்டும் வெளியில் தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## மகளிருக்கான மத்திய அரசுத் திட்டங்கள்

- பெண்களின் வாழ்க்கையை எளிதாக்க 11.5 கோடிக்கும் அதிகமான கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.
- 9.5 கோடிக்கும் அதிகமான வீடுகள் குடிநீர் குழாய் இணைப்புகளை பெற்றுள்ளன.
- முத்ரா திட்டத்தின் 68% பயனாளிகள் பெண்கள்
- மகளிருக்கு 9.17 கோடி சமையல் எரிவாயு இணைப்புகள் உஜ்வாலா திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- பிரதமரின் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான மாத்ரு வந்தனா திட்டத்தில் 2.4 கோடி பெண்களுக்கு நிதியுதவி
- பேறு காலத்திற்கு முந்தைய இலவச பரிசோதனை
- பிரதமரின் பாதுகாப்பான தாய்மை இயக்கத்தின் கீழ் 3.11 கோடி பெண்களுக்கு நடத்தப்பட்டுள்ளது.
- ஊதியத்துடனான பேறுகால விடுப்பு 12 வாரத்தில் இருந்து 26 வாரங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.
- செல்வமகள் சேமிப்புதிட்டத்தின் கீழ் 2.73 கோடி கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.
- முத்தலாக் முறை ரத்து செய்யப்பட்டுள்ளது
- ராணுவத்தில் உள்ள பெண்களுக்கு நிரந்தர ஆணையம்

## ஜம்மு காஷ்மீர் தீவிரவாதிகள்

### தீராத எல்லை பிரச்சனை

- இது தீர்க்கப்படாத பிரச்சனைகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது.
- நிலப்பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதும், அதனைத் தொடர்ந்து போர் அல்லது ராணுவ நடவடிக்கை நடைபெறும்.

### 1947 – ல் தொடங்கி

- ஜம்முகாஷ்மீர் மேற்கு பகுதிகளையும், வடக்குப் பகுதிகளையும், 1947ல் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்தது. இப்பகுதிகளை ஆசாத் காஷ்மீர் மற்றும் வடக்கு நிலங்கள் என்ற பெயரில் பாகிஸ்தான் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது.
- சீனா, ஜம்மு காஷ்மீரின் கிழக்குப் பகுதியில் உள்ள அக்சய்சின் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

### நாட்டை உலுக்கிய தாக்குதல்கள்

- பஞ்சாப் மாநிலத்தில் கடந்த 2016ம் ஆண்டு, பதன்கோட் விமானப்படை தளத்தில் புகுந்து தாக்குதல் நடத்தி தீவிரவாதிகள் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 2019ம் ஆண்டு புல்வாமாவில் வெடிபொருட்களுடன் வந்த கார், ராணுவ வீரர்கள் சென்ற வாகனத்தின் மீது மோதியதில் 40 வீரர்கள் வீரமரணம் அடைந்தனர்.

### DRDO – அஸ்திரா

- விமானம் மற்றும் கடற்படைக்கு, ரூ.3,000 கோடி மதிப்பில் ‘அஸ்திரா’ ஏவுகணைகள்
- ராணுவத்துக்கு தேவையான தளவாடங்களை, டி.ஆர்.டி.ஓ,. எனப்படும் ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தயாரித்து வருகிறது.

#### செயல்பாடுகள்

- விண்ணில் பறந்து சென்று, எதிரி ஏவுகணையை விண்ணிலேயே இடைமறித்து தாக்கி அழிக்கும் திறன் கொண்டது.
- ஒலியைக் காட்டிலும் வேகமாகச் செல்லக்கூடியது.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- இதற்கு பதிலடியாக பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்து இந்திய ராணுவம் சர்ஜிக்கல் ஸ்டிரைக் நடத்தி, தீவிரவாதிகள் முகாம்களை அழித்தது.
- 2020ம் லடாக் எல்லையில் இந்திய-சீன வீரர்கள் மோதல் ஜம்முவில் உள்ள விமானப்படை தளத்தின் மீது டிரோன் மூலம் தாக்குதல் என தீவிரவாதிகள் மற்றும் வீரர்களின் மோதல் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

### சிறப்பு அந்தஸ்து நீக்கம்

- 2019ம் ஆண்டு ஆகஸ்ட் 5-ம் தேதி ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டது.
- இதையடுத்து, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டது.
- ஒன்றிய அரசின் நேரடி கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

### தீவிரவாதிகளாக மாறும் மாணவர்கள்

- பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஐஎஸ்ஐஎஸ், அல்-கொய்தா, லக்ர் இ தொய்பா, தலிபான் உள்ளிட்ட பல்வேறு தீவிரவாத அமைப்புகள், ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளை ஊடுருவ செய்து, அமைதியாக உள்ள இந்தியாவை சீர்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

## பி.எம்.ஸ்ரீ பள்ளிகள்

- எதிர்கால சந்ததியினரை உருவாக்க பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் தொடங்கப்படும் என்று மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்

### மாநாடு

- பள்ளிக் கல்வி அமைச்சர்களின் தேசிய மாநாடு குஜராத்தி காந்தி நகரில்நடந்தது.
- அனைவருக்கும் கல்வி வழங்குவதை நோக்கமாகக் கொண்ட அறிவு ஆவணமாக புதிய கல்விக்கொள்கை விளங்குகிறது.

### தாய்மொழிக்கு முக்கியத்துவம்

- தேசிய கல்விக் கொள்கையின் பள்ளிக் கல்வியல் 5+3+3+4 அணுகு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- 5 ஆண்டு அடிப்படைக் கல்வி (3 ஆண்டுகள் அங்கன்வாடி மற்றும் 1, 2-ம் வகுப்பு) 3 ஆண்டு முன் பருவக் கல்வி (3 முதல் 5-ம் வகுப்பு வரை)
- 4 ஆண்டு மேல்நிலை கல்வி (9 முதல் 12-ம் வகுப்பு வரை) என்ற திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது.
- புதிய கல்விக் கொள்கையில் தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.
- திறமையான எதிர்கால சந்ததியினரை உருவாக் பி.எம்.ஸ்ரீ பள்ளிகளை தொடங்க நடவடிக்கை
- 13 பேர் கொண்ட குழு 10+2 முறை தொடர வேண்டும்; 3,5,8 வகுப்புகளுக்குப் பொதுத் தேர்வுகள் நடத்தக்கூடாது.
- இரு மொழித் திட்டமே தொடர வேண்டும்.
- கலை, அறிவியல் கல்லூரிகளுக்குப் பொது நுழைவுத் தேர்வு கூடாது என்பது உள்ளிட்ட பல வியங்களில் புதிய கல்விக் கொள்கையோடு தமிழ்நாடு மாறுபட்டு நிற்கிறது.

## தாய்மொழி வழிக்கல்வி பழங்குடி மக்கள்

- ஒரு குழந்தையின் மொழியை நிராகரித்தல், அந்தக் குழந்தையை நிராகரிப்பதற்கு ஒப்பானது என்பார் கல்வியாளர் கமின்ஸ்.
- முதலில் பழங்குடி மக்களின் பயன்பாட்டில் உள்ள கதைகள், விடுகதைகள், சொலவடைகள், அவர்களின் பண்பாட்டு விழுமியங்கள் சார்ந்த செயல்பாடுகள் என ஓரிரு மாதங்கள் உற்சாகமாக வகுப்பறைகள் செயல்பட வேண்டும்.
- பழங்குடிக் குழந்தைகளின் வீட்டு மொழி வழியாகப் பள்ளி மொழிக்கு நகர்ந்து வருவதே கற்றலின் அஸ்திவாரம்.
- தமிழில் உரையாடலைத் தொடங்குதல் கற்றல் செயல்பாட்டின் முதல் படி.
- தமிழ் எழுத்துக்களை நோக்கிக் குழந்தைகளை நகர்த்திச் செல்லுதல் மூன்றாம் நிலையாக இருக்க வேண்டும்.

## தேசிய கல்விக்கொள்கை

- இந்தியாவில் கல்வி பொதுப்பட்டியலில் இருக்கிறது. அதனால், மத்திய அரசு கல்விக் கொள்கையை வகுக்கிறது.
- முதன்முதலில் தேசிய கல்விக் கொள்கை 1968-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதுவரை கல்வி, மாநிலப் பட்டியலில்தான் இருந்தது.
- 42-ஆவது திருத்தத்தின்படி கல்வியை பொதுப்பட்டியலுக்குக் கொண்டுவந்தது.
- 1992-ஆம் ஆண்டில், 1986-ஆம் ஆண்டு கல்விக் கொள்கை திருத்தப்பட்டது.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு டி.எஸ்.ஆர்.சுப்பிரமணியன் தலைமையில் குழு அமைத்தது.
- 2019-ஆம் ஆண்டு கஸ்தூரிரங்கன் கல்விக் குழு பல ஆய்வுகளை நடத்தி, மக்களின் கருத்துகளைக் கேட்டு அவற்றினடிப்படையில் அறிவியல் பூர்வமான தேசிய கல்விக் கொள்கையை தாக்கல் செய்துள்ளது.
- மத்திய அமைச்சரவை 2020 ஜுலை 29-ஆம் தேதி ஒப்புதல் அளித்தது.
- கற்றல் இடைநிற்றலால் கல்வி கிடைக்காமல் போன இரண்டு கோடி குழந்தைகளை மீண்டும் பள்ளிக்கு அழைத்து வருவது 2020 தேசிய கல்விக் கொள்கையின் இலக்கு.
- அங்கன்வாடியிலிருந்து மேல்நிலைக் கல்வி வரை மாணவர் சேர்க்கை விகிதத்தை 2030-ஆம் ஆண்டுக்குள் 100% ஆக்குவதும் இளைஞர்களும், பதின்பருவத்தினரும் 100% கல்வியறிவு பெறுவதும் முக்கிய நோக்கம்.
- தொழிற்கல்வி உள்ளிட்ட உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் 2018-ல் 26.3% அதை 2035 ஆம் ஆண்டுக்குள் 50% ஆக உயர்த்துதலும்
- உயர்கல்வியில் புதிதாக 3.50 கோடி இடங்ககளை உருவாக்குவதும் கல்வியை உலகமயமாக்கல் செய்வதும்தான் தேசிய கல்விக் கொள்கையின் திட்டம்.

| முந்தைய கல்வி அமைப்பு | புதிய கல்வி அமைப்பு |
|---|---|
| 2<br>(வயது 16 - 18) | 4<br>(9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை வயது 14 - 18) |
| 10<br>(வயது 6 - 16) | 3<br>(6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை வயது 11 - 14) |
| | 3<br>(3ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை வயது 8 - 11) |
| | 2 ஆண்டுகள்<br>(1ம் வகுப்பு முதல் 2ம் வகுப்பு வரை வயது 6 - 8) |

- ஒவ்வொரு மாவட்டத்திலும் 'பாலபருவன்' உருவாக்க முடியும். பள்ளியின் பகல் நேரத்தில் வாழ்க்கைக்குத் தேவையான தொழில், கைத்தொழில் கற்கவும், விளையாட்டு தொடர்பான செயல்களில் ஈடுபடவும் 'பாலபவன்' ஊக்கம் தரும்.
- 5-ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கு தாய்மொழி அல்லது பிராந்திய மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.
- 6-ஆம் வகுப்பிலிருந்து மாணவர்கள் தொழிற்கல்வி கற்க ஊக்கப்படுத்தப்படுவார்கள்.
- தனியார் மற்றும் அரசு உயர்கல்வி நிறுவனங்கள் அனைத்துக்கும் பொதுவான விதி முறைகள் கடைப்பிடிக்கப்படும்.
- தமிழ்நாடு, காமராஜர் ஆட்சிக் காலத்திலேயே கல்விக்கான சிறந்த அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை அடைந்து விட்டது.
- கல்வி என்பது அடுத்த தலைமுறையின் வாழ்க்கைக்கான அடித்தளம்.

## இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்க திட்டம்

- தேசிய கல்விக் கொள்கை 2020
- திறன் அடிப்படையிலான கல்வியை நோக்கி ஒரு முன்னுதாரண மாற்றம்
- மாணவர்களின் தனித்துவமான திறன்களை அங்கீகரிப்பதும் வளர்ப்பதும்
- அண்மைக்கால தொழில்நுட்பங்கள் மற்றும் கற்பித்தல் முறை மூலம் ஆசிரியர்களைத் தயார்படுத்துதல்
- கடந்த எட்டு ஆண்டுகளில் 320 புதிய பல்கலைக் கழகங்கள், 7 புதிய ஐஐடிகள் மற்றும் 7 புதிய ஐஐஎம்கள்

- நாட்டின் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கு ஒருங்கிணைந்த நுழைவுத்தேர்வு நடத்த தேசியத் தேர்வு முகமை அமைக்கப்பட்டுள்ளது.
- சிறந்த வேலை வாய்ப்புகளுக்காகப் பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1.36 கோடி இளைஞர்களுக்குக் கட்டணமில்லாப் பயிற்சி.
- கடந்த எட்டு ஆண்டுகளில் தொழில் பயிற்சி நிறுவனங்களின் (ஐஐடிகள்) எண்ணிக்கை ஏறத்தாழ 46% அதிகரித்து 14,740 ஆகியுள்ளது.
- நாட்டில் சுமார் 70,000 அங்கீகரிக்கப்பட்ட புதிய தொழில்கள், இளைஞர்கள் வேலைகளை உருவாக்குபவர்களாக மாறுகிறார்கள்; யூனிகார்ன்களின் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளது.
- 9,500க்கும் அதிகமான அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் இளைஞர்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு வாய்ப்புகளை வழங்குகின்றன.
- டோக்கியோ ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக்ஸ், 2020-ல் இந்திய விளையாட்டு ஆளுமைகளின் எப்போதும் இல்லாத சிறந்த செயல்பாடு.
- கேலோ இந்தியா மையங்கள், டாப்ஸ் திட்டம், திறமையான விளையாட்டு ஆளுமைகளுக்கான கல்வி உதவித் தொகை திட்டம், நாட்டின் முதல் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை நிறுவப்பட்டது போன்ற முக்கிய முன்முயற்சிகளுடன் நாட்டில் விளையாட்டுக் கலாச்சார மேம்பாடு

## சாதிவாரி கணக்கெடுப்பு

- 1929-ம் ஆண்டு பிப்ரவரி 17, 18-ந் தேதிகளில் செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாகாண மாநாட்டில், மக்கள் பிறவியில் சாதி பேதம் கிடையாது என்று தீர்மானம் நிறைவேற்றிய தந்தை பெரியாரே, பின்னர் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தினார்.
- பீகார் முதல்-மந்திரியான நிதிஷ்குமார், சாதிவாரி கணக்கெடுப்பு வேண்டும் என்பதை வலியுறுத்தி, சட்டசபையில் இருமுறை தீர்மானம்
- மாநில அரசுகள் விரும்பினால் அவர்களே சாதிவாரி கணக்கெடுப்பை நடத்திக்கொள்ளலாம்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு வழக்கமான கணக்கெடுப்பாக இருக்காது.
- ஏனெனில் மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது மத்திய பட்டியலில் இருக்கிறது.

SURESH

## இந்தியா குழந்தை இறப்பு விகிதம் 28

- கிராமப் பகுதிகளில் குழந்தை இறப்பு விகிதம் 48-இல் இருந்து 31-ஆகவும், நகரப் பகுதிகளில் 29-இல் இருந்து 19-ஆகவும் சரிவடைந்துள்ளது. கிராமம் மற்றும் நகரப் பகுதிகளில் கடந்த 10 ஆண்டுகளில் குழந்தை இறப்பு விகிதம் சுமார் 35 சதவீதம் குறைந்துள்ளது.
- 36 குழந்தைகளில் ஒரு குழந்தை ஓராண்டுக்குள் இறக்கும் சூழல் நிலவுவதாகத் தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மத்திய பிரதேசத்தில் அதிக குழந்தை இறப்பு விகிதமும் (43), மிஸோரத்தில் குறைந்த இறப்பு விகிதமும் (3) பதிவானது.
- 2011-இல் பிறப்பு விகிதம் 21.8 ஆக இருந்தது. 2020-ஆம் ஆண்டில் அது 19.5 ஆக குறைந்துள்ளது.
- கிராமப் பகுதிகளில் பிறப்பு விகிதம் 23.3-இல் இருந்து 21.1 ஆகவும், நகரப் பகுதிகளில் 17.6-இல் இருந்து 16.1-ஆகவும் குறைந்துள்ளது.

### குழந்தைகள் இறப்பு விகிதம்

- குழந்தைகள் இறப்பு விகிதம் என்பது ஒரு நாடு அல்லது ஒரு பிராந்தியத்தின் ஒட்டு மொத்த சுகாதார சூழ்நிலையை சுட்டிக்காட்டும் முக்கிய அளவுகோலாக கருதப்படுகிறது.
- 1971-ஆம் ஆண்டில் ஆயிரம் குழந்தைகள் பிறந்தால், 129 குழந்தைகள் இறந்துவிடும். தற்போது ஆயிரம் குழந்தைகள் பிறந்தால் 28 குழந்தைகள் இறக்கின்றன.
- கடந்த பத்து ஆண்டுகளில் குழந்தை இறப்பு விகிதம் 36 சதவீதம் குறைந்துள்ளது.
- ஒவ்வொரு 36 குழந்தைகளிலும் ஒரு குழந்தையானது முதல் பிறந்த நாளுக்கு முன்பாகவே இறந்து விடுகிறது.

## மகப்பேறு உயிரிழப்புகள்

- தமிழகத்தில் மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பத்தை பதிவு செய்து முதல் பிரசவம் வரை கர்ப்பிணிகள் சுகாதார செவிலியர்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர்.
- நாடு முழுவதும் மகப்பேறு உயிரிழப்புகள் 1 லட்சத்துக்கு கணக்கிடப்பட்டு சராசரியில் குறிப்பிடப்படுகிறது.
- தமிழகத்தில் கடந்த 2020-21 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் பேருக்கு சராசரியாக 73 பேர் உயிரிழந்துள்ளனர்.
- (2021-22) ஒரு லட்சம் கர்ப்பிணிகளில் சராசரியாக 90 பேர் உயிரிழந்துள்ளனர்.

○ தமிழகத்தில் சுகாதாரத் துறையின் வசதிக்காக 38 வருவாய்த் துறை மாவட்டங்கள் 46 சுகாதார மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

○ சுகாதார மாவட்ட அளவில் பழனி முதலிடத்தில் இருந்தாலும் ஒட்டு மொத்தமாக வருவாய்த்துறை மாவட்டங்கள் அளவில் கணக்கிடும் போது தரும புரி மாவட்டமே முதலிடத்தில் உள்ளது.

## சிசு மரணம்

- ஒரு தேசத்தின் ஆரோக்கியத்துக்கான குறியீடு, குறைவான குழந்தைகள் மரண விகிதம் என்பது உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.
- 1000 பிரசவங்களில் 28 உயிரிழப்பதாகத் தெரிகிறது. இதைத்தான் 'சிசு மரண விகிதம்' என்று கூறுவார்கள்.
- கடந்த 10 ஆண்டு புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது இந்தியாவின் சிசு மரண விகிதம் (இன்ஃபன்ட் மார்ட்டாலிட்டி ரேட்) 44-லிருந்து 28-ஆகக் குறைந்திருக்கிறது.
- ஊரகப்புறங்களில் 48-லிருந்து 31-ஆகவும் நகர்ப்புறங்களில் 29-லிருந்து 10 ஆகவும் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கிறது அந்த அறிக்கை.
- சிசு மரண விகிதம் 24 என்றால், நேபாளம் 24, பூடான் 23 என்கிற அளவில் இருப்பதை நாம் உணர வேண்டும்.
- இலங்கையின் சிசு மரண விகிதம் ஆயிரத்தில் ஆறு மட்டுமே.
- கேரள மாநிலத்தில் சிசு மரண விகிதம் ஒற்றை இலக்கத்தில் (ஆயிரத்துக்கு ஆறு) இருக்கிறது.
- இந்தியாவிலேயே குறைந்த சிசு மரண விகிதம், சிறிய மாநிலமான மிஸோரத்தில் (3) காணப்படுகிறது.
- இந்தியாவிலேயே அதிகமான சிசு மரண விகிதம் (43) மத்திய பிரதேசத்தில்தான்.
- ஊட்டச்சத்தின்மை இன்னொரு காரணம்.
- கடுமையான ஊட்டச்சத்துக் குறைவு காரணமாக வயிற்றுப்போக்கு, நிமோனியா, மலேரியா உள்ளிட்ட குழந்தைப் பருவ உடல்நிலை பாதிப்புகளால் சிசு மரணம்.

## கோர்பிவேக்ஸ்

- கோவேக்ஸின், கோவிஷீல்ட் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்பவர்களுக்கு பூஸ்டர் முன்னெச்சரிக்கை (தவணை) தடுப்பூசியாக கோர்பிவேக்ஸை செலுத்த இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (டிசிஜிஐ) ஒப்புதல் அளித்துள்ளது.
- கோர்பிவேக்ஸ் செலுத்தப்படும் போது உடலில் குறிப்பிடத்தக்க அளவு நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்கிறது.
- 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் கோவேக்ஸின் அல்லது கோவிஷீல்டின் இரண்டு தவணைகளையும் செலுத்திக் கொண்ட 6 மாதங்களுக்குப் பின்னர், பூஸ்டர் தடுப்பூசியாக கோர்பிவேக்ஸை அவசரகாலங்களில் செலுத்த டிசிஜிஐ ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியாவில் இரண்டு தவணைகளாகச் செலுத்திக் கொண்ட தடுப்பூசிக்கு பதிலாக வேறொரு தடுப்பூசியை பூஸ்டர் தவணையாகச் செலுத்திக் கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள முதல் தடுப்பூசி கோர்பிவேக்ஸ் ஆகும்.
- இதுவரை 10 கோடி கோர்பிவேக்ஸ் தடுப்பூசிகளை மத்திய அரசுக்கு பயாலஜிக்கல்-இ நிறுவனம் விநியோகித்துள்ளது.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

## நெகிழிக்குத் தடை

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், வரும் ஜுன் 30-ஆம் தேதிக்குள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருள்களுக்கு (எஸ்.யுபி) தடை விதித்தல்.
- நெகிழிப் பொருள்கள் கழிவு மேலாண்மையில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.
- முற்றிலும் அவற்றை தரம் பிரிப்பதுடன், நெகிழி உள்ளிட்ட உலர் கழிவுகளைப் பிரிப்பதற்கான வசதிகளையும் மேற்கொள்வது அவசியம்.
- தரம் பிரிக்கப்பட்ட நெகிழிக் கழிவுகளை, மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றுவதன் மூலம், குப்பைக் கிடங்குகள் அல்லது நீர்நிலைகளில் நெகிழிக் கழிவுகளின் அளவைக் குறைக்க முடியும்.

### ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடை

- ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை தயாரிப்பது, இறக்குமதி செய்வது, அவற்றை இருப்பில் வைத்திருப்பது, விநியோகிப்பது, விற்பனை செய்வது உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் ஜுலை 1- ம் தேதி முதல் தடை செய்யப்பட்டது.

### எதற்கு தடை

- பலூன்களை கட்ட பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் குச்சிகள், காது குடையும் இயர் பட்களில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் குச்சிகள், ஐஸ்கிரீம் குச்சிகள், கேன்டி குச்சிகள், பிளாஸ்டிக் கோப்பைகள், பிளாஸ்டிக் அல்லது பிவிசி பேனர்கள் உள்ளிட்ட 100 மைக்ரானுக்கும் குறைவான பொருள்களுக்கும் தடை

### பாதிப்பு

- பேக்கேஜிங் துறைக்கு இவ்வித தடை மிகப்பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும். இதில் பெரும்பாலும் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள்கள்தான் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.
- பேக்கேஜிங் செய்யப்படும் பிளாஸ்டிக் கவர்கள், இனிப்பு பெட்டி அட்டை மீதான பிளாஸ்டிக் ஷீட்டுகள், சிகரெட் பெட்டி மீதான பிளாஸ்டிக் மேல் உறைகள், அழைப்பு அட்டைகளின் மேல் பாக பிளாஸ்டிக் உள்ளிட்டவற்றுக்கும் தடை..

SURESH'

## புவிசார் குறியீடு

### தலைமை அலுவகம் - சென்னை

- தமிழ்நாடு சார்ந்த 43 பொருட்களுக்கு மட்டுமே புவிசார்குறியீடு வழங்கப்பட்டிருக்கிறது.
- ஒரு பிராந்தியத்தின் தனித்துவமிக்கப் பொருளுக்கு புவிசார் குறியீடு வழங்கப்படும்.

  உதாரணம் : திண்டுக்கல் பூட்டு, கோவில்பட்டி கடலை மிட்டாய்
- ஒரு பொருள் புவிசார் குறியீட்டைப் பெறுவதன் மூலம் அதன் தனித்துவம் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்படுகிறது.
- இந்திய அளவில் கவனம் பெற முடியும்.

### புவிசார் குறியீட்டின் முக்கியத்துவம்

- முக்கிய நோக்கம், சந்தையில் விற்பனையில் உள்ள பாரம்பரியமிக்க பொருட்களின் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தை விற்பனையை அதிகரிப்பது
- பாரம்பரிய பொருட்களைப் போல போலிகள் உருவாவதை கட்டுப்படுத்துவதும் ஆகும்.

### இந்தியாவும் புவிசார் குறியீடும்

- இந்தியாவில் 1999 ஆம் ஆண்டு இதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் 2002-ல் விதிமுறைகள் வகுக்கப்பட்டு, 2004-ல் புவிசார் குறியீடு வழங்கும் பணி தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் முதன்முதலில் டார்ஜிலிங் தேயிலைக்குத்தான் புவிசார் குறியீடு கிடைத்தது.
- தமிழகத்திற்கான முதல் புவிசார் குறியீடு 2005-ல் சேலம் பேப்ரிக்சுக்கு வழங்கப்பட்டது.

- உலக வணிக அமைப்பில் உறுப்பினராக உள்ள நாடுகள் தங்கள் நாட்டுப் பொருட்களை இந்தியாவில் சந்தைப்படுத்த இந்தியாவில் புவிசார் குறியீடுகளை பெறுகின்றன.

**தமிழ்நாட்டு நிலவரம்**

- பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டால், வேளாண் பொருட்களில் குறியீடு பெறுவதில் தமிழ்நாடு மிகவும் பின்தங்கி உள்ளது.

**தமிழகத்தில் புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள்**

**வேளாண் பிரிவு**

- ஈத்தாமொழி தென்னை, விருபாக்ஷி வாழை, சிறுமலை வாழை, மதுரை மல்லி, ஈரோடு மஞ்சள், கொடைக்கானல் ம லைபூண்டு, கன்னியாகுமரி கிராம்பு, மலபார் மிளகு, நீலகிரி தேயிலை

**தயாரிப்புப் பிரிவு**

- கோவை வெட்கிரைண்டர், ஈஸ்ட் இந்தியா லெதர்

**உணவுப்பிரிவு**

- பழனி பஞ்சாமிர்தம், ஸ்ரீவில்லிப்புத்தூர் பால்கோவா, கோயில்பட்டி கடலை மிட்டாய்

**கைத்திறன் பிரிவு**

- சேலம் பேப்ரிக்ஸ், காஞ்சிபுரம் பட்டு, பவானி ஜமுக்காளம், மதுரை சுங்குடி சேலை, தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை, தஞ்சாவூர் பெயிண்டிங், தஞ்சாவூர் தட்டு, நாகர்கோயில் நகை, சேலம் வெண்பட்டு, கோவை கோரா காட்டன், ஆரணி பட்டு, சுவாமிமலை பித்தளை பொருட்கள்,தோடா எம்பிராயடரி, தஞ்சாவூர் வீணை, மகாபலிபுரம் கற்சிற்பம், திருபுவனம் பட்டு, பத்தமடை, பாய், திண்டுக்கல் பூட்டு, காரைக்குடி கண்டாங்கி சேலை, தஞ்சாவூர் நெட்டி, அரும்பாவூர் மரச்சிற்பம், கருப்பூர் கலம்காரி பெயிண்டிங், கள்ளக்குறிச்சி மரச்சிற்பம், நாச்சியார் கோயில் குத்துவிளக்கு, நரசிங்கபுரம் நாகேஸ்வரம், செட்டிநாடு காட்டன்

**பயனிழக்கும் புவிசார் குறியீடு**

- புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் முறையாக சந்தைப்படுத்தப்படுவதில்லை என்பதுதான் புவிசார் குறியீடு பெற்ற பொருட்ளில் பெரும்பாலானவை பெயரளவில் அங்கீகாரத்துடன் இருக்கின்றனவே தவிர முழுமையான சந்தைப்படுத்துதல் நிகழவில்லை.

**என்ன செய்ய வேண்டும்?**

- புவிசார் குறியீட்டுப் பொருட்களுக்கான விற்பனை மையத்தை மாவட்ட நிர்வாகங்களே தொடங்கலாம்.
- மாவட்ட அளவில் வேளாண்மை கண்காட்சி, பொருட்காட்சி, உணவுத் திருவிழாக்கள் ஆகியன அரசுத்துறைகளாலும் தனியார் துறைகளாலும் நடத்தப்படுகின்றன.
- புவிசார் குறியீட்டை வெறும் அடையாளமாக சுருங்கச் செய்யாமல், அதை அர்த்தமுள்ளதாக்குவது அரசு கையில்தான் இருக்கிறது.

## வலுவான உள்கட்டமைப்பு

- பிரதமரின் விரைவு சக்தி (கதி சக்தி)
- புதிய இந்தியாவின் உள்கட்டமைப்பை உருவாக்குவதற்காக ரூ.100 லட்சம் கோடி முன்மாதிரி பெருந்திட்டம்
- ஒற்றை ஒருங்கிணைந்த தளத்தின் மூலம், அனைத்து திட்டங்கள் மற்றும் துறைகளுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பு
- கடந்த எட்டு ஆண்டுகளில், நெடுஞ்சாலை அமைக்கும் வேகம் நாளொன்றுக்கு 12 கி.மீ யில் இருந்து 29 கி.மீ ஆக அதி கரித்துள்ளது; போக்குவரத்து ஊக்கம் பெற்றுள்ளது.
- பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், கடந்த எட்டு ஆண்டுகளில் 3.27 லட்சம் கி.மீ சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன; 99%க்கும் அதிகமான கிராமங்கள் உறுதியான சாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

- நாட்டில் விமான நிலையங்களின் எண்ணிக்கை 74-ல் இருந்து 140 ஆக உயர்ந்துள்ளது. உடான் திட்டத்தின் கீழ், 96 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கட்டுப்படியான விமானப் பயண பயன்களைப் பெற்றுள்ளனர்.
- முன்பு 5 நகரங்களில் இருந்ததற்கு மாறாக, 20 நகரங்களில் மெட்ரோ ரயில்கள் தற்போது இயங்குகின்றன. நகர்ப்புற பயணம் எளிதாகியுள்ளது.
- உலகத் தரம் வாய்ந்த ரயில் உள்கட்டமைப்பை உருவாக்குவதிலும், ரயில்களின் வேகத்தை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது; கிழக்கு மற்றும் மேற்கு பிரத்யேக சரக்கு வழித்தடங்கள், மேட் இன் இந்தியா வந்தே பாரத், கிசான் ரயில்கள் இயக்கம் போன்ற முக்கிய முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- உள்நாட்டு நீர்வழிகள் மூலம் சரக்குப் போக்குவரத்து சுமார் 7 மடங்கு வளர்ந்துள்ளது, பொருட்கள் விநியோகம் இப்போது மலிவாகியுள்ளது.
- பெரிய துறைமுகங்களில் சரக்கு கையாளும் திறன் இருமடங்கானது. வர்த்தகம் உயர்வு
- 10 ஆயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ள உலகின் மிக நீளமான அடல் சுரங்கப்பாதை, பயண நேரத்தைக் குறைத்துள்ளது.
- உரிய நேர செயலாக்கத்துக்கான **'பிரகதி தளம்'** மூலம் திட்டங்களின் செயல்பாட்டை பிரதமரே நேரடியாக ஆய்வு செய்கிறார்.

### 2026-இல் இந்தியாவில் முதல் புல்லட் ரயில்

- இந்தியாவில் முதல் புல்லட் ரயில் குஜராத்தின் சூரத் – பிலிமோரா இடையே 2026 – இல் இயக்கப்படும்.
- மணிக்கு 320 கி.மீ வேகத்தில் இயங்கும் இந்த புல்லட் ரயில் குஜராத் – மும்பை இடையேயான 508 கி.மீ தூரத்தை 2 மணி நேரம் 50 நிமிடங்களில் கடக்க உதவும்.
- இந்தத்திட்டத்துக்கு ஜப்பான் அரசின் சர்வதேச ஒருங்கிணைப்பு நிறுவனம் ரூ.88,000 கோடி கடனளிக்கிறது.
- மொத்தம் 12 ரயில் நிலையங்களில், குஜராத்தில் எட்டும், மகாராஷ்டிரத்தில் நான்கும் அமைகின்றன.
- அகமதாபாத்தில் உள்ள சபர்மதியில் புல்லட் ரயில் கட்டுப்பாட்டு மையம் அமைகிறது.
- சூரத், சபர்மதியில் இரண்டு பணிமனைகளும், மகாராஷ்டிரம் தானேயில் ஒரு பணிமனையும் அமைகிறது.

## பெண் குழந்தைகளை காப்போம்; கற்பிப்போம் திட்டம்

- கடலூர் மாவட்டத்தில், கடந்த 2015-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- குழந்தைகளின் பாலின விகிதத்தில் தேசிய சராசரியை விடக் குறைவாக இருந்த அரியலூர், தருமபுரி, நாமக்கல், சேலம், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சி, சென்னை ஆகிய 10 மாவட்டங்களுக்கு கடந்த 2018-ம் ஆண்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.
- இத்திட்டம் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தலா ரூ.50 லட்சம் மத்திய அரசு நிதி வழங்கி வந்தது.
- அனைத்து மாவட்டங்களுக்கும் தலா ரூ.30 லட்சம் வழங்க உள்ளது.

## சுற்றுச்சூழல்

### சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு

| ஆய்வின் பல்வேறு பிரிவுகள் | இந்தியாவின்தரவரிசை |
|---|---|
| பல்லுயிர்ப் பெருக்கம் பாதுகாத்தல் | 179 |
| உயிரினங்கள் பாதுகாப்பு குறியீடு | 175 |
| காடுகள் இழப்பு | 80 |
| புல்வெளிப் பகுதிகள் இழப்பு | 75 |
| சதுப்புநிலப் பகுதிகள் இழப்பு | 116 |
| காற்றின் தரம் | 60 |
| கடலில் பிளாஸ்டிக் கலப்பு | 135 |

| ஆய்வின் பல்வேறு பிரிவுகள் | இந்தியாவின் தரவரிசை |
|---|---|
| பருவநிலை மாற்றம் | 165 |
| கரியமில வாயு வெளியேற்றம் அதிகரிப்பு | 136 |
| வேளாண்மையில் பூச்சிக்கொல்லி பயன்பாடு | 47 |

### 180 நாடுகள் பட்டியலில் கடைசி இடத்தில் இந்தியா

| நாடுகள் | தரவரிசை |
|---|---|
| டென்மார்க் | 1 |
| பிரிட்டன் | 2 |

## சுற்றுச்சூழல் செயல்திறன்

- யேல் கொலம்பியா பல்கலைக் கழகங்கள் இணைந்து அண்மையில் வெளியிட்ட சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டெண்-2022 அறிக்கையில், இந்தியா கடைசி நாடு.
- குறியீட்டெண்ணுக்கான மொத்தப் புள்ளிக்கு 100 என்று கணக்கிடப்பட்டுள்ள நிலையில், இந்தியா பெற்றிருப்பது 18.6 மட்டுமே. காற்றின் தரம் மிகவும் மோசமடைந்துள்ளதும், பசுங்குடில் வாயுக்களின் வெளியேற்றம் தொடர்ந்து அதிகரித்து வருவதும் இந்தியா உடனடியாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான செயல்பாடுகள், மனித உடல்நலத்துக்கு ஏற்ற சுற்றுச்சூழலை உறுதிப்படுத்துவது, சூழலியல் அமைப்பைப் பாதுகாப்பது ஆகிய மூன்றும் இந்தக் குறியீட்டெண்ணின் முதன்மை நோக்கங்களாகும்.
- சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சனைகளை 11 ஆக வகைபிரித்து, அவற்றின் கீழ் 40 செயல்திறன் குறியீடுகளை வகுத்து, அவற்றின் அடிப்படையிலேயே இவை வெளியிடப்பட்டுள்ளன.
- ராம்சர் மாநாடு 1971-ல் ஈரானின் ராம்சர் நகரில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1975-ல் நடைமுறைக்கு வந்தது.
- சதுப்பு நிலங்கள் தொடர்பான இந்த ஒப்பந்தம், தேசிய நடவடிக்கைக்கான கட்டமைப்பையும், சதுப்பு நிலங்கள் மற்றும் அவற்றின் வளங்களைப் பாதுகாப்பதற்கும் சர்வதேச ஒத்துழைப்புக்கான கட்டமைப்பை வழங்குகிறது. இந்தியாவில் இது 1982 பிப்ரவரி 1-ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது.
- இந்தியாவில் தற்போது 10,93,636 ஹெக்டேர் பரப்பளவை கொண்ட 49 தளங்கள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களாக (ராம்சர் தளங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் பாயின்ட் சலிமேர் (கோடியக்கரை) வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம் ராம்சர் தளம் ஆகும்.

### ரியோ உச்சி மாநாடு

- 1992 ஜூனில், பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடந்த புவி உச்சி மாநாட்டில், 178-க்கும் மேற்பட்ட நாடுகள் 'அஜெண்டா 21' -ஐ ஏற்றுக்கொண்டன.
- இது மனித வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டாண்மையை உருவாக்குவதற்கான ஒரு விரிவான செயல் திட்டமாகும்.

### ரியோ +20

- ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கான மாநாடு – அல்லது ரியோ +20 – பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் 2012 ஜூன் 20-22 தேதிகளில் நடந்தது.
- ரியோவில், உறுப்பு நாடுகள் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் (SDGs) தொகுப்பை உருவாக்குவதற்கான செயல்முறையை தொடங்க முடிவு செய்துள்ளன.
- பசுமைப் பொருளாதாரக் கொள்கைகள் குறித்த அடிப்படை வழிகாட்டுதல்களையும் மாநாடு ஏற்றுக்கொண்டது.

### நிலையான வளர்ச்சி இலக்கு

- **இலக்கு 1 :** எல்லா இடங்களிலும் அதன் அனைத்து வடிவங்களிலும் வறுமையை முடிவுக்கு கொண்டு வருதல்.
- **இலக்கு 2 :** பசி ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு, மேம்பட்ட ஊட்டச்சத்தை அடைவது, நிலையான விவசாயத்தை மேம்படுத்துவது.
- **இலக்கு 3 :** ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்வது, எல்லா வயதினருக்கும் நல்வாழ்வை மேம்படுத்துவது.
- **இலக்கு 4 :** சமமான, தரமான கல்வியை உறுதி செய்தல், அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல்.
- **இலக்கு 5 :** பாலின சமத்துவத்தை அடைதல், அனைத்து பெண்கள், சிறுமிகளுக்கு அதிகாரம் வழங்குதல்.
- **இலக்கு 6 :** அனைவருக்கும் தண்ணீர், சுகாதாரம், நிலையான மேலாண்மையை உறுதி செய்தல்.
- **இலக்கு 7 :** அனைவருக்கும் மலிவு நம்பகமான, நிலையான மற்றும் நவீன எரிசக்திக்கான அணுகலை உறுதி செய்தல்.

- **இலக்கு 8 :** நீடித்த, உள்ளடக்கிய, நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், அனைவருக்கும் கண்ணியமான வேலை
- **இலக்கு 9 :** உள்கட்டமைப்பை உருவாக்குதல், புதுமை, தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல்.
- **இலக்கு 10 :** நாடுகளுக்கு உள்ளும், நாடுகளுக்கு இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்
- **இலக்கு 11 :** நகரங்கள், மனித குடியேற்றங்களை உள்ளடக்கிய, பாதுகாப்பான, மீள்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சி
- **இலக்கு 12 :** நிலையான நுகர்வு, உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்
- **இலக்கு 13 :** காலநிலை மாற்றம், அதன் தாக்கங்களை எதிர்த்து போராட அவசர நடவடிக்கை.
- **இலக்கு 14 :** நீடித்த வளர்ச்சிக்காக கடல்கள், கடல் வளங்களை பாதுகாத்தல், நிலையான முறையில் பயன்படுத்துதல்.
- **இலக்கு 15 :** நிலப்பரப்பு, சுற்றுச்சூழல் அமைப்புகளின் நிலையான பயன்பாட்டை பாதுகாத்தல், மீட்டெடுத்தல், ஊக்குவித்தல், காடுகளை நிலையான முறையில் நிர்வகித்தல், பாலைவனமாக்குதலை எதிர்த்துப் போராடுதல், நிலச்சீரழிவை நிறுத்துதல், பல்லுயிர் இழப்பை நிறுத்துதல்.
- **இலக்கு 16 :** நிலையான வளர்ச்சிக்கான அமைதியான மற்றும் உள்ளடக்கிய சமூகங்களை ஊக்குவித்தல், அனைவருக்கும் நீதிக்கான அணுகலை வழங்குதல், அனைத்து நிலைகளிலும் பயனுள்ள, பொறுப்புணர்வு மற்றும் உள்ளடக்கிய நிறுவனங்களை உருவாக்குதல்.
- **இலக்கு 17 :** செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை வலுப்படுத்துதல், நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டாண்மைக்கு புத்துயிர் அளித்தல்.

## ராம்சார் ஸ்தலம்

- தமிழகத்தில் உள்ள 13 சதுப்பு நிலங்கள் உள்ளிட்ட நாட்டில் உள்ள 26 சதுப்பு நிலங்களை, ராம்சார் ஸ்தலங்களாக அறிவிக்க மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.
- புயல், வெள்ளப்பெருக்கு, சுனாமி உள்ளிட்ட இயற்கைப் பேரிடரிலிருந்து நிலப்பகுதிகளை காப்பதில் முக்கியப் பங்காற்றும்.
- சதுப்பு நிலங்களின் அழிவைத் தடுப்பதற்காக 2.2.1971 அன்று ஈரான் நாட்டின் ராம்சார் நகரில் முதல் சர்வதேச மாநாடு நடைபெற்றது.
- உலக அளவில் சதுப்பு நிலங்கள் 2 லட்சம் சதுர கி.மீ பரப்பளவில் உள்ளது. இந்தியாவில் மட்டும் சதுப்பு நிலங்கள் 4,975 சதுர கி.மீ பரப்பளவில் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் ராமநாதபுரம், மன்னார் வளைகுடா தீவுகள், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர், தூத்துக்குடி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சதுப்பு நிலங்கள் உள்ளது.
- ராம்சார் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவில் 49 சதுப்பு நிலங்கள் பாதுகாக்கப்பட்ட இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## ஸ்டாக்ஹோம் மாநாடு

- இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை பெருமளவு சரிந்திருந்தது. நாடுகளின் எல்லை கடந்த அமில மழை உலக நாடுகளை அச்சுறுத்தி வந்தது. இது குறித்து அச்சம் தெரிவித்த ஸ்வீடன், 1968-ல் சுற்றுச்சூழல் மாசுபாடு குறித்தும் அதைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு மாநாட்டை நடத்தும் முன்மொழிவை ஐ.நா.அவையில் முன்வைத்தது.

### மாநாடு

- ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் 1972 ஜூன் 5-ம் தேதி தொடங்கி ஜூன் 16 வரை 'மனித சுற்றுச்சூழல்' குறித்த மாநாடு நடைபெற்றது.
- பூவுலகின் சுற்றுச்சூழல், இயற்கை வளங்களை நிர்வகிக்கப் பொதுவான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதே இந்த மாநாட்டின் நோக்கம்.
- அந்த மாநாட்டின் மையக் கரு '**ஒரே ஒரு பூமி**' (Only One Earth) .
- மாநாட்டில் 122 நாடுகள் பங்கேற்றன.

- ‘ஸ்டாக்ஹோம் பிரகடன’த்தை ஜூன் 16-ல் வெளியிட்டன.
- வளர்ச்சி, வறுமை, சுற்றுச்சூழல் ஆகிய மூன்றுக்கும் நெருக்கமான தொடர்பு இருக்கிறது என்பதை முதன்முதலாக ஏற்றுக்கொண்ட உலகளாவிய ஆவணம் இது.
- எந்த நாடும் மற்ற நாடுகளின் சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்குக் காரணமாக இருக்கக்கூடாது என்பது கொள்கை-செயல்திட்டத்தின் முக்கியப் பகுதி

**மூன்று பரிமாணங்கள்**

- நாடுகள் தங்கள் நாட்டு எல்லைக்குள்ளும் எல்லைக்கு வெளியேயும் சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்குக் காரணமாக இருக்கக்கூடாது.
- புவியின் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துகளை ஆராய்வதற்கு ஒரு செயல்திட்டத்தை வகுப்பது
- சுற்றுச்சூழலுக்காக உலக நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்த ‘ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டம்’ (UNEP) என்கிற பெயரில் சர்வதேச அமைப்பை உருவாக்குதல்.

**இந்திரா**

- ஸ்டாக்ஹோம் மாநாட்டில் பங்கேற்ற ஒரே வெளிநாட்டுப் பிரதமர் இந்திரா காந்தி மட்டுமே.
- “வறுமைதான் உலகின் மிகப்பெரிய மாசுபடுத்தி. வறுமை பரவலாக இருக்கும் போது சுற்றுச்சூழலை எப்படி மேம்படுத்த முடியும்?” என்று இந்த மாநாட்டில் இந்திராகாந்தி பேசினார்.
- ஸ்டாக்ஹோம் மாநாட்டின் தொடக்க நாளான ஜூன் 5, 1974-ம் ஆண்டு முதல் ‘உலக சுற்றுச்சூழல் நாளாக’ ஐ.நா. அவையால் அனுசரிக்கப்படத் தொடங்கியது.
- 1972-க்கு முன்னர் எந்த நாட்டிலும் சுற்றுச்சூழல் துறைக்குத் தனி அமைச்சகம் இருந்திருக்கவில்லை. மாநாடு முடிந்தவுடன் நார்வேயும், அடுத்த சில வாரங்களில் ஸ்வீடனும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தை உருவாக்கின.
- இந்தியாவில் 1985-ல் சுற்றுச்சூழல் அமைச்சகம் உருவாக்கப்பட்டது.
- ஸ்டாக்ஹோம் 20-ம் ஆண்டு நிறைவையொட்டி, பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் ஐ.நா.சுற்றுச்சூழல் – வளர்ச்சி குறித்து மாநாடு நடைபெற்றது. ரியோ புவி மாநாடு என்று அழைக்கப்படும்.
- ‘ஸ்டாக்ஹோம்+50 : அனைவரும் வளம் பெறுவதற்கான ஆரோக்கியமான புவி – நமது பொறுப்பு, நமக்குள்ள வாய்ப்பு’ என்பதே இந்த மாநாட்டின் தலைப்பு.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு



- சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு இந்தியா முக்கியத்துவம் அளித்து வருகிறது.
- சுற்றுச்சூழலைக் காப்பதற்கான இந்தியாவின் உறுதி, செயல்பாட்டிலேயே வெளிப்பட்டு வருகிறது.
- ஒட்டுமொத்த எரிசக்தி பயன்பாட்டில் மரபுசாரா எரிசக்தியின் பங்கு 40 சதவீதம் இருக்க வேண்டுமென்ற இலக்கை இந்தியா 9 ஆண்டுகளுக்கு முன்பே எட்டியுள்ளது.
- பெட்ரோலுடன் எத்தனால் 10 சதவீதம் கலக்கப்பட வேண்டும் என்ற இலக்கை 5 மாதங்களுக்கு முன்பே எட்டியுள்ளது.
- முற்றிலும் சூரிய எரிசக்தி மூலமாக மட்டுமே இயங்கும் முதல் விமான நிலையம் இந்தியாவில் உள்ளது.
- ரயில்வே, நடப்பு தசாப்தத்தில் கரியமில வாயு வெளியேற்றத்தில் நிகர பூஜ்ய அளவை எட்டிவிடும்.
- சர்வதேச மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் 17 சதவீதம் பேர் வசிக்கின்றனர். ஆனால் சர்வதேச கரிய-மிலவாயு வெளியேற்றத்தில் இந்தியாவின் பங்கு 5 சதவீதம் மட்டுமே.
- ஜி7 மாநாட்டின் போது பருவநிலை மாற்றம், பசுமை எரிசக்தி, நீடித்த வளர்ச்சி, உலக நலன் உள்ளிட்டவை குறித்து பிரதமர் மோடி பேசினார்.

## சுகாதாரச் சேவைகள்

- ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் 3.3 கோடிக்கும் அதிகமான மக்கள் இலவச சிகிச்சை பெற்றுள்ளனர்; பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கட்டமைப்பு இயக்கத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுகாதாரச் சேவைகளில் முன்னெப்போதும் இல்லாத முன்னேற்றம்
- 1.18 லட்சம் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்கள் திறக்கப்பட்டுள்ளன ; 22 கோடிக்கும் அதிகமான டிஜிட்டல் சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
- 8700க்கும் மேற்பட்ட மக்கள் மருந்தக மையங்களில் இருந்து கோடிக்கணக்கான மக்களுக்கு மலிவு விலையில் நல்ல, தரமான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன ; தேவைப்படும் மக்களுக்கு சுமார் ரூ.15000 கோடி சேமிப்பு
- பாரம்பரிய சுகாதார நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் யோகாவிற்கு உலகளவில் அங்கீகாரம், ஆயுஷ் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டது.
- குழந்தைகள், பருவப் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சரியான ஊட்டச்சத்து மற்றும் சரியான நேரத்தில் தடுப்பூசி போடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.
- கடந்த 8 ஆண்டுகளில் 15 புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 387லிருந்து 596 ஆக அதிகரிப்பு மருத்துவ மாணவர்களுக்கான இடம் 82000லிருந்து 1.5 லட்சமாக உயர்வு; தேசிய மருத்துவ ஆணையம் அமைப்பதன் மூலம் சுகாதாரத் துறையில் முக்கிய சீர்திருத்தம்
- இந்தியாவில் உலகின் மிகப்பெரிய இலவச தடுப்பூசி இயக்கம் 194 கோடிக்கும் அதிகமான தடுப்பூசி டோஸ்கள் போடப்பட்டுள்ளன.
- கோவிட் தொற்று நோயால் முன்வைக்கப்பட்ட சவால்கள் வெற்றிகரமாகச் சமாளிக்கப்பட்டன. சோதனை, கண்டறிதல், சிகிச்சை மற்றும் தடுப்பூசி ஆகியவற்றில் கவனம் செலுத்துதல் மற்றும் அனைவருக்கும் சிறந்த சுகாதாரச் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்தல் போன்ற முக்கிய அம்சங்கள்

### ஆதித்யா விண்கலம்

- சூரியனை பற்றி ஆய்வு செய்ய இந்திய விண்வெளி ஆய்வு
- இந்த விண்கலம் முழுமை பெற்று இஸ்ரோவிடம் விண்ணில் செலுத்துவதற்கு ஒப்படைக்கப்படும்.
- சூரியனை தரையில் இருந்து ஆய்வு செய்தால் சூரியன் உதிக்கும் நேரத்தில் மட்டுமே ஆய்வு செய்ய முடியும்.
- விண்ணில் விண்கலம் மூலம் ஆய்வு செய்தாலும் பல்வேறு இடர்பாடுகள் இருக்கும். இதையெல்லாம் தாண்டி எல்.ஜ. எனப்படும் லெக்ராஜியன் பாயிண்ட் என்ற பூமிக்கும், சூரியனுக்கும் இடைப்பட்ட பகுதியில் நமது ஆதித்யா விண்கலம் நிலைநிறுத்தப்படும்.
- இங்கு நிலைநிறுத்த 3,4 மாதங்கள் வரை ஆகும்.
- எல்ஜ எனப்படும் லெக்ராஜியன் பாயிண்ட் பகுதி பூமியிலிருந்து 1.5 மில்லியன் கி.மீ தூரத்தில் உள்ளது. சூரியனை இப்பகுதியிலிருந்து 24 மணி நேரமும் கண்காணிக்க முடியும்.
- பூமியில் ஏற்படும் பூகம்பம், சூரியனில் இருந்து வெளியாகும் காந்தப்புயலால் விண்கலங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் பழுதடைகின்றன. இதையெல்லாம் முன்கூட்டியே தடுக்க, சூரியனை தொடர்ந்து கண்காணித்தால் சாத்தியமாகலாம்.

## ஒரே நாடு, ஒரே போலீஸ் சீருடை

- ஒரு நாடு, ஒரே ரேஷன்; ஒரு நாடு, ஒரே ஓய்வூதியம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளன.
- ஒரு நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை செயல்படுத்த பிரதமர் மோடி விரும்புகிறார்.

### சீருடையில் மாற்றங்கள்

- காவல்துறை, மாநில அரசுகளின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கிறது.
- மேற்கு வங்கத்தில் தலைநகர் கோல்கட்டாவில் மட்டும் போலீசார் வெள்ளை சீருடை அணிகின்றனர்.
- கோவாவில் போலீசாரின் சீருடை நீல நிற பேன்ட், வெள்ளை சட்டையாக உள்ளது.
- புதுச்சேரியில் போலீசாரின் சீருடை இப்போதும் பிரான்சில் உள்ளது போலவே இருக்கிறது.

### சட்டத்திருத்தம்

- நிதி ஆயோக் உறுப்பினர் பிபேக் தேபராய், போலீசை மாநில அரசின் பட்டியலில் இருந்து பொது பட்டியலுக்கு மாற்ற, சட்டத்திருத்தம் கொண்டு வர வேண்டும் என கூறியுள்ளார்.

**சர்ச்சை**

- மாநிலங்களின் கட்டுப்பாட்டில் தற்பொழுது செயல்பட்டு வரும் சட்டம் – ஒழுங்கு காவல்துறையை, மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றம் செய்து மத்திய – மாநில அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் காவல்துறையைக் கொண்டு வருவதற்கான முயற்சிதான் இந்த 'ஒரு நாடு, ஒரே காவல் சீருடை திட்டம்' என்றும் சர்ச்சை எழுந்துள்ளது.
- இந்திய காவல்பணி (ஐபிஎஸ்) அதிகாரிகள் எந்த மாநிலத்தில் பணிபுரிந்தாலும் அவர்கள் அணிய வேண்டிய சீருடை தொடர்பான விதிகளை மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து, 1954 – ஆம் ஆண்டில் மத்திய அரசு உருவாக்கியுள்ளது.
- மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் பணிபுரியும் இந்திய காவல் பணியைச் சாராத காவல்துறையினரின் சீருடைகளை அந்தந்த மாநில, யூனியன் பிரதேச அரசே வடிவமைத்துக் கொள்ளும் முறை நம் நாட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது.
- இந்தியாவில் காவல்துறை என்ற அமைப்பை உருவாக்கி, அதற்கான சட்ட வடிவமைப்பை 1861–ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் கொண்டுவந்தனர்.
- நாட்டின் விடுதலைக்குப் பின் கால் நூற்றாண்டு காலம் வரை தமிழ்நாட்டில் காவலர்கள், தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் அனைவரும் அரைக்கால் சட்டையை சீருடையாகவும், 'கூண்டு தொப்பி' என்ற நீளமான தொப்பியை காவலர்களும், தலைமைக் காவலர்களும் அணிந்து வந்தனர்.
- 1973–ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல்துறையின் தலைவராக இருக்க எஃப்.வி. அருளின் பரிந்துரையின் பேரில், காவலர்கள் முதல் காவல்துறை தலைவர் வரை அனைவரும் முழுக்கால் சட்டையை சீருடையாக அணிய அப்போதைய தமிழ்நாடு அரசு அனுமதியளித்தது.
- மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் நிலவும் தட்ப வெப்ப நிலை, கலாச்சாரம், பணியின் தன்மை ஆகியவற்றுக்கு ஏற்ப, காவல்துறையினரின் சீருடையில் தேவையான மாற்றங்களை அந்தந்த மாநில, யூனியன் பிரதேச அரசுகள் கொண்டுவந்தன.
- தனியார் பாதுகாவலர்கள் காக்கி நிற சீருடை அணிய அரசு தடை விதித்தது.
- சட்டம் – ஒழுங்கைப் பராமரித்தல், போக்குவரத்தை சீர் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடும்பொழுது, தங்களை பொதும க்களிடத்தில் இருந்து வேறுபடுத்திக் காட்டவும், பணியின்போது கட்டுக்கோப்பு, கீழ்படிதல் போன்றவற்றுடன் செயல்படவும், காவல்துறையில் பல நிலைகளில் பணபுரிபவர்களை அடையாளப்படுத்தவும், காவல்துறையினர் சீருடை அணிகின்றனர்.
- நம் நாட்டில் எழுத்தறிவு விகிதம் 77.7% ஆக உயர்ந்துள்ள இன்றைய நிலையில், காவல்துறையின் செயல்பாடுகள் மீதான பொதுமக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.
- காவல்துறை நிர்வாகத்தின் அனைத்து நிலைகளிலும் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு தற்போது கையூட்டு கலாச்சாரம் உச்சத்தில் இருந்து வருகிறது.
- காவல்துறையினர் வெளிப்படையாக தங்களை அரசியல் கட்சிகளுடன் அடையாளப்படுத்திக் கொள்ளும் நடைமுறையும் நியாயம் தேடி காவல்நிலையம் செல்லும் பொதுமக்களை வேதனை அடையச் செய்திருக்கின்றன.
- இந்த சூழலில், நாடு முழுவதும் ஒரே காவல் சீருடை என்பதை நோக்கி பயணிக்காமல், நேர்மை, திறமை, சட்ட விதிகளுக்கு உட்பட்டு செயல்படுதல் போன்ற பண்புகளுடன் பணியாற்றும் காவலர்களையும், காவல் அதிகாரிகளையும் உருவாக்க அரசாங்கம் முயற்சி மேற்கொள்ள வேண்டியதே இன்றைய சமுதாய நலனுக்கு இன்றியமையாதது ஆகும்.

## டிஜிட்டல் சேவைகள்

- ஜன்தன் ஆதார் செல்பேசி மூலம் இடைத்தரகர் மற்றும் போலி விண்ணப்பங்கள் நீக்கம்; பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ரூ.22.77 லட்சம் கோடிக்கும் அதிகமாக பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- "ஒரே நாடு, ஒரே ரேஷன் அட்டை" என்பது நாடு முழுவதுமுள்ள 5.37 லட்சம் ரேன் கடைகளில் எங்கிருந்தும் ரேன் பெற முடியும்.
- ஸ்வமிதா திட்டத்தின் கீழ் 1.45 லட்சம் கிராமங்களில் நிலத்தின் ட்ரோன் சர்வே முடிக்கப்பட்டுள்ளது. 44 ஆயிரத்திற்கும் அதி கமான கிராமங்களில் 75 லட்சம் சொத்து அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
- டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் உலகிற்கு இந்தியா வழிகாட்டுகிறது. இப்போது வரை ரூ.177 லட்சம் கோடி மதிப்புள்ள யுபிஐ பரிவர்த்தனைகள் நடந்துள்ளன.
- டிஜிட்டல் தேவைகளை நிறைவேற்ற 4.94 லட்சம் பொது சேவை மையங்கள் செயல்பாட்டில் உள்ளன.

- ஓய்வூதியதாரர்களுக்கு தடையின்றி 5.70 கோடிக்கும் அதிகமான டிஜிட்டல் வாழ்வறி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- விரைவான இணையத் தொடர்புக்காக 1.78 லட்சம் கிராமங்கள் கண்ணாடி இழை வலைப்பின்னலால் இணைக்கப்பட்டுள்ளன ; 5.74 லட்சம் கிலோ மீட்டர் கண்ணாடி இழை வடங்கள் புதைக்கப்பட்டுள்ளன.
- அரசு இ-சந்தை இணையப் பக்கத்தின் மூலம் அரசு கொள்முதலில் வெளிப்படைத் தன்மை பராமரிக்கப்பட்டு சாதனை அளவாக ரூ.2.57 லட்சம் கோடி மதிப்புக்குக் கொள்முதல் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.
- கோவின் இணையப்பக்கம் மூலம் கோவிட் தடுப்பூசி நடைமுறை எளிதாக்கப்பட்டது.
- ஆவணங்களை எடுத்துச் செல்லும் தேவையை டிஜிலாக்கர் நீக்கியுள்ளது; 11 கோடி குடிமக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்; 5.1 பில்லியனுக்கும் அதிகமான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## குழந்தைத் தொழிலாளர் கொடுமை

- கோடிக்கணக்கான சிறுவர்கள் போதுமான கல்வி, சுகாதாரம், ஓய்வு, அடிப்படை சுதந்திரம் இவை அற்றவர்களாக அவர்களின் உரிமைகளை மீறும் அவலமான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.
- குழந்தைத் தொழிலாளர்களில் பத்துக்கு ஐந்து பேராவது அபாயகரமான சூழலில் வேலை செய்தல், அடிமைத்தனம் அல்லது கட்டாய உழைப்பு, போதைப்பொருள் கடத்தல், பாலியல் தொழில் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.



### மக்கள்தொகை அடிப்படையில்

- 2011-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, நம் நாட்டில் 5 முதல் 14 வயது வரை உள்ள 26 கோடி குழந்தைகளில், ஒரு கோடி பேர் குழந்தைத் தொழிலாளர்.
- உத்தரப்பிரதேசம், குழந்தைத் தொழிலாளர் மிகுந்த மாநிலமாக விளங்குகிறது.
- உத்தர பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய ஐந்து மாநிலங்களில் மொத்த குழந்தைத் தொழிலாளர்களில் ஐந்தில் ஒரு குழந்தை கட்டாயப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

### இந்தியாவில் குழந்தைத் தொழிளாளர்

- உழைக்கும் குழந்தைகளில் ஐந்தில் நான்கு பேர் (80%) இந்தியாவின் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர்.
- பெரும்பாலோர் விவசாயம், வீட்டு வேலை, பலசரக்குக் கடை, பெட்டிக்கடை என சிறு சிறு வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.
- இந்தியாவின் குழந்தைத் தொழிலாளர்களில் பத்தில் ஒருவர் குடும்ப நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



- 14 முதல் 17 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் சிலர் பெற்றோர்களுடன் தீப்பெட்டி தயாரித்தல், கல் உடைத்தல் சார்ந்த அபாயகரமான பணிகளில் ஈடுபடுத்தப்படுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.
- சிறுமிகளை விட (ஏறத்தாழ 88 லட்சம்) 4 மடங்கு சிறுவர்கள் (387 லட்சம்) அபாயகரமான வேலைகளைச் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

**2021**

- 'குழந்தைகளைக் காப்போம், இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்களுக்கு முடிவு கட்டுவோம்' என்பது குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நாள் முழக்கமாக ஒலித்தது.
- தீநுண்மிப் பரவல் கால பொது முடக்கத்தின் போது வறுமையுற்ற குடும்பங்களால் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கையும் அதிகரித்தது.
- சில நாடுகளில் வறுமையில் ஒரு சதவீத உயர்வு குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கையில் 0.7 சதவீத அதிகரிப்புக்கு வழிவகுத்ததாம்.
- குழந்தைகளின் உடல்நலப் பாதுகாப்பு மட்டுமல்ல, மனநலப் பாதுகாப்பும் முக்கியம்.

**தொழிலாளர்**

- நம் நாட்டில் பொழுதுபோக்குத் துறையில் உள்ள குழந்தைத் தொழிலாளர் சட்டங்கள், விளையாட்டு, திரைப்படம், விளம்பரத்துறை ஆகியவற்றை உள்ளடக்கியதல்ல.
- நடிகராகப் பணிபுரியும் அனைத்து சிறார்களுக்கும் மாவட்ட ஆட்சியரின் அனுமதி மட்டுமே போதுமாம்.

## குழந்தைகளின் பாதுகாப்பு புதிய சட்டம்

- குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான வரைவு வழிகாட்டுதல்களை தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (என்சிபிசிஆர்) வெளியிட்டுள்ளது.
- பொழுதுபோக்குத் துறையில் ஈடுபடும் குழந்தைகளின் பாதுகாப்புக்கு குறிப்பிட்ட விதிமுறைகளோ, கட்டுப்பாடுகளோ இல்லை.

**வழிகாட்டுதல்கள்**




- பொழுதுபோக்கு செயல்பாடுகள் தொடர்பான படப்பிடிப்புகளில் குழந்தைகள் கலந்து கொள்ளும் முன், அதற்கான அனுமதியை மாவட்ட ஆட்சியரிடம் இருந்து சம்பந்தப்பட்ட தயாரிப்பாளர் பெற வேண்டும்.
- படப்பிடிப்பின் போது எந்தவொரு குழந்தையும் துன்புறுத்தப்படாமல் இருக்க வேண்டும்.
- எந்தக் குழந்தையும் தொடர்ந்து 27 நாள்களுக்கு மேல் படப்பிடிப்பில் கலந்து கொள்ளக்கூடாது.
- ஒவ்வொரு நாளும் மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை குழந்தைகளுக்கு இடைவேளை அளிக்க வேண்டும்.
- கொத்தடிமை தொழில் முறை ஒழிப்புச் சட்டம் 1976-இன்படி, கொத்தடிமையாக எந்தவொரு சேவையையும் குழந்தைகள் அளிப்பதற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளக்கூடாது.
- படப்பிடிப்பால் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதை தயாரிப்பாளர் உறுதி செய்ய வேண்டும்.
- பள்ளிப் படிப்பை மேற்கொண்டு வரும் குழந்தைகள் படப்பிடிப்பால் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டால், அவர்கள் படிக்க வசதியாக தனியாக ஆசிரியர் ஒருவரை தயாரிப்பாளர் நியமிக்க வேண்டும்.
- திரைப்படம் அல்லது நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் குழந்தையின் வருவாயில் குறைந்தபட்சம் 20 சதவீதத்தை தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் நிலையான வைப்புத்தொகை கணக்கில் செலுத்த வேண்டும். அந்தத் தொகையை அக்குழந்தை 18 வயதைக் கடந்த பிறகு பெறும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- பொருத்தமில்லாத, அழுத்தம் தரக்கூடிய கதாபாத்திரம் அல்லது காட்சிகளில் குழந்தைகளை நடிக்க வைப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- பெரியவர்கள், குறிப்பாக எதிர்பாலினத்தைச் சேர்ந்தவர்களோடு குழந்தைகள் உடை மாற்றக்கூடாது. அவர்களின் உடைமாற்றும் அறையையும் குழந்தைகள் பயன்படுத்தக்கூடாது.
- சிறார்கள் மது அருந்துவது, புகைப்பிடிப்பது, குற்ற நடத்தையுடன் இருப்பது, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவது போன்று காட்சிப்படுத்தக்கூடாது.
- நிர்வாணக் காட்சிகளில் குழந்தைகளை நடிக்க வைக்கக்கூடாது.
- பாலியல் வன்கொடுமை, பாலியல் ரீதியான இதர துன்புறுத்தல்கள், ஆள்கடத்தல், போதைப் பொருள் பழக்கத்தால் பாதிக்கப்பட்ட சிறார்கள், திட்டமிடப்பட்ட குற்றங்கள், ஆயுத மோதல்களில் பயன்படுத்தப்பட்ட சிறார்கள் தொடர்பான நிகழ்ச்சிகளில், சம்பந்தப்பட்ட சிறார்களின் விவரங்களை, அவர்களின் வாழ்நாள் முழுவதும் கசியவிட மாட்டோம் என்று ஊடகமும் தயாரிப்பு நிறுவனங்களும் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
- இந்த வழிகாட்டுதல்கள் மீறப்பட்டால் அபராதம், சிறைத்தண்டனை உள்பட கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### முடிவுரை

- அரசுப் பள்ளிகளை தரம் உயர்த்துதல், எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி இவையே குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குவதற்கான வழிகள்.

## திருநங்கைகள் ஆய்வு - ஆவண மையம்

- திருநங்கைகளுக்கான ஆய்வு மற்றும் ஆவண மையம் இந்தியாவிலேயே முதன்முறையாக மதுரையில்தான் தொடங்கப்பட்டுள்ளது.
- திருநங்கை, திருநம்பி, எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களின் எழுத்துகளை நூல்களாக மாற்றுவது, திறமை உள்ள திருநம்பி மற்றும் திருநங்கைகளைக் கண்டறிந்து அவர்களுக்கான களத்தை அமைத்துக் கொடுப்பதற்காக இந்த ஆய்வு மற்றும் ஆவண மையம் திறக்கப்பட்டு உள்ளது.


SURESH

## புற்றுநோய் சிகிச்சையில் புதிய வெளிச்சம்

### அது என்ன 'டோஸ்டர்லிமாப்'? (Dostarimab)


- மலக்குடல் புற்றுநோய் சிகிச்சையில் புகுந்துள்ள ஒரு புதிய மருந்து, டோஸ்டர்லிமாப்.
- இது ஒற்றைப் படியாக்க எதிரணு மருந்து (Monoclonal antibody) வகையைச் சேர்ந்தது.
- செயல்முறையில் இந்த வகை பிரித்தால், இது ஒரு 'தணிக்கைத் தடுப்பான்' (Checkpoint inhibitor) வகை மருந்து.
- கருப்பையில் புற்றுநோய் (Endometrial cancer) உள்ளவர்களுக்கு இதை வழங்க அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிறுவனம் (FDA) ஏற்கனவே அனுமதி கொடுத்துள்ளது.

### புற்றுநோய் சிகிச்சையில் புதுமை




- நியூயார்க்கில் இருக்கும் மெமோரியல் ஸ்லோன் கெட்டரிங் புற்றுநோய் மையத்தில் (Memorial Sloan Kettering Cancer Center) மலத்துடன் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 12 பேருக்கு ஒரு சோதனை முயற்சியாக டோஸ்டர்லிமாப் மருந்து வழங்கப்பட்டது.
- அறுவை சிகிச்சை மற்றும் கதிர்வீச்சுச் சிகிச்சையைத் தொடர்ந்து குடலியக்கத்தில் பிரச்சனை வரும், மலத்தை அடக்க முடியாது; அது தானாகவே கழிந்துவிடும்; சிறுநீர்ப் பையில் பிரச்சினை வரும்; மலட்டுத்தன்மை ஏற்படும். ஆனால், இந்த மருந்தால் இம்மாதிரி எவ்விதப் பிரச்சினையும் ஏற்படவில்லை என்பது வியப்புக்குரிய ஒரு அம்சம்.

### இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?



- நம் தடுப்பாற்றல் மண்டலத்தில் 'டி' செல்கள் (T cells) இருக்கின்றன. இவைதான் புற்று செல்களைத் தாக்கி அழிக்கின்றன.
- இந்த இடத்தில் சில 'தணிக்கைப் புரதங்க'ளைத் (Checkpoint proteins) தெரிந்துகொள்ள வேண்டும். புற்று செல்களில் இருப்பது 'பி.டி-எல்.1' (PD-L1) புரதம், 'டி' செல்களில் இருப்பது 'பி.டி.- ஒன்' (PD-1) புரதம்.
- இந்த இரண்டும் இணைந்துவிட்டால் 'டி' செல்களால் புற்று செல்களை அழிக்க முடியாது. இந்தப் புரதங்களை இணையவிடாமல் தடுப்பவை சில மரபணுக்கள். இவற்றின் பலனால் புற்றுசெல்கள் திட்டமிட்டபடி இறந்து விடுகின்றன அல்லது அழிக்கப்படுகின்றன. இதற்குத் 'திட்டமிட்ட இறப்பு' (Programmed death-PD) என்பது மருத்துவ மொழி.
- 'பொருத்தமின்மையைச் செப்பனிட முடியாத குறைபாடு' (Mismatch Repair-Deficient) என்கின்றனர் மருத்துவர்கள். இந்தக் குறைபாடு இருக்கிற காரணத்தால், இவர்களுக்கு 'பி.டி-எல்1' புரதமும் 'பி.டி-ஒன்' புரதமும் எளிதில் இணைந்து விடுகின்றன.
- அப்போது புற்று செல்கள் உருமாறி நம் தடுப்பாற்றல் மண்டலத்தின் பார்வையிலிருந்து தப்பித்து விடுகின்றன. இதனால் டி செல்களால் புற்று செல்களை அழிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது.
- திட்டமிட்ட இறப்பும் நிகழ்வதில்லை; தொடர்ந்து புற்று செல்கள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இதைச் சரிசெய்கிறது டோஸ்டர்லிமாப் எப்படி?

### மருத்துவ அதிசயம்

- முதலில், இது 'பி.டி-எல்.1' புரதமும் 'பி.டி-ஒன்'. புரதமும் இணைவதைத் தடுத்து விடுகிறது. அடுத்து, புற்று செல்களின் உருமறைப்பைத் தோலுரித்துக் காட்டுகிறது.
- நம் தடுப்பாற்றல் மண்டலம் அந்தப் புற்று செல்களைக் கவனிக்கிறது. அவை நம் உடலுக்கு ஆகாதவை என்று அது கணிக்கிறது. அவற்றை அழிக்க 'டி' செல்களைத் துரிதப்படுத்தி அனுப்புகிறது.
- டி செல்கள் புற்று செல்களைத் தாக்கி அழித்து விடுகின்றன.
- டோஸ்டர்லிமாப் மருந்து நேரடியாகப் புற்று செல்களை அழிக்கவில்லை என்றாலும், சீரான மரபணுக்கள் செய்ய வேண்டிய வேலையை அது செய்ய வைக்கிறது.
- புற்று செல்களை இறக்க வைக்கிறது. புற்றுநோய் இருந்த இடம் தெரியாமல் காலியாகிறது. இதுதான் டோஸ்டர்லிமாப் செய்துள்ள ஒரு மருத்துவ அதிசயம்.
- இந்த ஆய்வை மேற்கொண்ட டாக்டர் லூயிஸ் ஆல்பெர்ட்டோ டையஸ் (Dr Luis Alberto Diaz).

## அக்னி பாதை திட்டம்

- ராணுவம், கடற்படை, விமானப் படையில் 4 ஆண்டுகள் சேவையாற்ற வகை செய்யும் அக்னி பாதை திட்டம்
- நிரந்தர சேவையில் பணியாற்ற மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமி, உத்தராகண்ட் தலைநகர் டேராடூனில் உள்ள இந்திய ராணுவ அகாடமி, பிஹாரின் கயாவில் உள்ள அதிகாரிகள் பயிற்சி அகாடமி ஆகியவற்றில் சேர வேண்டும்.
- இவற்றில் பயிற்சி பெறுகிறவர்கள் ராணுவத்தின் நிரந்தர சேவை அதிகாரிகளாக பணியாற்றலாம்.



- ராணுவத்தின் குறுகிய கால சேவையில் சேருபவர்கள் 10 ஆண்டுகள் முதல் 14 ஆண்டுகள் வரை பணியில் நீடிக்கலாம்.
- இந்திய பாதுகாப்புப் படைகள் முழுவதும் துடிப்பான இளைஞர்களால் நிறைந்திருக்கும். இதன்மூலம் இந்திய ராணுவம் மேலும் வலுவடையும்.
- அக்னி பாதை திட்டத்தில் வெளிப்படையான முறையில் தகுதியின் அடிப்படையில் ஆள்தேர்வு நடைபெறும். மிகச் சிறந்த வீரர்கள்


ராணுவத்தின் நிரந்தர பணியில் சேர்க்கப்படுவர்.

- புதிய திட்டத்தில் பணியில் சேருவோர், அக்னி வீரர்கள் என்று அழைக்கப்படுவர். அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் 4 ஆண்டுகள் சேவையாற்ற வேண்டும்.
- முதல் 6 மாதங்கள் வீரர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
- பாதுகாப்புப்படை வீரர்களுக்கு தற்போது வழங்கப்படும் பதக்கம், விருதுகள் அனைத்தும் அக்னி வீரர்களுக்கும் வழங்கப்படும்.
- பணிக்காலத்தில் ரூ.48 லட்சத்துக்கான ஆயுள் காப்பீடு வழங்கப்படும்.

> ○ ரஷ்யா, பிரேசிலில் 12 மாதங்கள் கட்டாய ராணுவ சேவை நடைமுறையில் உள்ளது.
>
> ○ இஸ்ரேலில் ஆண்கள் 30 மாதங்களும் பெண்கள் 22 மாதங்களும் கட்டாய ராணுவ சேவையாற்ற வேண்டும்.
>
> ○ தென்கொரியாவில் குறைந்தபட்சம் 21 மாதங்கள் ராணுவத்தில் பணியாற்றுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

- அக்னி வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதால் அவர்களுக்கு ஓய்வுதியம் வழங்கப்படாது.
- 4 ஆண்டுகள் பணி நிறைவுக்குப் பிறகு நிரந்தர பணிக்கு விண்ணப்பிக்கலாம். அவர்களின் திறன் அடிப்படையில் 25% னருக்கு மட்டுமே நிரந்தர பணி வழங்கப்படும். அவர்கள் 15 ஆண்டுகள் வரை பணியாற்றலாம்.
- அக்னி வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதால், அவர்களுக்கு ஓய்வூதியம் கிடையாது.
- பணிகாலங்களில் பங்களிப்பு இல்லாத ரூ.48 லட்சத்திற்கான ஆயுள் காப்பீடு வழங்கப்படும்.
- உயிரிழப்பு ஏற்பட்டால் கூடுதலாக ரூ.44 லட்சம் நிதி வழங்கப்படும்.

**அக்னிபாத் யோஜனா – ஊதியம்**




**தகுதி**

- 17.5 முதல் 21 வயதுடை இளைஞர்களும் இளம் பெண்களும் முப்படைகளில் சேரலாம்.

**துணை ராணுவத்தில் முன்னுரிமை**

- துணை ராணுவத்தில் சேருவதற்கு முன்னுரிமை தரப்படும் என்ற அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- நடப்பாண்டில் 46,000 அக்னி வீரர்கள் தேர்வு செய்யப்படுவர்.

**அக்னி வீரர்களுக்கு இளங்கலை பட்டம்**

- 3 ஆண்டு கால செயல்திறன்கள் அடிப்படையில் 50 சதவீத மதிப்பெண்கள் கணக்கிடப்படும். மீதி 50 சதவீத மதிப்பெண்கள் மொழிகள், பொருளாதாரம், வரலாறு, அரசியல், அறிவியல், பொது நிர்வாகம், சமூகவியல், கணிதம், கல்வி, வணிகவியல், சுற்றுலா, விவசாயம் உள்ளிட்ட பாடங்களில் இருந்து கணக்கிடப்படும்.

**அக்னிபாதை – 3 ஆண்டு பட்டப்படிப்பு**

- அக்னி பாதை திட்டத்தின் கீழ் முப்படைகளிலும் 4 ஆண்டு சேவையில் சேர்க்கப்படும் வீரர்களுக்கு, 3 ஆண்டு பட்டப்படிப்பை இந்திராகாந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக் கழகம் (இக்னோ) உருவாக்க உள்ளது.
- முதல் ஆண்டு படிப்புகளில் தேர்ச்சி பெற்றால் சான்றிதழ் வழங்கப்படும்.
- முதல் மற்றும் இரண்டாண்டு பாடங்களில் தேர்ச்சி பெற்றால் டிப்ளமோ வழங்கப்படும்.
- 3 ஆண்டு பாடங்கள் அனைத்திலும் தேர்ச்சி பெற்றால் பட்டப் படிப்புக்கான சான்றிதழ் வழங்கப்படும்.
- வீரர்கள் தங்கள் படிப்பை பாதியில் நிறுத்தினாலும், பின்னர் தொடர முடியும்.
- இந்த படிப்புகளுக்கு ஏஐசிடிஇ, என்சிவிஇடி மற்றும் யுஜிசி அங்கீகாரம் வழங்கும்.

- இந்த படைகளில் சேருவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம்பில், அக்னி பாதை வீரர்களுக்கு 3 ஆண்டுகள் தளர்வு வழங்கப்படும்.
- அக்னி பாதை திட்டத்தின் முதல் அணியினருக்கு மட்டும் 5 ஆண்டுகள் தளர்வு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடலோரப் படை

- அக்னி பாதை திட்ட வீரர்களுக்கு இந்திய கடலோரக் காவல் படை, பாதுகாப்புத் துறை அலுவலக பணிகளில் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும்.
- மத்திய பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் 16 பொதுத்துறை நிறுவனங்களுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும்.
- அக்னி பாதை திட்டத்தில் கடற்படையில் பணியாற்றும் வீரர்களுக்கு கப்பல்துறை சார்பில் 6 பிரிவுகளில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- 4 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் விடுவிக்கப்பட்டால், அவர்கள் உயர் கல்வியைத் தொடரலாம். புதிதாக தொழில் தொடங்கலாம்.

## என்னென்ன சலுகைகள்

- அக்னி வீரர்களுக்காக ஒன்றிய அரசும், பாஜக ஆளும் மாநிலங்களின் முதல்வர்களும் அறிவித்துள்ள சலுகைகள் வாக்குறுதிகள் வருமாறு :

| துறை | அமைச்சர் | சலுகை |
|---|---|---|
| ஒன்றிய உள்துறை | அமித்ஷா | துணை ராணுவ பணியில் 10% இடஒதுக்கீடு |
| பாதுகாப்பு துறை | ராஜ்நாத் சிங் | ராணுவ பணிகளில் 10% இடஒதுக்கீடு |
| நிதி அமைச்சகம் | நிர்மலா சீதாராமன் | தொழில் தொடங்க, உயர்கல்விக்கு கடன்வசதி |
| விமான | ஜோதிராதித்யா | வேலைவாய்ப்பில் |
| போக்குவரத்து | சிந்தியா | முன்னுரிமை |
| திறன் இந்தியா | தர்மேந்திர பிரதான் | திறன் இந்தியா சான்றிதழ் மூலம் தொழில் தொடங்க, பணியில் சேர பல்வேறு வாய்ப்புகள் |

## ஆண்டுக்கு ஒரு லட்சம் பேர் இலக்கு

- முதற்கட்டமாக இந்த ஆண்டு 46,000 அக்னி வீரர்களை சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- அடுத்த 4 ஆண்டுகளில் 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் வீரர்கள் அக்னி பாதை திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படுவார்கள்.
- அதைத் தொடர்ந்து அக்னி வீரர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஒரு லட்சமாக உயர்த்த ஒன்றிய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், முப்படைகளில் ஆள்சேர்ப்பதற்கான புதிய திட்டமான அக்னிபத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.
- இந்தத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையும் ஒப்புதல் வழங்கி விட்டது.

## கேவியட் மனு

- அக்னி பாதை திட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை விசாரிக்கும் போது, எங்களது தரப்புவாதங்களை கேட்காமல் எந்த உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது என ஒன்றிய அரசு உச்ச நீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளது.

## நாட்டிற்கு அத்தகைய திட்டத்தின் முக்கியத்துவம்

- எதிர்காலத்திற்கு தேவையான வீரர்கள் தயார்நிலையில் இருப்பர்.
- அதிக வேலைவாய்ப்பு
- அதிக திறன் கொண்ட பணியாளர்கள்.

## இத்திட்டத்தில் உள்ள சில குறைபாடுகள்

- மற்றொரு வேலையை தேடுவது கடினம்
- ஓய்வூதியம் கிடையாது
- பயிற்சி பெற்றது பயன்பெறாமல் போகும் நிலை உருவாகிறது.

## பெண்களுக்கு இடஒதுக்கீடு

- மத்திய அரசின் பல்வேறு துறைகளில் 40.78 லட்சம் பேர் பணியாற்ற வேண்டிய இடத்தில் 31.91 லட்சம் பேர்தான் பணியாற்றுகின்றனர் என்று மத்திய அரசின் செலவினத்துறை புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.
- அரசு சாரா தனியார் அமைப்பான இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (சிஎம்ஐஇ) வெளியிடும் வேலையின்மை, குறித்த புள்ளிவிவரம்
- இந்தியாவில் வேலையின்மை விகிதம் 6.57%- ஆக இருந்தது. கடந்த 2021, டிசம்பரில் வெளியான வேலையின்மை விகிதத்தோடு (7.91%) ஒப்பிடுகையில் இது குறைவுதான்.
- வேலையின்மை விகிதம் மிக அதிகம் உள்ள மாநிலங்களாக ஹரியானா (23.4%), ராஜஸ்தான் (18.9%), திரிபுரா (17.1%), ஜம்மு - காஷ்மீர் (15%), தில்லி (14.1%) ஆகியவை காணப்படுகின்றன.
- உலக வங்கியின் கணக்குப்படி இந்தியாவின் உழைக்கும் மக்கள் தொகையில் பெண்களின் பங்களிப்பு 19% மட்டுமே.

## 3 முறை மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சில் கூட்டம்

- மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சிலை அமைக்க அரசமைப்புச் சட்டம் 263 வகை செய்கிறது.
- பொதுநலன் சார்ந்த விவகாரங்களை விவாதிப்பதற்கான தளமாக இந்தக் கவுன்சில் விளங்குகிறது.
- மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசுக்கு இடையே எழும் மாறுபாடான விவகாரங்களை தீர்த்துக் கொள்வதற்கான பொதுத்தளம் இருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலேயே கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது.
- மாநிலங்களுக்கு இடையிலான நிரந்தர கவுன்சிலானது கடந்த 1990-ஆம் ஆண்டு மே 28-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.
- 5-ஆவது பிரிவின் அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சில் கூட்டத்தை ஆண்டுக்கு மூன்று முறை நடத்திட வேண்டும். ஆனால், கடந்த ஆறு ஆண்டுகளில் ஒரே ஒரு முறை - 2016
- மத்திய அரசின் செயல்பாடுகள், மாநிலங்களின் கொள்கைகள், சட்டங்கள் ஆகியன குறித்து மாநில முதல்வர்கள் தங்களது கருத்துகளைத் தெரிவிக்கும் பொதுவான மேடையாக கவுன்சில் அமைந்திட வேண்டும்.
- ஒன்று அல்லது பல மாநிலங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சட்ட மசோதாக்களை மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சிலில் முன் வைக்க வேண்டும். அதன் பிறகே நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
- பொதுநலன் சார்ந்த வியங்களில் மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே ஒரு திறன் வாய்ந்த தகவல் தொடர்புமுறை இருந்தாக வேண்டும்.
- பல மசோதாக்கள் எதிர்க்கட்சிகளின் கருத்துகள் கோரப்படாமலேயே அவை நடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதை பார்க்க முடிகிறது.

### 5 ஜி அலைக்கற்றை

- 4ஜி தொழில்நுட்ப சூழலியல், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட 5-ஆம் தலைமுறை சேவையை தற்போது வழிநடத்திச் செல்கிறது.
- இந்தியாவில் உள்ள 8 முன்னணி தொழில் நுட்ப நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ள ஜி சோதனைக் கருவி, 5 ஜி தொழில் நுட்ப சேவையின் தொடக்கத்தை துரிதப்படுத்துகிறது.
- 5ஜி சேவைகள், புதுயுக வணிகங்களை உருவாக்குவதற்கும், நிறுவனங்களுக்குக் கூடுதல் வருவாயை ஏற்படுத்தவும், புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களின பயன்பாட்டால் வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

**விமர்சனம்**

- நாடு தழுவிய அளவில் ஒரு முடிவினை எடுக்கும் போது அது குறித்து மாநிலங்களின் ஆலோசனைகளை உரிய முறையில் கேட்பதோ, அறிந்து கொள்வதோ இல்லை.
- இது பல தருணங்களில் மாநிலங்கள் மற்றும் மத்திய அரசுக்கு இடையே அமைதியின்மையையும், கோபத்தையும் ஏற்படுத்த வழிவகுக்கின்றன.
- மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சில் கூட்டத்தை அடிக்கடி கூட்டுவதால், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே ஒரு பாலத்தை கட்டமைக்க முடியும்.
- இதன்மூலம், நமது அரசமைப்புச் சட்டத்தின் முதுகெலும்பாகத் திகழும் கூட்டாட்சித் தத்துவம் வலுப்பெற்று செழுமையடையும்.

## கற்றல் இழப்பு

- ஆன்லைனில் படித்தது, மாணவர்களுக்கு பெரும் கற்றல் இழப்பை ஏற்படுத்தியது.
- 2021-ம் ஆண்டில் 1 முதல் 12 – ம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவர்களும், தேர்வு எழுதாமலேயே தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டனர்.
- 2022-ம் ஆண்டு பிப்ரவரி 1-ந் தேதிதான் நேரடி வகுப்புகள் தொடங்கப்பட்டன. தொடர்ந்து, அனைத்து மாணவர்களுக்கும் இறுதித் தேர்வும் நடந்தது.
- தமிழக மாணவர்களின் கற்றல் திறன், தேசிய சராசரியைவிட 4 புள்ளிகள் குறைந்திருப்பது, மிகுந்த அதிர்ச்சியை அளித்துள்ளது. 10-ம் வகுப்பு மாணவர்களின் ஆங்கிலத்திறனை தவிர மற்ற பாடங்களின் திறனும்,
- 3, 5, 8-ம் வகுப்பு மாணவர்களின் அனைத்து பாடங்களிலும் உள்ள திறனும், தேசிய சராசரியைவிட பெருமளவில் குறைந்துள்ளது.
- 10-ம் வகுப்பில் 2 சதவீத மாணவர்களே அறிவியல் பாடத்தில் சிறப்பான செயல்பாட்டை காட்டியிருக்கிறார்கள்.
- 8-ம் வகுப்பில் 90 சதவீத மாணவர்கள் கணக்குப் பாடத்தில் மிகவும் திறன் குறைந்தவர்களாக இருக்கிறார்கள்.

## மூத்த குடிமக்கள்

- உலகளவில் மனிதர்களின் சராசரி வயது 72.6 ஆக இருக்கும் நிலையில், இந்தியர்களின் சராசரி ஆயுட்காலம் அதற்கும் கீழாகத்தான் இருக்கிறது.



- சராசரி ஆயுட்காலம் நீடிக்கும்தோறும் ஓய்வூதியம், மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் பயன்கள் மூத்த குடிமக்களுக்குத் தடையின்றிக் கிடைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.
- பணிசார் புலம்பெயர்வுகள் அதிகரித்துள்ள இன்றைய காலகட்டம், முதியவர்களையும் அவர்களைப் பராமரிக்க வேண்டியஅடுத்த தலைமுறையையும் தனித்தனித் தீவாக ஆக்கியுள்ளது.
- மற்றொருவர் உதவியுடன் வாழ வேண்டியிருக்கும் முதியவர்களைப் பராமரிப்பதற்குப் பிரத்யேகமான ஓய்வு இல்லங்கள் பெரும் எண்ணிக்கையில் உருவாக்கப்பட வேண்டும்.
- முதுமையில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் உடல்நலக் குறைபாடுகளுக்குச் சிகிச்சைபெறும் வாய்ப்புகளும் எளிதாக்கப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை மத்திய-மாநில அரசுகள் எடுத்து வருகின்றன.
- 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 60 வயதைக் கடந்தவர்களின் தொகையானது சுமார் 10.38 கோடி.
- 2015-ல் 8% ஆக இருந்த முதியவர்களின் எண்ணிக்கை 2050-ல் 19% ஆக உயரவிருக்கிறது.

## பி.எம்.கிசான்




- ஆண்டுதோறும் சிறு, நடுத்தர விவசாயிகளுக்கு மானியமாக ரூ.6,000 வழங்கும் பி.எம்.கிசான் திட்டம்.
- 'சப்கா சாத் சப்கா விகாஸ்' (அனைவருடனும் அனைவரின் வளர்ச்சிக்காகவும்) என்கிற பிரதமர் மோடியின் கோத்தை உறுதிப்படுத்துவதாக அமைகிறது பி.எம். கிசான் என்று கூடச் சொல்லலாம்.
- மத ரீதியாகவோ, ஜாதி ரீதியாகவோ, மாநில ரீதியாகவோ எந்தவித வேறுபாடும் இல்லாமல் பி.எம்.கிசான் மானியத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.
- பி.எம்.கிசான் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் மூன்று தவணைகளில் தலா ரூ.2,000 வீதம் மொத்தம் ரூ,6,000 மத்திய அரசால் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.
- இத்திட்டத்தில், அரசு ஊழியர்கள், அவர்களின் குடும்பத்தினர், அரசு ஓய்வூதியதாரர்கள், வருமான வரி தாக்கல் செய்வோர், அரசியலில் பதவி வகிப்போர் ஆகியோர் பயனாளியாக முடியாது என விதிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது.
- ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டோருக்குத் தனித்தனியாக பட்டா இருந்தாலும், ஒரே குடும்ப அட்டையில் இடம் பெற்றிருந்தாலும் ஒருவர் மட்டுமே பயன்பெற முடியும் என்றும் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

## சிறைச் சீர்திருத்தம்

- 75-வது சுதந்திர தின விழாவையொட்டி மாநிலங்களிலும் ஒன்றிய பிரதேசங்களிலும் குறிப்பிட்ட சிலபிரிவுகளின் கீழாகச் சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்களுக்குத் தண்டனைக் காலத்தை குறைக்க மத்திய உள்துறை அமைச்சகம் வழிகாட்டும் நெறிமுறைகளை வழங்கியுள்ளது.



### எப்பொழுது

- சிறப்பு விதிவிலக்கான இந்தத் தண்டனைக் குறைப்பானது, 2022-ன் சுதந்திர தினம், 2023-ன் குடியரசு, சுதந்திர தினங்கள் என்று மூன்று கட்டங்களாகச் செய்யப்படவிருக்கின்றன.

### யாருக்கு?

- 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள், மூன்றாம் பாலினத்தவர்களும் 60 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் தங்களது மொத்தத் தண்டனைக் காலத்தில் பாதியை நிறைவு செய்திருந்தால் இந்தத் திட்டத்தின் கீழ் தண்டனைக் குறைப்பு வாய்ப்பைப் பெற முடியும்.
- 70% குறைபாடு கொண்ட மாற்றுத் திறனாளிகள் தங்களது தண்டனைக் காலத்தில் பாதியை நிறைவு செய்திருந்தால், அவர்களும் இந்தத் தண்டனைக் குறைப்பு வாய்ப்பைப் பெற முடியும்.
- கடுமையான உடல்நலப் பாதிப்புகளைக் கொண்டிருக்கும் சிறைவாசிகள், அவர்களது தண்டனைக் காலத்தில் மூன்றில் இரண்டு பங்கைக் கடந்திருந்தாலே தண்டனைக் குறைப்புக்குத் தகுதியானவர்கள் ஆவார்கள்.
- 18 - 21 வயதில் புரிந்த குற்றச் செயலுக்காகத் தண்டனையை அனுபவித்துவரும் சிறைவாசிகளின் மீது வேறெந்தக் குற்றச்சாட்டுகளும் இல்லாத நிலையில், அவர்களது தண்டனைக் காலமும் குறைக்கப்படும்.

### யாருக்கு கிடையாது?

- மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களோ, மரண தண்டனை விதிக்கப்பட்டு, அது ஆயுட்காலத் தண்டனையாகக் குறைக்கப்பட்டவர்களோ, மரண தண்டனை விதிக்கத்தக்க ஒரு குற்றச் செயலில் தண்டிக்கப்பட்டவர்களோ இந்தத் தண்டனைக் குறைப்பைப் பெற முடியாது.
- ஆயுட்காலத் தண்டனை விதிக்கப்பட்டவர்களும் பயங்கரவாதச் செயல்கள், வரதட்சணைக் கொலை, வல்லுறவு, கறுப்புப் பணம், போதைப் பொருட்கள் விநியோகம், ஊழல் உள்ளிட்ட கொடுங்குற்றங்களில் ஈடுபட்டவர்களின் தண்டனையும் குறைக்கப்பட மாட்டாது.

## புல்டோசர் (அ) நீதி

- புல்டோசர் இயக்கம் நில அபகரிப்பாளர்கள், ரௌடிகள் போன்ற பலரது வீடுகளைப் பதம் பார்த்தது. சிறையில் இருக்கும் பல மாஃபியாக்ளின் அபகரிப்பு சொத்துகள் புல்டோசர் மூலம் மீட்கப்பட்டன.
- பிரதாப்கர் என்ற பகுதியில் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டு ஒருவர் தலைமறைவானார். அவரது வீட்டின் முன் புல்டோசரைக் கொண்டு போய் நிறுத்தினர் காவல்துறையினர். 24 மணி நேரத்துக்குள் அவர் சரணடைந்தார்.
- ‘புல்டோசர் பாபா’ என்று அவரது ஆதரவாளர்களால் யோகி ஆதித்யநாத் அழைக்கப்பட்டதுடன், அவர் சென்ற இடங்களில் எல்லாம் அவருக்கு புல்டோசர் பொம்மை நினைவுப் பரிசாகவும் அளிக்கப்பட்டது.
- அனைத்து நடவடிக்கைகளும் சட்டப்படி இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களும் இந்த சமூகத்தின் ஓர் அங்கம். தங்கள் வாதங்களைத் தெரிவிக்க அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏ.எஸ்.போபண்ணா, விக்ரம் நாத் அடங்கிய அமர்வு தெரிவித்தது.
- ஓல்கா டெல்லிஸ் (எதிர்) பாம்பே முனிசிபல் கார்ப்பரேன் (1985) வழக்கில், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் முன்னர், நோட்டீஸ் வழங்கி, அவர்களது வாதத்தையும் கேட்க வேண்டும் என்றும், அரசுத் திட்டங்களின் கீழ் அவர்கள் மறுவாழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

## குடியரசுத்தலைவர் தேர்தல்

- குடியரசுத் தலைவர் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த திரவுபதி முர்மு வேட்பாளராகவும்
- எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளராக முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா போட்டியிட்டனர்.



### திரவுபதி முர்மு

- ஜார்கண்ட் மாநில முன்னாள் ஆளுநர் திரவுபதி முர்மு
- இப்பதவியை வகிக்கும் முதல் பழங்குடியினப் பெண்
- ஒடிசா மாநிலம் மயூர்பஞ்ச் மாவட்டம் பைதபோசி கிராமத்தில் 1958-ம் ஆண்டு ஜுன் 20-ம் தேதி பிறந்தார்.
- திரவுபதி முர்மு.சந்தால் என்ற பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்.
- 2015-ம் ஆண்டு மே 18-ம் தேதி ஜார்கண்ட் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

### யஷ்வந்த் சின்ஹா

- பீஹாரைச் சேர்ந்த 84 வயதான யஷ்வந்த் சின்ஹா, ஐஏஎஸ் அதிகாரியாக பணியாற்றியவர்.
- 2018-ல் பாஜகவில் இருந்து விலகி புதியகட்சி தொடங்கினார். 2021 மார்ச்சில் திரிணமூல் காங்கிரஸில் இணைந்தார்.

## குடியரசுத் தலைவர்கள்

### டாக்டர் ராஜேந்திர பிரசாத்

- 1950-இல் முதல் குடியரசுத் தலைவராகத் தேர்வு பெற்றார்.
- 1950- 62 - ஆம் வரை இரு முறை தொடர்ந்து பதவி வகித்தார்.
- 1930 - ல் உப்பு சத்தியாகிரகம் நடைபெற்றபோது, அதில் பங்கேற்று சிறை சென்றவர்.
- 1946 - இல் இடைக்கால அமைச்சரவை அமைக்கப்பட்டபோது, அதில் உணவு, வேளாண் துறை அமைச்சராகவும் இருந்தார்.
- அரசியலமைப்பை உருவாக்கும் குழுவுக்கு தலைவராகவும் இருந்தார்.
- 1962 - இல் ‘பாரத ரத்னா’ பட்டம் பெற்றார்.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

**டாக்டர். ராதாகிருஷ்ணன்**



- 1949-52-ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியனில் இந்தியத் தூதராக இருந்தார்.
- 1962-67-இல் குடியரசுத் தலைவராகவும் இருந்த இவர் தத்துவஞானி என புகழப்பட்டவர்.
- 'பாரத ரத்னா' விருதை முதன் முதலில் வழங்கத் தீர்மானித்த போது, 1954-ல் பெற்றவர் இவர்.

**டாக்டர். ஜாகீர் உசேன் (1967-69)**

- பதவியில் இருக்கும் போதே இறந்து விட்டார். 163-இல் இவருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது.
- குடியரசுத் தலைவர் பதவியில் அமர்ந்த முதல் இஸ்லாமியர் இவர்.

**வி.வி.கிரி**

- நான்காவது குடியரசுத் தலைவர் (1969-74). 1969-இல் தற்காலிகக் குடியரசுத் தலைவராக இருந்த பெருமையும் இவருக்கு உண்டு.
- ஆளும் காங்கிரஸ் கட்சி நிறுத்திய வேட்பாளரை எதிர்த்து, இந்திரா காந்தியால் நிறுத்தப்பட்ட கிரி வெற்றி பெற்றார்.
- இவர் எழுதிய 'மை லைப் அன்ட் டைம்ஸ்' என்ற நூல் மிகவும் பிரபலம்.

**பக்ருதின் அலி அகமது**

- 5-ஆவது குடியரசுத் தலைவரான இவர் (1974-77).
- அஸ்ஸாம் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தார்.
- பதவியில் இருக்கும்போதே காலமானார்.

**நீலம் சஞ்சீவ் ரெட்டி**

- 6-ஆவது குடியரசுத் தலைவர் (1977-82)
- இவர் காலத்தில் மொரார்ஜி தேசாய், சரண்சிங், இந்திராகாந்தி ஆகியோர் பிரதமராக இருந்தனர்.

SURESH'

**கியானி ஜெயில் சிங்**

- ஏழாவது குடியரசுத் தலைவர்
- முதல் சீக்கியர். 'கியானி' என்றால் முழுவதும் கற்றவர் என்று பொருள்.
- இவரது பதவிக்காலத்தில்தான் அமிர்தசரஸ் பொற்கோயிலில் ராணுவம் புகுந்தது.

**ஆர்.வெங்கட்ராமன்**

- எட்டாவது குடியரசுத் தலைவர் (1987-92)
- ராஜீவ்காந்தி, வி.பி.சிங், சந்திர சேகர், நரசிம்மராவ் என நான்கு பிரதமர்களைக் கண்டவர்

**சங்கர் தயாள் சர்மா**

- நாட்டின் 9-வது குடியரசுத் தலைவர் (1992-97)
- ஓமன் நாட்டுக்கு இவர் சென்றபோது, அந்த நாட்டு மன்னர் விமான நிலையத்துக்கு நேரடியாக வந்து இவருக்கு கைகொடுத்த வரவேற்ற அதிசயம் நிகழ்ந்தது.
- மன்னர் கூறிய காரணம், "**சங்கர் தயாள் சர்மாவின் மாணவன் நான்!**".

**கே.ஆர்.நாராயணன்**

- பத்தாவது குடியரசுத் தலைவரான இவர் (1997-2002).
- கேரள மாநிலத்தவர், பட்டியல் இனத்தைச் சேர்ந்த முதல் குடியரசுத் தலைவர்
- பிரதமர் ஜவஹர்லால் நேருவால் மிகச் '**சிறந்த தூதர்**' என பாராட்டு பெற்றவர்.

**டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம்**



- 11-ஆவது குடியரசுத் தலைவர் (2002-07)
- 1997-இல் 'பாரத ரத்னா' என்ற விருதைப் பெற்றார். ஏவுகணை, வாகனத் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஈடுபாடு காட்டியதால், ஏவுகணை நாயகன். எளிமையை விரும்பியதால் இவர், 'மக்கள் குடியரசுத் தலைவர்' என்ற செல்லப் பெயரையும் பெற்றார்.

**பிரதிபா பாட்டீல்**

- 12-ஆவது குடியரசுத் லைவர் (2007-12)
- அந்தப் பதவியை வகித்த முதல் பெண்.

**பிரணாப் முகர்ஜி**

- 13-ஆவது குடியரசுத் தலைவர் (2012-17)
- 1986-89-இல் 'ராஷ்டிரிய சமாஜவாதி காங்கிரஸ்' என்ற கட்சியைத் தொடங்கி, காங்கிரஸில் மீண்டும் இணைந்தார்.

**ராம்நாத் கோவிந்த்**

- 14-ஆவது குடியரசுத் தலைவர் (2017 முதல்)
- உத்திரப் பிரதேசத்தில் இருந்து தேர்வான முதல் நபர்

## பிரதமரின் வேட்பாளர்

- பிரதமரின் தேர்வுதான் வெற்றி பெறுகிறது என்பதுதான் வரலாறு.
- இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக ராஜாஜி இருக்க வேண்டும் என்று ஜவஹர்லால் நேரு விரும்பினார்.
- டாக்டர் ராஜேந்திர பிரசாத் குடியரசுத் தலைவராக வேண்டும் என்று ஏனைய வடநாட்டுக் கட்சித் தலைவர்கள் விரும்பினார்கள்.
- அதற்குப் பிறகு, நடந்த எல்லா குடியரசுத் தலைவர் தேர்தல்களிலும் பிரதமர் எடுக்கும் முடிவின்படிதான் வேட்பாளர் தேர்வின் வெற்றி உறுதிப்பட்டிருக்கிறது.
- 1969 – வி.வி. கிரியை, காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்த விரும்பினார் பிரதமர் இந்திராகாந்தி. காங்கிரஸ் தலைமையின் வேட்பாளராக சஞ்சீவரெட்டி தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மனசாட்சிப்படி வாக்களிக்க இந்திராகாந்தி வேண்டுகோள் விடுத்தார்.
- பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள், ஆளுநர்கள், நீதிபதிகள் எல்லோரும் அரசியல் சாசனத்தின் மீது நம்பிக்கையும், விசுவாசமும் உடையவர்களாக இருப்போம்.
- குடியரசுத் தலைவர் மட்டும்தான் சட்டத்தையும், அரசியல் சாசனத்தையும் பாதுகாப்பேன் என்று உறுதிமொழி எடுக்கிறார். அதனால்தான் குடியசுத்தலைவர் தேர்தல் முக்கியமானது.

## தேர்தல் ஆணையத்தின் பரிந்துரை

- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிடுவதை தடை செய்ய வேண்டும்.
- இல்லையெனில், ஒருவர் இரு தொகுதிகளில் போட்டியிட்டு, இரண்டிலும் வென்று, ஒரு தொகுதிக்கான பதவியை ராஜினாமா செய்து, இடைத்தேர்தல் வர காரணமாக இருந்தால், அந்த வேட்பாளருக்கு கணிசமான தொகையை அபராதமாக விதிக்க வேண்டும் அல்லது இடைத்தேர்தல் செலவை அவரை ஏற்கச் செய்ய வேண்டும்.
- லோக்சபா எம்.பி.,யாக பதவி வகிக்கும் ஒருவர், திடீரென மாநில அமைச்சராகவோ அல்லது முதல்வராகவோ, கட்சி தலைமையால் நியமிக்கப்படும்போது, அவர் ஆறு மாதங்களுக்குள் சட்டசபை உறுப்பினராக வேண்டும் என்பதால் எம்.பி., பதவியை ராஜினாமா செய்கிறார்.
- இதனால், அவர் எம்.பி.,யாக இருந்த தொகுதிக்கும், அவர் புதிதாக போட்டியிட உள்ள சட்டசபை தொகுதிக்கும், இடைத்தேர்தல் நடத்த வேண்டியுள்ளது; இது, தேர்தல் ஆணையத்திற்கு பணிச்சுமையையும் செலவையும் ஏற்படுத்துகிறது. இந்த வியங்களிலும் மாற்றங்கள் கொண்டு வர வேண்டியுள்ளது.

## முந்தைய பூகம்பங்கள்

- செப்.29 1991 : உத்தரக்கண்ட்டில் 7 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 2,000 பேர் பலி
- செப்.29 1993 : மஹாராஷ்டிராவில் 6.2 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 9,748 பேர் பலி
- ஜன.26, 2001 : குஜராத்தில் 7.7 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 20 ஆயிரம் பேர் பலி.

## ஆயுஷ் துறை

- இந்தியாவில் ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம், ஹோமியோபதி ஆகிய பாரம்பரிய மருத்துவ முறைகளை ஊக்குவிக்கும்பொருட்டு, கடந்த 2014-ம் ஆண்டில் மத்திய ஆயுஷ், சுகாதாரம், குடும்பநல அமைச்சகத்தால் 'தேசிய ஆயுஷ் இயக்கம்' (என்ஏஎம்) தொடங்கப்பட்டது.

### அடிப்படை நோக்கம்

- பொதுமக்களுக்கு குறைந்த செலவில் மருத்துவ சேவையாற்றுவது, கல்விமுறையை வலுப்படுத்துவது, மருந்துகளின் தரத்தை நிர்ணயிக்கப்பட்ட அளவில் நிலைப்படுத்துவது, மூலப்பொருள்களின் இருப்பு வீதத்தை உறுதிப்படுத்துவது ஆகியவையே இந்த இயக்கத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.
- தேசிய ஆயுஷ் இயக்கம் தொடங்கப்பட்ட 2014-ஆம் ஆண்டிலிருந்து 2020 வரை ஆறு ஆண்டுகாலத்தில் ஆயுஷ்துறை 17% வளர்ச்சி கண்டுள்ளது.
- 'ஆத்மநிர்பார் பாரத் அபியான்' (தற்சார்பு இந்தியா) திட்டத்தின்கீழ் மூலிகை சாகுபடியை ஊக்குவிப்பதற்காக ரூ.4,000 கோடி ஒதுக்கீடு செய்வதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்திருந்தது.

### பிஎஸ்எல்வி சி - 53

- ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆராய்ச்சி மையம்
- சிங்கப்பூர் நாட்டின் புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள்கள் அதில் இடம்பெற்றுள்ளன.
- முழுக்க, முழுக்க வர்த்தக நடவடிக்கைகளுக்கான திட்டமாக இதனை இஸ்ரோ முன்னெடுத்துள்ளது.
- இஸ்ரோ தலைவர் - சோமநாத்
- பிஎஸ்எல்வி சி-53 ராக்கெட் தாங்கிச் செல்லும் டி.எஸ்மீ-இஓ செயற்கைக்கோள், பூமியிலிருந்து 570 கி.மீ. உயரத்தில் சூரிய வட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படவுள்ளது.
- பிரேசில் நாட்டில் வடிவமைக்கப்பட்ட அந்த செயற்கைக்கோள், சிங்கப்பூரின் புவி கண்காணிப்பு, வேளாண், வனம் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இந்த செயற்கைக்கோள் அனைத்து பருவநிலைகளிலும் துல்லியமான படங்களை வழங்கும் திறன் கொண்டது.
- ஆந்திராவில் உள்ள ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து, மூன்று செயற்கைக்கோள்களை சுமந்தபடி, பி.எஸ்.எல்.வி., - சி53 ராக்கெட்டை விண்ணில் ஏவ, 'இஸ்ரோ' திட்டமிட்டுள்ளது.

### ISRO கவுன்ட் டவுன்

- இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பு, நாட்டின் பாதுகாப்பு, தொலை தொடர்பு, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட ஆய்வு பணிகளுக்கு, பி.எஸ்.எல்.வி., - ஜி.எஸ்.எல்.வி. வகை ராக்கெட் வாயிலாக செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தி வருகிறது.
- வணிக ரீதியாக வெளிநாடுகளின் செயற்கைக் கோள்களையும் விண்ணில் செலுத்துகிறது.
- ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து, சிங்கப்பூர் நாட்டிற்கு சொந்தமான, டி.எஸ்., - இ.ஓ., உட்பட மூன்று செயற்கைக் கோள்கள், பி.எஸ்.எல்.வி., - சி53 ராக்கெட் வாயிலாக விண்ணில் ஏவப்பட உள்ளது.

- இந்தியாவில் தேசிய மருத்துவ தாவர வாரியம் (என்எம்பிபி), ஆயுஷ் துறைக்குத் தேவையான மூலக்கூறுகளை மாநில மருத்துவ தாவர வாரியம் (எஸ்எம்பிபி) வாயிலாக விநியோகிக்கிறது. அந்த வகையில், மாநில மருத்துவ தாவர வாரியத்தின்

அடிப்படையை இன்னமும் வலுப்படுத்த வேண்டியது அவசியம்.

- நாட்டில் ஆயுஷ் அமைச்சகம் குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவையை ஒவ்வொரு மாநிலத்திலும் உறுதிப்படுத்துகிறது. நவீன மருத்துவ முறைக்கு நிகராக ஆயுஷ் மருத்துவமுறையும் வெற்றி பெறுவதற்கான திறன் அதனிடம் உள்ளது.
- ஆனாலும் பாரம்பரிய மருத்துவமுறையில் பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வு இல்லை. அரசு, விழிப்புணர்வு ஊட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

## மண் காப்போம்

- மண் காப்போம் இயக்கம், உலகெங்குமுள்ள மக்களை மண் ஆரோக்கியத்திற்காக ஒன்றுகூடி குரல்கொடுக்க ஊக்கப்படுத்துகிறது.
- மண் வெகு வேகமாக மலடாகி வருவதால் மண்ணில் கரிமச்சத்தும் நீர்ப்பிடிப்பு சத்தும் குறைந்துவிட்ட காரணத்தினால் இன்னும் 20 ஆண்டுகளில் உணவு உற்பத்தி 40% குறையும் என்று நிபுணர்களால் கணிக்கப்பட்டுள்ளது.
- பூமியின் மண்ணுக்கு புத்துயிரூட்டவில்லை என்றால், அது 85,000 கோடி டன் கரியமில வாயுவை காற்று மண்டலத்தி ற்குள் வெளியேற்றும்.
- இது கடந்த 30 ஆண்டுகளில் மனிதர்கள் வெளியேற்றியுள்ள அளவை விட அதிகமானது ஆகும். மண்வளம் அழிவதால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.
- உலகெங்கும் நிலவளம் அழிவதால் 74% ஏழை மக்கள் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர்.
- மக்கள்தொகை அதிகரிப்பும், உணவு பற்றாக்குறையும், தண்ணீர் பற்றாக்குறையும், 2050-ஆம் ஆண்டிற்குள், 100 கோடிக்கும் அதிகமான மக்களை வேறு பகுதிகளுக்கும் வேறு நாடுகளுக்கும் இடம்பெயரச் செய்யும்.
- மண்ணில் குறைந்து வரும் கரிமச்சத்தை மீட்கவும், மண்ணின் நீர்ப்பிடிப்பு தன்மையை அதிகரிக்கவும் குறைந்தது 3% முதல் 6% வரை கரிமச் சத்தை மீண்டும் மண்ணிற்கு கொண்டுவர வேண்டும்.
- நிலத்தைத் தாவர நிழலின் கீழ் கொண்டுவந்து, இலைதழைகளின் கழிவுகள் மற்றும் விலங்குகளின் கழிவுகளைச் சேர்க்க வேண்டும்.
- 1987-இல் தொடங்கி 197 நாடுகள் ஒன்று கூடி, சிஎஃப்சி மற்றும் ஓசோனை பாதிக்கக்கூடிய இதர ரசாயனங்களின் உற்பத்தி யை நிறுத்த மாண்ட்ரியல் புரோட்டோகால் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.

## சித்ரவதைகள்

- அமெரிக்க போலீஸாரால் தெருவில் சித்ரவதை செய்து கொல்லப்பட்டவர் கறுப்பினத்தவரான ஜார்ஜ் பிளாய்டு. 'என்னால் மூச்சுவிட முடியவில்லை' என்ற அவரது இறுதி முனகல், சித்ரவதையின் உச்சபட்சக் கொடூர சத்தம். இது போன்ற சத்தங்கள் உலக அளவில், ஏன் இந்தியாவிலும் பலவிதங்களில் கேட்டுக்கொண்டேதான் இருக்கின்றன.

### ஐ.நா. மனித உரிமைகள்

- சித்ரவதை என்பது மனித உரிமை மீறல்களின் கொடூரமான வடிவம்.
- இரண்டாம் உலகப்போரின் போது நிகழ்த்தப்பட்ட மனிதத் தன்மையற்ற செயல்களுக்குப் பின்னர் 1948-ல் ஐ.நா. உலகளாவிய பிரகடனம் ஒன்றை உருவாக்கியது.
- 'யாரும் சித்ரவதைக்கு உள்ளாக்கவோ அல்லது குரூரமான, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான முறையில் நடத்தப்படுவதோ அல்லது தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதோ கூடாது' என்று அப்பிரகடனத்தின் 5-வது பிரிவு கூறியது.
- 'ஐ.நா.வின் சித்ரவதைக்கு எதிரான உடன்படிக்கை-1984' சித்ரவதை என்பது ஒருவர் இன்னொரு நபரின் மீது உடல்ரீதி யாகவோ மனரீதியாகவோ கடுமையான வலியையோ கஷ்டத்தையோ உள்நோக்கத்துடன் ஏற்படுத்துவதாகும்.
- ஏதாவது பாகுபாட்டின் அடிப்படையில், பொது அதிகாரி அல்லது அதிகாரத்தில் உள்ள ஒருவரின் தூண்டுதல் மற்றும் சம்மதத்தி ன் பேரில் ஒரு தகவலையோ ஒப்புதல் வாக்குமூலத்தையோ பெறுவதற்காக ஒருவரை மிரட்டியோ நிர்ப்பந்தப்படுத்தியோ அவர் மீது வலியோ சிரமமோ திணிக்கப்படுவது சித்ரவதை என்றது அந்த உடன்படிக்கை.

- தமிழகத்தில் கடந்த ஆட்சியின்போது சாத்தான்குளம் காவல் நிலையத்தில் தந்தையும் மகனும் காவல் நிலையத்தில் இறந்த கொடூர சம்பவம் நிகழ்ந்தது.

**நீதிமன்றம் அறிவுரைகள்**

- 1996-ல் 'டி.கே.பாசு எதிர் மேற்கு வங்கம்' வழக்கில் ஒருவர் கைது செய்யப்படுதல், காவலில் வைக்கப்படுதல் போன்ற அனைத்துச் சூழல்களிலும் காவல்துறை பின்பற்ற வேண்டிய 11 வழிகாட்டுதல்கள் அறிவுறுத்தப்பட்டன.
- அதனை எந்தக் காவல் நிலையமும் கடைப்பிடித்து இல்லை என்பது தான் உண்மை.
- இந்தியாவில் சாதியப் படுகொலைகளும் தீண்டாமைக் கொடுமைகளும் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டேதான் இருக்கின்றன.
- இந்தியாவில் சித்ரவதையால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் சமூகத்தின் அடித்தட்டு மக்கள். அதிலும் குறிப்பாகக் குழந்தைகள், பெண்கள், பட்டியலினத்தவர்கள், பழங்குடியினர், மீனவர்கள், மதச்சிறுபான்மையினர், விளிம்புநிலை மக்கள் ஆகியவர்களாகவே உள்ளனர்.

**சித்ரவதைகள்**

- நிர்வாணப்படுத்துவது, காலின் உள்பாகத்தில் அடிப்பதற்காக லாடம் கட்டுவது, தொங்க விடுவது, கழிவுகள் கலக்கப்பட்ட நீரில் தலையை மூழ்க வைத்து, மூச்சைத் திணற வைப்பது, மிளகாய்த் தூளைப் பயன்படுத்துவது, சிகரெட், இரும்புக் கம்பிகளால் சூடு வைப்பது, அந்தரங்க உறுப்பு உள்ளிட்ட பகுதிகளில் மின்சாரத்தைப் பாய்ச்சுவது, நீண்ட நேரம் நிற்க வைப்பது, ஒற்றைக்காலில் நிற்க வைப்பது, காற்று புகாத சிறிய அறையில் அடைத்து வைப்பது, வன்புணர்வு செய்வது, பெண்களை இழிவான முறையில் தாக்குவது.
- அனைத்து அரசியல் கட்சிகளும் சித்ரவதை என்பது ஒரு சமூகக் குற்றம் என்று கருதி, அதைத் தடுக்க முன்வர வேண்டும். சித்ரவதைக்கு எதிரான அகில உலக ஐ.நா.பிரகடனத்தை அங்கீகரித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அதனால், எந்தச் சூழ்நிலையிலும் சித்ரவதையை இந்தியாவில் நியாயப்படுத்த முடியாது.

## நகர்ப்புற வளர்ச்சி

- உலகளாவிய நகர்ப்புற மக்கள் தொகையில் 11% இந்தியாவில் உள்ளது.
- 2027-ஆம் ஆண்டுக்குள் சீனாவைக் காட்டிலும் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா மாறும்.
- திட்டமிடப்படாத நகரமயமாக்கல் நமது நகரங்களில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.
- நகர்ப்புற திட்டமிடல் என்பது நகரங்கள், மக்கள் மற்றும் சுற்றுச்சூழலின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான அடித்தளமாகும்.
- 2005-14-ல் ஜவஹர் நேரு நகர்ப்புற புதுப்பிக்கத்தக்க பணியை (JNNURM) செயல்படுத்தப்படுவது உட்பட, விரைவான நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (அர்பன்) திட்டம் 2015 ஜுன் 25-ல் தொடங்கப்பட்டது. நகர்ப்புற வீட்டுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 2022-க்குள் தகுதியுள்ள நகர்ப்புற குடும்பங்களுக்கு வீட்டை உறுதி செய்வது.
- புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்துக்கான அடல் மின் திட்டம், ஒவ்வொரு வீட்டுக்கும் குழாய் மூலம் தண்ணீர் வழங்குவது மற்றும் கழிவுநீர் இணைப்பை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம்.
- அம்ருத் திட்டத்தின் முக்கியக் கூறுகள், திறன் மேம்பாடு, சீர்திருத்தம், தண்ணீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் கழிவுநீர் மேலாண்மை, வெள்ள வடிகால், நகர்ப்புற போக்குவரத்து மற்றும் பசுமையான இடங்கள் மற்றும் பூங்காக்களை மேம்படுத்துதல் ஆகும்.
- அம்ருத் 2.0 திட்டம் அக்டோபர் 2021-ல் தொடங்கப்பட்டது, தண்ணீர் பாதுகாப்பு மற்றும் அனைத்து வீடுகளுக்கும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கம்.
- 2021-22 முதல் 2025-26 வரையிலான காலத்துக்கு மத்திப் பாங்கான ரூ.76,760 கோடி உட்பட அம்ருத் 2.0-க்கான மொத்த செலவு 2,77,000 கோடி.
- 2014 அக்டோபர் 2-ம் தேதி, இந்தியாவை திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நாடாக மாற்றும் வகையில், நகர்ப்புறங்களில் ஸ்வச் பாரத் மின் திட்டம் தொடங்கப்பட்டது.

- தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா திட்டம் (தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) முக்கியமான மற்றொரு திட்டமாகும்.
- 2015 ஜுன் மாதம் ஸ்மார்ட் சிட்டி மின் தொடங்கப்பட்டது.
- இது நகர்ப்புற மறுமலர்ச்சிக்கான தொலைநோக்கு நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக உள்ளது. இந்தியாவில் நகர்ப்புறங்களில் வசிக்கும் 40 சதவீத மக்களின் விருப்பங்களை பூர்த்தி செய்தற்கான திட்டமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கருக்கலைப்பு செய்வதற்கு தடை

### இந்தியாவில் தினமும் 13 பெண்கள் உயிரிழப்பு

- பாதுகாப்பற்ற கருக்கலைப்புகளால் ஒவ்வொரு நாளும் 13 பெண்கள் இறக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 64 லட்சம் கர்ப்பங்கள் கலைக்கப்படுகின்றன.
- 2007 முதல் 2011-ம் ஆண்டில் இந்தியாவில் நடந்ததில் 67% கருக்கலைப்புகள் பாதுகாப்பற்றவை என வகைப்படுத்தப்பட்டு உள்ளன.

### இந்திய சட்டம்

- மருத்துவ கருக்கலைப்பு சட்டம் கடந்த 1971-ம் ஆண்டு கொண்டு வரப்பட்டு, காலத்திற்கு ஏற்ப சட்ட திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
- பெண்ணின் உடலுக்கு பெரியளவில் பாதிப்பு ஏற்படும் என்றாலே பாலியல் வன்கொடுமையின் விளைவாக ஏற்பட்ட கர்ப்பமாகவோ அல்லது திட்டமிடப்படாத கர்ப்பமாக இருந்தாலோ அல்லது கருவின் வளர்ச்சியில் குறைபாடுகள் இருந்தாலோ சட்டப்படியாக அதை கலைக்கலாம்.
- இதற்கு சம்பந்தப்பட்ட பெண் 18 வயதுக்கு மேற்பட்டவர் என்றால், அவருடைய ஒப்புதல் மட்டுமே போதும்.
- கணவரின் ஒப்புதல் கூட தேவையில்லை. அப்பெண் திருமணமாகாதவர் என்றாலும்கூட, சம்பந்தப்பட்ட துணையரின் ஒப்புதல் கட்டாயமில்லை. மைனர் எனில் அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதி தேவை.
- 12 முதல் 20 வாரங்களுக்குட்பட்ட கருவை கலைக்க வேண்டுமெனில், கருக்கலைப்பு சேவை வழங்குவதற்கென பதிவு பெற்ற மருத்துவர் ஒருவரின் அனுமதியை அப்பெண் பெற வேண்டும். பின் கருக்கலைப்பு செய்து கொள்ளலாம்.
- 20-24 வாரங்களான கரு என்றால், கருக்கலைப்பு சேவை வழங்குவதற்கென பதிவு பெற்ற 2 மருத்துவர்களின் ஆலோசனையை பெற்று கருக்கலைப்பு செய்யலாம்.
- இந்த கால இடைவெளியில் கருக்கலைப்பு செய்வது மருத்துவ ரீதியாக சற்று சவாலானது என்பதால் இதற்கு கூடுதல் கட்டுப்பாடுகளும், காரண விவரங்களும் கேட்கப்படலாம்.
- 24 வாரங்களுக்குப் பிறகு கருக்கலைப்பு செய்ய வேண்டுமென்றால் மாநில மருத்துவக் குழுவை கருவை கலைக்க விரும்பும் கர்ப்பிணிகள் அணுக வேண்டியிருக்கும்.
- பாலின அடிப்படையில் கருவை கலைப்பது, பிறரின் நிர்பந்தத்துக்காக கருக்கலைப்புக்கு உள்ளாவது, கர்ப்பம் சார்ந்த பயத்தின் காரணமாக கருக்கலைப்புக்கு முயல்வது போன்றவை சட்டத்துக்கு புறம்பானதாகும்.

### அமெரிக்காவில் கருக்கலைப்பு செய்வதற்கு தடை

- கருக்கலைப்பு என்பது உயிர் சம்பந்தப்பட்ட வியம்.
- மருத்துவ காரணங்களுடன் சட்டப்பூர்வமாக கருவை கலைக்கவும் சட்டங்கள் உள்ளன.
- 1973-ம் ஆண்டு ரோவெர்சஸ்வேட் வழக்கில், அமெரிக்க அரசியல் சாசனத்தின் 14-வது திருத்தத்தின்படி கர்ப்பிணிகள் கருக்கலைப்பு செய்வதற்கு உரிமை உள்ளது என அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- உச்சநீதிமன்றம் முதல் 3 மாதங்களில் கருவை கலைப்பதற்கான முழு உரிமையை பெண்களுக்கு வழங்கியது.
- 3-6 மாத கருவை கலைக்க சில கட்டுப்பாடுகளும் 6-9 மாத கருக்கலைப்பதற்கு தடையும் விதித்தன.
- மிசிசிபி மாகாண அரசு 2018-ல் கருக்கலைப்புக்கு தடை விதிக்க வகை செய்யும் சட்டத்தை இயற்றியது.
- இதன்படி 15 வாரங்களுக்குப் பிறகு கருக்கலைப்பு செய்ய முடியாது.

- கருக்கலைப்பு செய்வதற்கான உரிமை 50 ஆண்டுகளுக்குப் பிறகு ரத்து செய்யப்பட்டுள்ளது.
- கருக்கலைப்புக்கு தடை விதிப்பது குறித்து அந்தந்த மாகாண அரசுகளே முடிவு செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- முதல் மாகாணமாக மிசவுரி கருக்கலைப்புக்கு தடை விதித்துள்ளது.
- கருக்கலைப்பு உரிமையை அமெரிக்க உச்சநீதிமன்றம் ரத்து செய்திருப்பது பின்னோக்கி செல்வதற்கான மிகப்பெரிய நடவடிக்கை.

## சுகாதார கட்டமைப்பு

### தேசிய டயாலிசிஸ் திட்டம்

- 2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டிலிருந்து மலேரியாவை முற்றிலும் ஒழிக்க உறுதிபூண்டுள்ளோம்.
- பிரதமரின் தேசிய டயாலிசிஸ் திட்டத்தின் கீழ் ஒரே தேசம் ஒரே டயாலிசிஸ் திட்டத்தை பிரதமர் விரைவில் தொடங்கி வைப்பார்.
- டயாலிசிஸ் தேவை ஏற்படும் நோயாளி, நாட்டின் எந்த ஒரு பகுதியிலிருந்தும் அந்த வசதியைப் பெற முடியும்.
- ஆயுஷ்மான் பாரத் – சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் திட்டத்தின் கீழ் 2022, டிசம்பருக்குள் 9,135 சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 5 டிரில்லியன் டாலர் - பொருளாதார இலக்கு

- 2025-ம் ஆண்டுக்குள் 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டுவதே இந்தியாவின் இலக்கு என்று 2019-ம் ஆண்டு சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி உரக்க அறிவித்தார்.
- முதல் டிரில்லியன் டாலரை 2007-ம் ஆண்டிலும் இரண்டாவது டிரில்லியன் டாலரை ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு 2014-ம் ஆண்டிலும் தொட்டது. மூன்றாவது டிரில்லியனை எட்டாண்டுகள் கழித்து 2022-ம் ஆண்டில் தொட்டிருக்கிறது.
- (ஐஎம்எஃப்) கணிப்பின்படியும் இந்தியா 5 டிரில்லியன் பொருளாதாரத்தை 2027-ம் ஆண்டில்தான் எட்ட முடியும் எனத் தெரியவந்திருக்கிறது.

### வேளாண்துறை

- வேளாண்துறையின் பங்கு சுமார் 400 பில்லியன் டாலராகும். இந்தியா 5 டிரில்லியன் பொருளாதாரமாக மாற்ற வேண்டுமெனில் வேளாண்துறையின் பங்களிப்பு இப்போது இருக்கும் அளவைப் போல் இரண்டு மடங்காக உயர வேண்டும். 2021-22 நிதி ஆண்டில் வேளாண் துறைக்கான கடன் தொகை ரூ.16 லட்சத்து 50 ஆயிரம் கோடி என நிர்ணயிக்கப்பட்டது.
- 'ஆத்மநிர்பார் பாரத் அபியான்' திட்டத்தின் கீழ் 2.5 கோடி விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.2 லட்சம் கோடி அறிவிக்கப்பட்டது.

### தொழில்துறை

- நடுத்தர வருமான நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நாட்டின் ஜிடிபியில் உற்பத்தித் துறையின் பங்களிப்பு குறைவாகும்.
- மத்திய அரசு உற்பத்தியோடு இணைக்கப்பட்ட ஊக்கத்திட்டத்தை (Production Linked Incentive - PLI) அறிவித்திருக்கிறது. இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை சுமார் ரூ.3 லட்சம் கோடி ஆகும்.
- குறு, சிறு, நடுத்தர வணிகத் துறையின் கீழ் சுமார் 6 கோடி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ஜிடிபியில் இதன் பங்களிப்பு முக்கியமாக இருப்பதோடு வேலை வாய்ப்பிலும் மிகவும் முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

### ஏற்றுமதித்துறை

- வெளிநாட்டு முதலீட்டாளர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பதோடு சுமார் 80 பில்லியன் டாலரை கடந்த ஆண்டு ஈர்த்திருக்கிறது. கடந்த நிதியாண்டில் ஏற்றுமதியும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 676.2 பில்லியன் டாலர் என்கிற அளவை எட்டியது. சேவை ஏற்றுமதி மட்டும் சுமார் 254 பில்லியன் டாலர் ஆகும்.

### உள்கட்டமைப்பு

- இந்தியா 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எட்ட வேண்டுமெனில் சுமார் 1.4 டிரில்லியன் டாலர் அளவுக்கு உள்கட்டமைப்பில் செலவிட வேண்டும் என்று 2021-22 நிதி ஆண்டின் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
- 2020 முதல் 2025-ம் ஆண்டு வரை 1.5 டிரில்லியன் டாலர் செலவிட திட்டமிடப்பட்டிருக்கிறது.
- அதிக மூலதனம் அதிக வளர்ச்சியையும் அதிக வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.

### கதி உள்கட்டமைப்புத் திட்டம்

- இந்தியாவின் 75-வது சுதந்திர நாளன்று பிரதமர் ரூ.100 லட்சம் கோடி மதிப்புள்ள 'கதி சக்தி' உள்கட்டமைப்புத் திட்டத்தை அறிவித்தார்.
- தேசிய நெடுஞ்சாலை இணைப்பை சுமார் 2,00,000 கிலோ மீட்டர் அளவுக்கு அதிகரிப்பது
- எரிவாயு குழாய் இணைப்பை 35,000 கிலோ மீட்டர் அளவுக்கு அதிகரிப்பது
- 200-க்கும் மேற்பட்ட விமான நிலையங்கள், ஹெலிகாப்டர் தளங்கள், அனைத்துக் கிராமங்களுக்கும் 4ஜி இணைய வசதி கிடைக்கச் செய்வது
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலை 87.7 கிலோவாட்டிலிருந்து 225 கிலோவாட்டுக்கு அதிகரிப்பது உள்ளிட்ட திட்டங்கள் இதில் அடங்கும்.

### பருவநிலை மாற்றம்

- 2030 ஆம் ஆண்டுக்குள் சுமார் 500ஜிகாவாட் அளவுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நிறுவுவது என இந்தியா ஏற்கனவே திட்டமிட்டு செயலாற்றி வருகிறது.
- திட்டங்களுக்குச் செலவிடுவது பல லட்சம் கோடிகளாக இருந்தாலும் அதை ஒழுங்காக செயல்படுத்தாமல் இருந்தாலோ அல்லது அரசின் அரசியல் கொள்கைகள் சமூகத்தில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தினாலோ 5 டிரில்லியன் இலக்கு 2027-ம் ஆண்டுக்குப் பிறகும் வெறும் ஆவணமாக பதிவேட்டில்தான் இருக்கும்.

SURESH'

## பேச்சு சுதந்திரம்

- மக்களின் பேச்சு சுதந்திரத்தைக் காப்பதற்கு முக்கியத்துவம் அளிக்க ஜி7 மாநாட்டில் உறுதி.
- உலகின் பெரும் பணக்கார நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், கனடா, ஜப்பான் ஆகிய-வற்றைக் கொண்ட ஜி7 கூட்டமைப்பின் மாநாடு ஜெர்மனியில் நடைபெற்றது.
- மாநாட்டில் இந்தியா, தென்னாப்பிரிக்கா, இந்தோனேசியா, அர்ஜென்டீனா, செனகல் ஆகிய நாடுகள் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றன.

### முக்கியத்துவம்

- மக்களின் பேச்சு சுதந்திரத்தைக் காக்க முக்கியத்துவம் அளிக்கப்படும். பொது விவாதம், பன்முகத்தன்மை கொண்ட ஊடகம், தகவல்கள் தடையின்றி எளிதில் அனைவருக்கும் சென்றடைதல், வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துதல் உள்ளிட்டவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். அமைதிவழிப் போராட்டங்களுக்கு மதிப்பளிக்கப்படும்.
- இணையவெளியில் பதிவிடப்படும் கருத்துகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- மனித உரிமைகளைக் காப்பதற்கான திட்டங்கள் திறம்படச் செயல்படுத்தப்படும்.
- அமைதி, மனித உரிமைகள், சட்டத்தின் அடிப்படையிலான நிர்வாகம், பாலின சமத்துவம் உள்ளிட்டவற்றுக்கு முக்கித்துவம்
- அமைதி வழியில் தீர்வு காணவும், மற்ற நாடுகளுக்கு எதிராகப் படைகளைப் பயன்படுத்தக்கூடாது எனவும் உறுதியேற்கப்பட்டுள்ளது.

### உணவு பாதுகாப்பு

- சர்வதேச அளவில் உணவு பாதுகாப்பு சூழலை வலுப்படுத்துவதற்காக சுமார் ரூ.33,000 கோடியை செலவிட ஜி7 நாடுகள் முடிவெடுத்துள்ளது.
- உணவு பாதுகாப்பின்மை, ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகியவை அதிகமாக உள்ள 47 நாடுகளில் இத்தொகை செலவிடப்படும்.

## கைவிடப்பட்ட 46 அகதிகள்

- அமெரிக்காவில் கைவிடப்பட்ட நிலையில் மூடிய லாரியிலிருந்து 46 அகதிகளின் சடலங்கள் மீட்கப்பட்டன.
- லாரிக்குள்ளிருந்த சிறுவர்கள் உள்ளிட்ட 16 பேர் வெப்பம் தொடர்பான உடல்நலக் குறைவுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.
- மெக்ஸிகோவிலிருந்து சட்டவிரோதக் கும்பலால் லாரிமூலம் அவர்கள் ஆபத்தான முறையில் கடத்தி வரப்பட்டபோது இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாக தகவல்
- போர் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து மெக்ஸிகோ வழியாக அமெரிக்காவுக்கு அடைக்கலம் தேடி வருவோரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு, அவர்களை சரக்கு வாகனங்களில் சட்டவிரோதக் கும்பல் கடத்தி வரும் சம்பவம்
- சட்டவிரோத அகதிகள் கடத்தலுக்கு தெற்கு டெக்ஸாஸ் மாகாண எல்லை அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- வெப்ப வாதம், உடலில் நீர்வற்றிப் போதல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## ஜிஎஸ்டி இழப்பீடு

- மாநிலங்களுக்கான ஜிஎஸ்டி இழப்பீடு விடுவிக்கும் முறையை மத்திய அரசு மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டுமென மாநில அரசுகள் கோரிக்கை விடுத்துள்ளன.
- நாடு முழுவதும் சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) கடந்த 2017 ஜுலை 1-இல் நடைமுறைக்கு வந்தது.
- ஆடம்பரப் பொருள்களின் மீது விதிக்கப்படும் செஸ் வரி முழுவதுமான மாநிலங்களுக்கு மத்திய அரசால் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

### GST புதிய வரிவிதிப்பு

- முத்திரையிடப்படாமல் பொட்டலமிட்டு, விற்பனை செய்யப்படும் கோதுமை, இறைச்சி, மீன், தயிர், பன்னீர், தேன் உள்ளிட்ட சில வகை உணவுப் பொருள்களுக்கு 5% வரி விதிக்க ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்தது.
- வங்கிக் காசோலைகளுக்கும் ஜிஎஸ்டி விதிக்கப்படவுள்ளது.
- காசோலைகளுக்கு வங்கி விதிக்கும் கட்டணத்தில் 18%, அட்லஸ் வரைபடம், விளக்கப்படங்களுக்கு 12% ஜிஎஸ்டி விதிக்க முடிவெடுக்கப்பட்டது.
- பொட்டலமிடப்படாத, முத்திரையற்ற பொருள்களுக்கு ஜிஎஸ்டி விலக்கு நீடிக்கும்.
- ஹோட்டல்களில் ரூ.1,000-க்கும் குறைவான அறைகளின் வாடகையில் 12 சதவீதம் ஜிஎஸ்டி விதிக்க முடிவு
- ஜிஎஸ்டி கவுன்சில் எடுக்கும் முடிவுகளை மாநில அரசுகள் அப்படியே ஏற்க வேண்டும் என்ற அவசியமில்லை; மாநிலங்களின் ஒப்புதலின் அடிப்படையிலேயே ஜிஎஸ்டி கவுன்சில் முடிவு எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.

## சொகுசு விடுதி அரசியல்

### பிள்ளையார் சுழி

- தேசிய லோக் தளம் கட்சியின் தேவிலால்தான். 1982ல் அரியானாவில் ஆட்சி அமைக்க எம்.எல்.ஏ.க்களை டெல்லியில் உள்ள ஓட்டலில் தங்க வைத்து, இந்த புதுவித அரசியலை தொடங்கி வைத்தார்.

## ரிசார்ட்களுக்கு செல்வது ஏன்?


- வெளி உலகத்தில் இருந்து எம்எல்ஏ-க்களின் தொடர்பை முற்றிலும் துண்டிக்கும் பாதுகாப்பு அரண்களாக சொகுசு விடுதிகள், ஓட்டல்கள் திகழ்கின்றன.
- இங்கு, எந்த எம்எல்ஏக்களும் செல்போனை பயன்படுத்த விடாமல் செய்ய முடியும்.
- தகவல் தொடர்பை முற்றிலும் துண்டிக்கலாம்.
- அனுமதி இல்லாமல் யாரும் உள்ளே நுழைய முடியாது.
- அனைத்து பொழுதுபோக்கு அம்சங்களும் கிடைத்து விடும்.
- எத்தனை நாள் ஆனாலும் தங்குவதற்கு, சாப்பிடுவதற்கான சகல வசதிகளையும் சொகுசு விடுதிகள் கொண்டுள்ளன.
- எம்எல்ஏ-க்களை பாதுகாப்பதற்கு வேறெந்த இடத்தையும் விட சொகுசு விடுதிகளும், சொகுசு ஓட்டல்களும்தான் ஆட்சி கவிழ்ப்பு சாணக்கியர்களுக்கு பாதுகாப்பான இடங்களாக உள்ளன.

## கட்சித்தாவல் தடை சட்டம் சொல்வது

- கடந்த 1985-க்கு முன்பு வரையில், கட்சித்தாவும் எம்எல்ஏ-க்கள், எம்.பிக்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு எந்தவொரு கிடுக்கிப்புடி சட்டமும் கிடையாது. அதனால்தான், இஷ்டம் போல் கட்சித் தாவினர்.
- 1985-ம் ஆண்டுதான் கட்சித்தாவல் தடை சட்டம் கொண்டு வரப்பட்டது.
- பத்தாவது அட்டவணை - 52வது திருத்தச் சட்டம், 1985 மூலம், ஒரு கட்சியில் இருந்து மற்றொரு கட்சிக்கு தாவியவர்களை தகுதி நீக்கம் செய்வதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு உள்ளன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி,. எம்எல்ஏ. தானாக முன்வந்து பதவியை துறந்தால் தகுதி நீக்கம் செய்யலாம்.
- கட்சி கொறடா உத்தரவை மீறி சபையில் கட்சி மாறி வாக்களித்தால் அல்லது வாக்களிக்காமல் இருந்தால் தகுதி நீக்கம் செய்யலாம்.
- சுயேச்சையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ஒரு அரசியல் கட்சியில் இணைந்த பிறகு மீண்டும் கட்சித் தாவினால் அவரை தகுதி நீக்கம் செய்யலாம்.
- கட்சியின் 3ல் 2 பங்கு எம்எல்ஏ.க்கள், எம்பி.க்கள் கட்சி மாறினாலோ, தனி அணியாக செயல்பட்டாலோ அவர்களின் மீது கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது.

## ஆயா ராம் கயா ராம்

- கட்சி தாவுதலும், அதிருப்தியாளராக மாறுவதும்தான் சொகுசு விடுதி அரசியலுக்கு முக்கிய காரணமாகும்.
- கட்சித் தாவுவதற்கு வடமாநில அரசியலில் ஆயா ராம் காயா ராம்
- 1960-களில் சுயேச்சைகளை வெற்றி பெற்றதும், ஏதேனும் ஒரு அரசியல் கட்சியில் சேர்வது வழக்கமாக இருந்தது.
- 1967ம் ஆண்டு அரியானாவில் முதன் முறையாக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றதில் இருந்து இந்த 'ஆயா ராம் கயா ராம்' கதை தொடங்குகிறது.



- கயா லால் என்ற சுயேச்சை வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற்று எம்எல்ஏ ஆனார். வெற்றி பெற்ற சில மணி நேரங்களில், அவர் காங்கிரசில் இணைந்தார்.
- அடுத்த சில மணி நேரங்களுக்குப் பிறகு ஐக்கிய முன்னணி கூட்டணியில் இணைந்தார். அது அத்துடன் முடியவில்லை. மாலைக்குள் கயா லால் மீண்டும் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.
- 9 மணி நேரத்தில் மூன்று முறை கட்சி தாவினார்.
- ஆயா ராம் காயா ராம் (வந்தாரு, போனாரு) - அடிக்கடி கட்சி தாவும் தலைவர்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## பழங்குடியினர் உயர்கல்வி

- உயர் கல்வி மாணவர் சேர்க்கையில் இந்தியச் சராசரியைவிட தமிழ்நாடு இரண்டு மடங்கு உயர்ந்து நிற்கிறது.
- 6 வயது முதல் 17 வயது வரையுள்ள பள்ளி செல்லாப் பழங்குடிக் குழந்தைகளின் விகிதம் 15.9 என்கிறது சமீபத்தில் தேசியக் குடும்ப நலக் கணக்கெடுப்பு.
- தமிழகப் பழங்குடி மக்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய இரண்டிலும் 1% இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.
- 575 பேர் வாழும் கரூர் மாவட்டத்தில் படிக்கும் பழங்குடி மாணவர்களுக்கு இடஒதுக்கீடு ஒரு சதவீதம் . 4%க்கு மேல் இருக்கும் தருமபுரி, நீலகிரி போன்ற மாவட்டங்களுக்கும் அதே ஒரு சதவீத ஒதுக்கீடுதான். பழங்குடிகள் அதிகமாக வாழும் மாவட்டங்களில், மாணவர் சேர்க்கை ஒதுக்கீட்டு அளவிற்கு மேலாகவோ, அல்லது இடம் கிடைக்கவில்லை என்பதற்காக வேறு மாவட்டத்திற்கோ பெரிவாரியான பழங்குடிகள் செல்லமாட்டார்கள்.
- ஒரு மாவட்டத்தில் பழங்குடி மாணவர்கள் சேர இடமில்லை. மற்றொரு மாவட்டத்தில் சேர ஆளில்லை.
- பழங்குடி மக்களின் வேலைவாய்ப்புக்கான இட ஒதுக்கீடு போலன்றி, உயர் கல்விச் சேர்க்கை இடஒதுக்கீட்டை மாவட்டம் அல்லது மண்டல வாரியாக மறுபங்கீடு செய்ய வேண்டும்.
- 50 அல்லது அதற்கு மேல் மாணவர் சேர்க்கை உள்ள இடங்களுக்கு மட்டுமே இந்த ஒரு சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- அநீதியைக் களைந்து 50 இடங்களுக்குக் கீழே உள்ள பாடப்பிரிவுகளிலும் பழங்குடி மாணவர்கள் சேர்ந்து பயன்பெறத் தக்க வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

## தலைமைச் செயலாளர்கள் மாநாடு

- இமாச்சல பிரதேசத்தின் தர்மசாலா
- வரும் 2047-ம் ஆண்டில் நட்டின் 100-வது சுதந்திர தினம் கொண்டாடப்பட உள்ளது. இதற்கான தொலைநோக்குத் திட்டங்கள் மாநாட்டில் வரையறுக்கப்பட உள்ளது.



- தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது, நகர்ப்புற நிர்வாகம், பயிர், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவை எட்டுவது
- தொழில் தொடங்க ஏதுவான சூழல்
- அரசின் திட்டங்கள் கடைகோடி மக்களுக்கும் சென்றடைவதை உறுதி செய்வது.
- பிரதமரின் விரைவு சக்தி திட்டத்தின் மூலம் நாட்டின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவது.
- பின்தங்கிய மாவட்டங்களை முன்னேற்றுவது.
- மத்திய-மாநில அரசுகளுக்கான உறவை வலுப்படுத்துவது குறித்தும் மாநாட்டில் ஆலோசனை நடத்தப்படுகிறது.

SURESH'

TNPSC SCERT STUDY MATERIALS - DEGREE STANDARD (Tamil & English)




Set of Books

இனி சுரேஷ் புத்தகங்களுக்கு தபால் கட்டணம் முற்றிலும் இலவசம்

For Online Book purchase... www.sureshiasacademy.in

95002 39220
73392 21133

# 02 மாநில நிகழ்வுகள்

## இல்லம் தேடிக் கல்வி




- ஒடிசாவில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை குழந்தைகளின் வீட்டு மொழியில் (அவரவர் பழங்குடி மொழியில்) கற்றல், கற்பித்தலைத் தொடங்கி, மாநிலப் பாட மொழிக்குச் சென்றனர்.
- இதன் விளைவாகப் பழங்குடிக் குழந்தைகளுக்குப் பாடங்களில் கற்றல் ஆர்வம் அதிகரிப்பதைக் கண்டனர். கற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் உத்வேகமும் பெற்றதை அறிந்தனர்.
- தமிழ்நாட்டில் மொத்தம் 36 வகையான பழங்குடிகள் உள்ளனர்.
- ஒவ்வொரு மாநிலமும் அந்த மாநிலத்தில் வாழும் குழந்தைகளின் தாய்மொழியில் கற்பிப்பதற்குப் போதுமான வசதியைச் செய்துதர வேண்டும் என்கிறது அரசமைப்பின் கூறு 350 ஏ.
- பழங்குடி மக்களின் மொழிகளுக்கு எழுத்து வடிவம் இல்லை என்பதற்காக அவற்றைத் தாய்மொழி இல்லை என்று கூறிவிட முடியாது.

## தமிழக மாநில கல்விக் கொள்கை

### 13 பேர் குழு



- மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து தனியாக மாநில கல்விக் கொள்கையை உருவாக்கும்.
- குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதி டி.முருகேசன் நியமிக்கப்பட்டார்.
- நாடு முழுவதும் ஒரே சீரான கல்வி வளர்ச்சியை ஏற்படுத்திட, இந்த புதிய கல்விக் கொள்கை உதவும்.
- தேசிய அளவில் பாடத்திட்டங்களை வரையறுப்பதற்கு, தரமான பாடத்திட்டங்களை உருவாக்குவதற்கு, அனைவரும் உதவிட வேண்டும்.
- பள்ளிக் கல்வியே, மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்கு அடிப்டையாகும்.

## கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம்

- தமிழகத்தில் 5 ஆண்டுகளில் எல்லா கிராமங்களும் தன்னிறைவு அடையும்.
- வேளாண்மை உழவர் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை, விதைச்சான்றுத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை, கூட்டுறவுத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, உணவு மற்றும் நுகர்வோர் வாணிப கழகத்துறை, மீன்வளத்துறை, பால்வளத்துறை, நீர்வள ஆதாரத்துறை, எரிசக்தி துறை ஆகிய 13 துறைகளை ஒருங்கிணைத்து செயல் படுத்துவது கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளண்மை வளர்ச்சித் திட்டமாகும்.
- அனைத்து கிராமங்களும் ஒட்டு மொத்த வளர்ச்சியடைந்து தன்னிறைவு பெற்ற கிராமங்களாக மாற வேண்டும்.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- தரிசு நிலங்களை விவசாயத்திற்கு கொண்டு வந்து விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கச் செய்வதும், பொருளாதாரம் மேம்பட செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## அனைத்தும் சாத்தியம்

- தென்னிந்தியாவில் முதல்முறையாக, சென்னை காமராஜர் சாலையில் உள்ள மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகத்தில். "**அனைத்தும் சாத்தியம்**" என்ற பெயரில் ரூ.1 கோடி மதிப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கான அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் தடையற்ற சூழலுடன் வசிக்கக்கூடிய "மாதிரி இல்லம்" வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் தாங்கள் பயன்படுத்த விரும்பும் உதவி உபகரணங்கள் வகை மற்றும் மாதிரியின் தேர்வை வழங்கும் வகையில் நேரடி மானியம் திட்டத்தையும் முதல்வர் தொடங்கி வைத்தார்.

## தமிழகத்தில் சந்தை ஒப்பந்த சாகுபடி

### நிதிநிலை அறிக்கை



- ஐவகை நிலங்களையும் உள்ளடக்கி மண் சார்ந்த பயிர்களைப் பருவ காலத்துக்கு ஏற்ப பயிரிட்டு அதனை ஊக்கப்படுத்தவும், சந்தைப்படுத்துவதற்குமான வகையில் சிறப்பு மண்டலங்களையும் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.
- சிறு தானியங்கள், காய்கறிகள், எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்டவற்றைச் சாகுபடி செய்வதற்கு ஊக்கப்படுத்தும் வகையில், அவற்றுக்கான சிறப்பு மண்டலங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.
- ஒவ்வொரு விவசாயியும் என்ன பயிரிடப் போகிறோம் என்பதை முன்கூட்டியே இக்குழுவில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொள்ளும் விவசாய உற்பத்திப் பொருளுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையை அரசு நிர்ணயம் செய்ய வேண்டும்.
- விவசாயிகள் மேம்பாடு அடைவார்கள்; வருவாய் பெருகும்; தமிழகத்தால் பொருளாதார வளர்ச்சியையும் எட்ட முடியும். வேளாண்மைப் பொருளாதாரம்தான் நம்பிக்கையான பொருளாதாரம், இந்தியாவின் உணவுத் தேவை என்றைக்கும் இல்லாத அளவுக்கு அதிகரித்து வருகிறது.
- சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் கிட்டத்தட்ட 80% பேர் சிறு-குறு விவசாயிகளாக உள்ளதால், பெரும் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரமும் உயரும் என்கிற நம்பக்கையோடு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

## தமிழ்நாடானது உணவு பாதுகாப்பு குறியீட்டில் முன்னணி வகிக்கிறது

### 4 வது மாநில உணவு பாதுகாப்பு குறியீடு

| தரவரிசை | நிலை | மதிப்பெண் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு | 82 |
| 2. | குஜராத் | 77.5 |
| 3. | மகாராஷ்டிரா | 70 |
| 4. | இமாச்சல பிரதேசம் | 65.5 |
| 5. | மேற்கு வங்காளம் | 58.5 |
| 6. | மத்திய பிரதேசம் | 58.5 |

| தரவரிசை | நிலை | மதிப்பெண் |
|---|---|---|
| 7. | கேரளா | 57 |
| 8. | உத்தரகாண்ட் | 55 |
| 9. | ஒடிசா | 54.5 |
| 10. | உத்திர பிரதேசம் | 54.5 |
| 11. | கர்நாடகா | 52.5 |
| 12. | ராஜஸ்தான் | 50.5 |

- சிறிய மாநிலங்களில் கோவா முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ஒன்றிய பிரதேசத்தில் ஜம்மு மற்றும் காஷ்மீர்
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலை ஆணையத்தால் ஐந்து அளவுருக்கள் மதிப்பீடு செய்யப்படுகிறது.

## ஓயா உழைப்பின் ஓராண்டு

### பெண்கள் நலன்

- மகளிர் இலவசப் பேருந்து பயணம்
- ரூ. 1,000/- உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாத உதவித்தொகை
- ரூ.2,755 கோடி மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி

### கல்வி/வேலைவாய்ப்பு

- இல்லம் தேடிக் கல்வி
- மாவட்டந்தோறும் மாதிரிப் பள்ளிகள்

### மருத்துவம்

- மக்களைத் தேடி மருத்துவம்
- இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48
- குடும்பம் ஒன்றிற்கு ரூ,4,000 கொரோனா கால நிவாரண உதவித்தொகை

### குடிநீர் / உட்கட்டமைப்பு

- சிங்காரச் சென்னை 2.0
- கலைஞர் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

### உழவர் நலன்

- 1,00,000 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள்
- ரூ.4,800 வரை நகைக்கடன் தள்ளுபடி

### முக்கிய திட்டங்கள்

- இல்லம் தேடிக் கல்வித் திட்டம்
- இட ஒதுக்கீடு
- இலவச மின் இணைப்பு
- மக்களைத் தேடி மருத்துவம்
- வேளாண்மை நிதிநிலை அறிக்கை
- சமூக நீதியும் திமுக அரசும்
- நீட் தேர்வு எதிர்ப்பு!
- மனிதாபிமான உதவி
- கரோனா காலத்தில் ஒன்று முதல் 8-ம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளி மற்றும் கற்றல் இழப்புகளை சரிசெய்யும் நோக்கில் தமிழக அரசு ‘இல்லம் தேடி கல்வி’
- தினமும் மாலையில் 1 மணி முதல் ஒன்றரை மணி நேரம் வரை குழந்தைகளுக்கு அவர்களின் வீட்டுக்கு அருகில் உள்ள பொது இடத்தில் இனிமையான முறையில் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

SURESH'

A3 Bilingual (Tamil & English) புத்தகங்கள் அனைத்தும் வழங்கப்படும்


இனி சுரேஷ் புத்தகங்களுக்கு தபால் கட்டணம் முற்றிலும் இலவசம்
For Online Book purchase... www.sureshiasacademy.in
95002 39220
73392 21133

### சமூக நீதி

- சமூக நீதி நாள் / சமத்துவ நாள்
- ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்கம்

### அனைத்து சாதியினரும் - அர்ச்சராகலாம்

### விளையாட்டு

- சர்வதேச செஸ் ஒலிம்பியாட் 2022
- ரூ.702 கோடியில் அனைத்து தொகுதிகளிலும் விளையாட்டு அரங்கங்கள்

### சுற்றுச்சூழல் / வனம்

- மீண்டும் மஞ்சப்பை
- பசுமைப் பரப்பு அதிகரிக்கும் திட்டம்

### தொழில்கள்

- ரூ.70,000 கோடி புதிய தொழில் முதலீடுகள் ஈர்ப்பு
- தூத்துக்குடியில் இந்தியாவின் முதல் சர்வதேச அறைகலன் பூங்கா

### சமயம் / பண்பாடு

- ரூ.2,556 கோடி மதிப்பிலான கோயில் சொத்துக்கள் மீட்பு. கோயில் திருப்பணிகள்
- ரூ.6 கோடியில் பள்ளிவாசல்கள், தர்காக்கள் (ம) வக்ஃப் நிறுவனங்கள் புனரமைப்பு
- ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கான மானியம் ரூ.60,000/-ஆக உயர்வு

### செஸ் ஒலிம்பியாட்

- மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ள 44-ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை ஸ்டாலின் வெளியிட்டார்.

### 'தம்பி' என்ற சின்னம்

- இலச்சினை (Logo) மற்றும் 'தம்பி' என்ற சின்னத்தை முதல்வர் அறிமுகப்படுத்தினார்.
- செஸ் காய்களில் ஒன்றான குதிரைக்கு, தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி, சட்டை அணிவிக்கப்பட்டு வணக்கம் தெரிவிப்பது போன்ற சின்னம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு 'தம்பி' என பெயரிடப்பட்டுள்ளது.

### 44- வது சென்னை செஸ் ஒலிம்பியாட்

- 187 நாடுகளை சேர்ந்த 343 அணிகள் இதில் கலந்து கொள்கின்றன.
- 1924-ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் இல்லாமல் செஸ் விளையாட்டுக்கு தனியாக ஒலிம்பிக் போட்டி நடத்த முடிவெடுக்கப்பட்டது.
- ஆசியாவில் இந்த போட்டியை நடத்த இதுவரை 2 முறைகள் மட்டுமே வாய்ப்புகள் கிடைத்தன.
- 1986-ல் துபாயிலும், 1992-ல் பிலிப்பைன்ஸ் நாட்டிலும் மட்டுமே நடந்திருக்கிறது.

## ஆன்லைன் சூதாட்டத்துக்குத் தடை

### ஆன்லைன் ரம்மிக்கு அவசரச் சட்டம்

- அதிமுக ஆட்சியில் ஆன்லைன் ரம்மிக்கு எதிராக சட்டம் 25 - 02 - 21 அன்று கொண்டுவரப்பட்டது.
- சட்டத்தை ரத்து செய்தது உயர்நீதிமன்றம் 03 - 08 - 21
- உச்சநீதிமன்றத்தில் திமுக அரசு மேல்முறையீடு 13 - 11 - 21

### ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஆய்வு

- ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- ஆன்லைன் ரம்மியால் ஏற்படும் நிதியிழப்பு, தற்கொலை உள்ளிட்ட ஆபத்தை விளைவிக்கும் தன்மையை கண்டறிவது.
- கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் ஆன்லைன் ரம்மி விளையாட்டுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டங்களும் அந்தந்த மாநில உயர்நீதிமன்றங்களால் ரத்து செய்யப்பட்டுள்ளன.
- இந்த விளையாட்டுக்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை உரிய தரவுகளுடன் ஆராய்வது ஆகியவற்றை குழு செய்யும்.
- இதன்பின் 2 வாரங்களுக்குள் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.
- இந்த அறிக்கையின் அடிப்படையில் அவசரச் சட்டம் விரைவில் இயற்றப்படும்.
- இச்சட்டம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் அமையும்.

## ஆன்லைன் சூதாட்டத்துக்குத் தடை

- ஒரு முறை பணம் கட்டி விளையாடும்போது எப்படியாவது வென்றுவிடலாம் என்ற ஆசை உந்தித் தள்ளுகிறது. ஒரு முறை அல்லது இரண்டு முறை வென்றும் விடுவார்கள். அது இன்னும் கூடுதலாக இந்த விளையாட்டை விளையாடுவதற்கு ஊக்கமளிக்கிறது.
- இரண்டு முறை வென்றால், நான்கு முறை தோற்றுவிடுகிறார்கள்.

## ஆன்லைன் விளையாட்டுகள்

- தொடர்ந்து விளையாடும்போது அதிகமான பணத்தை இழந்து, அதனால் மனச்சுமை ஏற்படுவதோடு கடன் சுமைக்கும் ஆளாக்கப்பட்டுப் பலரும் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.
- இந்தியாவில் போக்கர், ஷீட்டிங் பைட்டர்ஸ், ஃப்ரீ பயர் போன்ற பல பெயர்களில் 132 ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளும் செயலிகளும் இருக்கின்றன.
- இவற்றை டிஜிட்டல் ஜங்கிலி கேம்ஸ், பிளே கேம்ஸ், ரீட் டிஜிட்டல் ஜங்கிலி கேம்ஸ், கே.பி.எம்.ஜி, ஆர்.ஜி.எம். போன்ற சர்வதேச நிறுவனங்கள் நடத்துகின்றன. இவை இந்த ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளின் மூலமாக ஆண்டுதோறும் பல்லாயிரம் கோடி ரூபாய் லாபம் ஈட்டுகின்றன.
- பொதுவான ஆன்லைன் விளையாட்டுகளை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம். ஒன்று, ஆன்லைன் திறன் விளையாட்டு (Games of Skill); இரண்டு, வாய்ப்பு அடிப்படையிலான விளையாட்டு (Games of Chance). தன்னுடைய திறமையைத் தெளிவாக வெளிப்படுத்தும் ஆன்லைன் விளையாட்டுகளால் எந்தப் பிரச்சனையும் இல்லை. என்னிடம் திறமை இருக்கிறது அதைச் சரியாகப் பயன்படுத்துகிறேன் என்பதோடு முடிந்துவிடும்.

## தடை செய்ய வேண்டும்?

- இந்தியாவில் உள்ள 132 ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளையும் செயலிகளையும் ஒழிக்க வேண்டும் என்றும் ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி கேட்டுக் கொண்டிருக்கிறார்.
- தமிழகத்திலும் இந்த ஆன்லைன் சூதாட்டத்தைத் தடை செய்ய வேண்டும் என்று அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் வலியுறுத்தினார்கள்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் பொதுநல வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது. அதை விசாரித்த நீதிமன்றம், ஆன்லைன் சூதாட்டத்தைத் தடை செய்வது தொடர்பாக மத்திய – மாநில அரசுகள் பரிசீலித்து, தடை செய்யும் வழிமுறைகளை ஆராயக் கேட்டுக் கொண்டது.
- ஆன்லைன் விளையாட்டைத் தடை செய்யும் நோக்கில் 2020, நவம்பர் 21 அன்று தமிழக அரசு ஒரு அவசரத் தடைச் சட்டத்தை உருவாக்கியது. அந்த அவசரச் சட்டத்தின்படி, ஆன்லைன் சூதாட்ட விளையாட்டு அரங்கம் வைத்திருந்தால் ரூ.10,000 அபராதமும் இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.
- ஆன்லைன் சூதாட்டங்களை நடத்தும் சர்வதேச நிறுவனங்கள், தமிழக அரசு கொண்டுவந்த தடைச் சட்டத்திற்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தன. அவர்கள் வாதத்தின்படி இது திறமையை வெளிப்படுத்தும் விளையாட்டு; சூதாட்டம் அல்ல என்று நீதிமன்றத்திலேயே கூறினார்.
- இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், ஆன்லைன் விளையாட்டுத் தடைச் சட்டம் அரசமைப்புக்கு விரோதமானது. மேலும், போதுமான காரணங்களின் அடிப்படையில் இந்தச் சட்டம் இயற்றப்படவில்லை.
- எண்ணற்ற இளைஞர்களைச் சிக்க வைத்து, கடன் சுமைக்குள் தள்ளிவிட்டு, கடைசியில் அவர்களின் உயிரை மாய்த்துக் கொள்ள வைக்கும் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளை முற்றிலுமாகத் தடைசெய்ய வேண்டும்.

## துவக்கம்

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கான, எண்ணும் எழுத்தும் திட்டத்தை திருவள்ளுவர் மாவட்டம் அழிஞ்சிவாக்கத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

## நோக்கம்

- 2025-ம் ஆண்டுக்குள் 8 வயதுக்கு உட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்கள் அடிப்படை கணிதத் திறனுடன், பிழையின்றி எழுதிப் படிப்பதை உறுதி செய்யும் விதமான ‘எண்ணும் எழுத்தும்’ திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

- நீர் எப்படி தாகத்தை போக்குகிறதோ, அதேபோல, கல்வித்தாகத்தை, அறிவு தாகத்தை தீர்க்கக்கூடிய வகையில் 'எண்ணும் எழுத்தும்' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**செயல்முறை**

- இத்திட்டம் 2022-23 கல்வியாண்டில் இருந்து தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1, 2, 3 ஆகிய வகுப்புகளில் நடைமுறைப்படுத்தப்படும்.
- ஆடல், பாடல், கதையாக சொல்லுதல், நடித்துக் காட்டுதல், பொம்மலாட்டம், கைவினைப் பொருட்கள் என பல்வேறு வடிவங்களில் இத்திட்டத்தின் பாடங்கள் பயிற்றுவிக்கப்படும்.
- 'இல்லம் தேடி கல்வி' திட்டத்தின் ஒரு பகுதியாக ரீடிங் மாரத்தான் (Reading, Marathon) என்ற தொடர் வாசிப்பு இயக்கம்
- கூகுள் நிறுவன 'Read aloud' செயலி மூலம் நடந்த இவ்வியக்கத்தில் தமிழக அரசுப்பள்ளி குழந்தைகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் 200 கோடி சொற்களை வாசித்து இருக்கிறார்கள்.
- கல்வியைப் பொருத்தவரையில் 3 முதல் 5 வயதுக்குள் குழந்தைகளின் சிந்தனை ஆற்றல் பெருகி விடுகிறது. இந்த சிந்தனை ஆற்றல்தான் குழந்தையின் ஆளுமைத் திறனைத் தீர்மானிக்கிறது.

**இலக்கு**

- இந்தச் சமூகத்தின் திறவுகோலாக ஒவ்வொரு மனிதருக்கும் இருப்பது தொடக்கக் கல்விதான்.
- குழந்தைகள் கவனச் சிதறல் இல்லாமல் கல்வி கற்பர். கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட கற்றல் இடைவெளி குறைவது மட்டுமல்லாது மிகச் சிறந்த அளவில் அவர்களது கற்றல் திறன் உயரும்.
- பள்ளிக் கல்வியில் வரும் 2025-ஆம் ஆண்டுக்குள் நாம் அடைய வேண்டிய இலக்கை நிச்சயம் அடைவோம்.
- கரோனா காலத்தில் குழந்தைகள் இழந்த கற்றலைப் பெறுவதற்கு உதவியாகப் பள்ளிக் கல்வித் துறையின் முன்னோடித் திட்டமாக எண்ணும் எழுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தில் அரும்பு, மொட்டு, மலர் என்னும் பெயர்களில் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களுக்கு பல்வேறு நிலைகள் வாரியாக பயிற்சி நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- விடுபட்ட வகுப்புகளுக்கான பாடத் திறன்களை குழந்தைகள் பெறுவர். பயிற்சி நூலில் தமிழ், ஆங்கிலம், கணிதப் பாடங்களை கற்பிப்பதற்கான தெளிவான விரிவான விளக்கங்களுடன் கூடிய ஆசிரியர் கையேடுகளும் முதல் முறையாக உருவாக்கி அளிக்கப்பட்டுள்ளன.

**இக்கல்வி முறையில் நாம் பெறுவது**

- 2025-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் உள்ள எட்டு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் பிழையின்றி படிப்பதும், எழுதுவதும் உறுதி செய்யப்படும்.
- இளம் தளிர்களின் அடிப்படை கல்வியை வலுவுள்ளதாக்கும் வகையில் அருமையான திட்டம்.
- ஒரு குழந்தை தனது 5 வயதை அடைவதற்குள் 90 சதவீதம் அளவுக்கு மூளை வளர்ந்து விடுவது தெரியவந்துள்ளது.
- 3-ம் வகுப்பில் இப்போது சேர்ந்திருக்கும் குழந்தைகள், 2-ம் வகுப்பு கற்றல் அடைவைப் பெறவில்லை. இரண்டாம் வகுப்புக்கு வந்து இருக்கும் குழந்தைகள், முதல் வகுப்புக்குரிய கற்றல் அடைவை பெறவில்லை.
- குழந்தைகளின் கற்றல் திறனில் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது.

## எண்ணும் எழுத்தும் திட்டம்

- 6 வயது முதல் 8 வயது வரை என்பது குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கான முக்கியமான காலக்கட்டம்.
- இக்காலக்கட்டத்தில் குழந்தைகள், விரைவாகக் கற்றுக்கொள்கிறார்கள்.
- மற்ற பருவங்களைவிட இப்பருவத்தில் அவர்களின் உள்வாங்கும் தன்மைசிறப்பாக இருக்கும்.
- குழந்தைகளுக்கு விளையாட்டு அல்லது செயல்பாடுகளே கற்றுக் கொள்ள உதவும். இதனடிப்படையில் கற்பித்தல் முறை அமைய வேண்டும்.

- நீங்கள் கற்பிக்கும் முறை வாயிலாக குழந்தைகள் கற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், குழந்தைகள் கற்றுக்கொள்ளும் வகையில் நீங்கள் கற்பிக்க வேண்டும்.
- மன அழுத்தமோ, பயமோ இல்லாமல் மகிழ்ச்சியான முறையில் கற்றுக்கொண்டால்தான் குழந்தைக்கு எளிதில் பாடங்கள் புரியும்.

### புதிய கற்பித்தல் முறை

- குழந்தைகளுக்கு அவர்களின் தனித்திறனைக் கண்டறிய உதவும் வகையில் கல்வியின் குறிக்கோள் அமைய வேண்டும்.

### வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது

- 2022-23-ம் கல்வியாண்டில் தொடங்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் இலக்கு 2025-ல் 8 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் எழுத்தறிவும், எண்ணறிவும் கிடைத்துவிட வேண்டும்.
- 1 முதல் 3-ம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளின் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.
- செயல்வழியிலும், விளையாட்டு வழியிலும் குழந்தைகள் கற்றாலும், அவர்களின் கற்கும் திறனை வைத்து அவர்களை குழுக்களாக பிரித்து பாடங்களை கற்றுத் தருவதே இத்திட்டத்தின் அடிப்படை.
- கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தவிருக்கும் 'எண்ணும் எழுத்தும்' தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வியில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திட்டம்.

## உணவுப் பாதுகாப்பில் முதலிடம் தொடரட்டும்

- உணவுப் பாதுகாப்புக் குறியீட்டெண்ணில் தமிழ்நாடு மூன்றாம் இடத்திலிருந்து முதலிடத்திற்கு முன்னேற்றம்.
- உலக உணவுப் பாதுகாப்பு நாளான ஜுன் 7 அன்று டெல்லியில் நடந்த விழாவில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கடந்த 2021-2022-ல் முதலிடம் பெற்றிருக்கும் தமிழ்நாட்டுக்கு விருதளித்துப் பாராட்டியுள்ளார்.
- ஒவ்வொரு மாநிலமும் தமது எல்லைக்குள் உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்தக் குறியீட்டெண் வெளியிடப்படுவதன் நோக்கமாகும்.
- பெரிய மாநிலங்கள், சிறிய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் என்ற மூன்று பிரிவுகளில் இந்தக் குறியீட்டெண்கள் அறிவிக்கப்படுகின்றன.
- மனிதவளம் மற்றும் நிறுவனங்களைப் பற்றிய தரவுகள், தர நிர்ணய விதிமுறைகளைப் பின்பற்றுதல், உணவுப் பொருட்களைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

## இ-சேவை தமிழகத்திற்கு 2வது இடம்

- தமிழ்நாடு மின்னாளுமை முகமை இயக்கம், தமிழ்நாடு அரசு கேபிள், டிவி நிறுவனம் வாயிலாக, அரசு இ-சேவை மையங்களை இயக்கி வருகிறது.
- வருமான சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, ஜாதி சான்றிதழ் உட்பட, 200 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- தேசிய நிர்வாக சேவை வழங்குதல் மதிப்பீடு, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும்.
- 2021-22ம் நிதியாண்டில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.




- முதல் இடத்தில் கேரளாவும், மூன்றாவது இடத்தில் பஞ்சாப் மாநிலமும் உள்ளது.

## மகளிர் காவல் நிலையங்கள்

- சட்டம்-ஒழுங்கை பராமரித்தல், குற்றங்களை தடுத்தல் மற்றும் கண்டறிதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பணிகளில் மகளிர் போலீஸார் திறம்பட செயலாற்றி வருகின்றனர்.
- தமிழகத்தில் தற்போது 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.
- பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம்

## வேலைக்காக காத்திருத்தல்

- பகுதி நேர ஊழியர்களுக்கான கணக்கெடுப்பு (PLFS) 2018. கடந்த 40 ஆண்டுகளில் இந்தியாவில் வேலைமற்றவர்களின் விகிதத்தை குறிக்கிறது அதிகபட்சமாக 6.07% ஆக உள்ளது.
- வேலையற்றவர்களின் விகிதமானது 2020 - 21 ம் ஆண்டில் 4.2% ஆகவும் மற்றும் 2019 - 20 ல் 4.8% ஆக உள்ளது.

## 2022 - ன் முதல் காலாண்டில் வேலையற்றோருக்கான விகிதம்

- PLFS - ன் அறிக்கையின்படி, வேலையற்றோருக்கான விகிதமானது 2021 அக்டோபர் - டிசம்பர் 8.7% ஆக இருந்தது. இது குறைந்து 2022 - ஜனவரி - மார்ச் 8.2% ஆக குறைந்தது.
- தேசிய புள்ளியியல் நிறுவனம் (NSO) வெளியிட்ட அறிக்கையின்படி 2019 - 20 ஆம் ஆண்டு 4.8% இது 0.6% குறைந்து 2020 - 21 ஆம் ஆண்டு 4.2% ஆனது.
- 15 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான விகிதம் 11.8% லிருந்து 10.1% ஆக குறைந்தது. முந்தைய காலாண்டில் இந்த விகிதமானது 10.5% ஆக இருந்தது.
- ஆண்டுகளுக்கான வேலையற்றோர் விகிதமானது 8% லிருந்து 7.7% ஆக குறைந்தது. முந்தைய காலாண்டில் இவ்விகிதம் 8.3% ஆக இருந்தது.

## தமிழக கல்வி வளர்ச்சி

- கல்வியால் மக்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்படும் என்று பெரியார் நம்பினார்.
- மேன்மையான வாழ்வுக்குத் தொழில் செய்யவோ அலுவல் பார்க்கவோ கல்வி பயன்படும் என்றார்.
- வேலைவாய்ப்பைவிட தன்மானம் முக்கியம், அதைக் கல்வியால் மட்டுமே வழங்க முடியும்.
- காமராஜரின் ஆட்சிக்காலத்தில் (1954-1963) குலக்கல்வித் திட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இலவசக் கல்விக்கும் மதிய உணவுத் திட்டத்துக்கும் தொடக்கம் குறிக்கப்பட்டது.
- அண்ணாவின் காலத்தில் (1967-69) இருமொழிக் கொள்கை ஏற்கப்பட்டது.
- முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் (1977-87) மதிய உணவுத் திட்டம் சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டது. விலையில்லாப் பாடநூலும் சீருடையும் வழங்கப்பட்டன.
- முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சிக் காலங்களில் (1969-76, 1989-91, 1996-2001, 2006-11) உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி, கிராமப்புற மாணவர்களுக்கு இடஒதுக்கீடு, தொழிற்கல்விக்கு நுழைவுத் தேர்வு ரத்து, சத்துணவுத் திட்டத்தில் முட்டை, சமச்சீர் கல்வி, கணினிப் பயிற்சி, செயல்வழிக் கற்றல், புதிய பல்கலைக் கழகங்கள் முதலான பல சீர்திருத்தங்கள் அமலாகின.
- முன்னாள் முதல்வர் செல்வி. ஜெயலலிதா (1991-96, 2001-06, 2011-16) பள்ளிப் பிள்ளைகளுக்கு மடிக் கணினியும், சைக்கிளும் வழங்கினார்.
- இந்த வரிசையில் முதல்வர் ஸ்டாலின் 'இல்லம் தேடிக் கல்வி', 'நான் முதல்வன்', 'பள்ளிப் பிள்ளைகளுக்குக் காலை உணவு' முதலான புதிய திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்.

## கௌரவ கொலை

- 'கௌரவம்' என்கிற பெயரில் ஈவு இரக்கமின்றி நடத்தப்படும் இந்தக் கொலைகள் தங்களால் நேசிக்கப்பட்டவர்கள் மீதே நிகழ்த்தப்படுகின்றன என்பது கொடுமையின் உச்சம்.

### சமூகத்தின் பங்கு

- சில மனிதர்கள் அவர்கள் பிள்ளைகள் மீது வைக்கும் பாசத்தால் அவர்களின் சுயமான திருமணத்தை ஏற்றுக்கொள்ள முடிவெடுத்தாலும் சமூகப் பார்வைக்கு அஞ்சுகிறார்கள்.
- இன்னொரு பக்கம் திருமணம் என்பது காலங்காலமாக இரு தனிமனிதர்களின் இணைப்பு என்பதைத் தாண்டி இரு குடும்பங்களின் இணைப்பாக நடந்து வருவதால் அவர்களுக்குச் சம்பந்தம் செய்து கொள்ளப்போகிற குடும்பம் சார்ந்து அவர்களின் வர்க்கம் சார்ந்து போட்டு வைத்திருக்கும் கணக்கு பொய்த்துப் போவதும் அவர்களது சமுதாய உறவு நிலைகளில் பாதிப்பு
- தந்தை ஆதிக்கக் குடும்ப அமைப்பு, சாதி, வர்க்கம் இவையனைத்துக்கும் இந்தக் கொலைகளில் கூட்டுப்பங்கு இருக்கிறது.
- நமது நாட்டில் வட மாநிலங்களில் இன்றும் சாதி மறுப்புத் திருமணம் என்பது சிம்ம சொப்பனமாகவே இருக்கிறது.
- தமிழ்நாட்டில் சாதி மறுப்புத் திருமணங்கள் திராவிட இயக்கங்களால் திட்டமிட்டு வளர்த்தெடுக்கப்பட்ட வரலாறு இருக்கிறது.

### சாதி மட்டுமே காரணம் அல்ல

- குடும்பம் காதலை எதிரியாகப் பார்க்கிறது. பிள்ளைகளின் சுயேச்சையான முடிவை அத்துமீறலாகப் பார்க்கிறது.
- சாதியை எதிர்க்கிற நாம் குடும்பம் என்கிற அமைப்பைக் கேள்வி கேட்கவோ அதன் அமைப்பில் மாற்றங்கள் வேண்டும் என்று கோரவோ தயாராக இல்லை.
- சொந்த மாமன் மகனைக்கூடத் தன் விருப்பத்துக்கு மாறாகக் கட்டினால் மகளை வெட்டிப்போடத் தகப்பன் தயாராக இருக்கும் அமைப்புதான் குடும்பம்.
- கௌரவக் கொலை என்கிற பெயர்தான் சரி. 'ஆவணக்கொலை' என்கின்ற சொல் கௌரவத்தின் இடத்தைக் காப்பாற்றி விட்டது.

### அரசுக்குப் பெரும் பொறுப்பு

- ஆவணக் கொலைகளில் 'சாதி'க்கும் பெரிய பங்கிருக்கிறது. ஒரு சில சாதியினர் அதிக வன்முறையோடு இதை அணுகுகிறார்கள் என்பதிலும் உண்மை இருக்கிறது.
- சட்டங்கள், சமுதாய விழிப்புணர்வு இவற்றின் வாயிலாக இவற்றைக் குறைத்திட நாம் போராடலாம்.
- நமது கல்வி அமைப்பிலும் இதற்கேற்ப மாற்றங்கள் அல்லது புரட்சி நிகழ்ந்திட வேண்டும்.
- குழந்தை வளர்ப்பிலும் கல்வியிலும் பெற்றோரின் சுமை பெருமளவு குறைக்கப்பட்டு அரசின் பங்களிப்பு அதிகப்படுத்தப்பட வேண்டும்.
- வயது வந்த பெண்ணுக்கும் ஆணுக்கும் வாழ்க்கை அவர்கள் பொறுப்பிலும் அவர்கள் விருப்பத்தின் பேரிலும் அமைய வேண்டும்.
- அதற்கான சமுதாய வெளி அரசின் பொறுப்பில் அமைக்கப்பட வேண்டும்.
- குழந்தைகளை வளர்க்கிற பெண்கள், ஆணாதிக்க, சாதிய ஆண்களின் குரலாகவே தம் குழந்தைகளுக்கு மத நம்பிக்கையையும் சடங்குகளையும் கடத்துகிறார்கள்.
- நம் பாட்டிகளும், அம்மாக்களும் யாரால் மூளைச் சலவை செய்யப்பட்டார்கள் என்கிற கேள்வி வரும்போது அங்குதான் ஆண்களின் பங்கு வருகிறது.

### சிப்பெட்

- தொழிற்பேட்டையில், 'சிப்பெட்' என்ற, மத்திய பிளாஸ்டிக்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், 1968-ல் துவங்கப்பட்டது. பிளாஸ்டிக்ஸ் தொடர்பான இளநிலை மற்றும் முதுநிலை பட்டம் மற்றும் டிப்ளமா படிப்புகள் இங்கு கற்பிக்கப்படுகின்றன.
- பிளாஸ்டிக் துறை வளர்ச்சியில் சிப்பெட்டின் பங்களிப்பு மிக முக்கியானது.
- தமிழகம் வாகன உற்பத்தியில் சிறந்து விளங்குகிறது. அத்துறைக்கு தேவையான பிளாஸ்டிக் சார்ந்த உதிரி பாகங்கள், மருத்துவத் துறைக்கு தேவையான பிளாஸ்டிக் கருவிகள், வேளாண் துறைக்கு தேவையான பொருட்கள் அனைத்திற்கும், சிப்பெட்டின் பங்களிப்பு இன்றியமையாதது.
- இத்துறையின் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது.

## தமிழகத்தில் கல்வி

- பிளஸ் 2 பொதுத் தேர்வில் 97.95 சதவீதம் தேர்ச்சி பெற்று மாநில அளவில் பெரம்பலூர் மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது.
- பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 97.22 சதவீதம் தேர்ச்சி பெற்று மாநில அளவில் கன்னியாகுமரி மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது.
- பிளஸ் 2 (86.69%), பத்தாம் வகுப்பு (79.87%) தேர்வு முடிவுகளின் அடிப்படையில், வேலூர் மாவட்டம் தமிழகத்திலேயே கடைசி இடத்தைப் பிடித்துள்ளது.

## உயர்நீதிமன்றத்தில் தமிழ்

- சென்னை உயர்நீதிமன்த்தில் தமிழை வழக்காடு மொழியாகக் கொண்டுவர வேண்டும் என்று முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, உயர்நீதிமன்றத்துக்கும் மத்திய அரசுக்கும் உச்சநீதிமன்றத்துக்கும் அனுப்பினார்.
- அடிப்படைக் கட்டமைப்பு வசதியிருந்தால் இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம் என்றது.

### அடிப்படைக் கட்டமைப்பு வசதி

- ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள அனைத்து இந்தியச் சட்டங்களும் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது போல், தமிழிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.
- இதனை நிறைவேற்றுவதற்காக 8 ஆண்டுகளுக்குப் பிறகு 2018-ல் அன்றைய மாநில அரசு, மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தை உருவாக்கியது. இந்த ஆணையத்தின் வழியாகக் கடந்த 3 ஆண்டுகளாக 'இந்திய அரசியலமைப்பு' தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, அதிகாரப்பூர்வமாக வெளியானது.
- கணினியில் தமிழ் பயன்படுத்துவதற்கான மென்பொருள், அதைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி போன்றவற்றை நீதிமன்ற ஊழியர்களுக்கும் நீதிபதிகளுக்கும் வழக்கறிஞர்களுக்கும் எளிதில் கிடைப்பதற்கான வசதிகள் செய்யப்பட வேண்டும்.
- கடந்த 15 ஆண்டுகளில் தாங்களாகவே தமிழ் மென்பொருளைப் பயன்படுத்தித் தட்டச்சு செய்யும் முறையைப் பலரும் சொந்த முயற்சியால் பெற்று வருகிறார்கள்.
- சட்ட நூல்களும் சட்ட இதழ்களும் தமிழில் வெளிவருவதை உறுதி செய்ய வேண்டும்.
- சென்னை உயர்நீதிமன்றம் 'தீர்ப்புத் திரட்டு' என்னும் தலைப்பிலான நூல்களை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளியிட்டு வருகிறது.
- இவ்வளவு வரலாற்றுப் பின்னணியும் தொடர் நடவடிக்கைகளும் முயற்சியும் இருந்தும்கூட தமிழ் வழக்காடு மொழியாக வரவில்லை.

## முதல்வரின் சரியான யோசனை

### நோக்கம்

- சர்க்காரியா குழு பரிந்துரையின் அடிப்படையில் குடியரசுத் தலைவரால் கடந்த 1990-ஆம் ஆண்டு மே மாதம் 28-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மூலம் ஏற்படுத்தப்பட்ட நிரந்தர அமைப்புதான் 'மாநிலங்களிடை மன்றம்'. (இன்டர் ஸ்டேட் கவுன்சில்).
- நாடு தழுவிய எந்தவொரு திட்டமானாலும் அல்லது பிரச்சனையானாலும் அது குறித்து மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே கருத்தொற்றுமை ஏற்பட வழிவகுப்பதுதான் இந்த அமைப்பின் முக்கிய நோக்கம்.

### உறுப்பினர்

- இந்த அமைப்பின் தலைவராக பிரதமரும், உறுப்பினர்களாக மத்திய கேபினட் அமைச்சர்கள், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முதல்வர்கள், சட்டப்பேரவை இல்லாத யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள், குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் உள்ள மாநிலங்களின் ஆளுநர்களும் செயல்படுகின்றனர்.
- இந்த அமைப்பு ஆண்டுக்கு மூன்று முறை கூட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

- இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்ட பிறகு, கடந்த 32 ஆண்டுகளில் இதுவரை 12 முறை மட்டுமே கூடியுள்ளது.
- மன்மோகன் சிங் தலைமையிலான 10 ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்காலத்தில், கடந்த 2006-ஆம் ஆண்டு ஒரே முறைதான் இந்த அமைப்பின் கூட்டம் நடைபெற்றது.
- மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே ஏற்படக்கூடிய பிரச்சனைகளை விவாதித்து தீர்வு காணக்கூடிய பொதுத்தளம் 'மாநிலங்களிடை மன்றம்' அதனால் அந்த அமைப்பு ஆண்டுக்கு மூன்று முறை கூடுவதை பிரதமர் மோடி உறுதி செய்ய வேண்டும்.
- தற்போதைய ஆட்சியில் பணமதிப்பிழப்பு நடவடிக்கை, நிலம் கையகப்படுத்தும் மசோதா, ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசியல் சட்ட 370-ஆவது பிரிவு ரத்து, புதிய வேளாண் சட்ட மேசோதாக்கள், 4 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் ராணுவத்துக்கு வீரர்களைத் தேர்வு செய்யும் அக்னிபத் திட்டம் உள்ளிட்டவை முறையான விவாதத்துக்கும் நாடாளுமன்ற ஒப்புதலுக்கும் பிறகு கொண்டு வரப்பட்டவை அல்ல.
- மாநிலங்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதிக்கக்கூடிய பல்வேறு சட்ட மசோதாக்கள் முறையாக விவாதிக்கப்படாமல் நாடாளுமன்றத்தில் அவசரகதியில் நிறைவேற்றப்படுவதாகவும், இத்தகைய மசோதாக்கள் குறித்து மாநிலங்களிடை மன்றத்தில் முன்கூட்டியே விவாதித்து கருத்தொற்றுமையை ஏற்படுத்தினால் அது மிகவும் பயனுள்ளதாக அமையும்.
- மத்திய திட்டக்குழுவுக்குப் பதிலாக நரேந்திர மோடி ஆட்சியில் அமல்படுத்தப்பட்டுள்ள நீதி ஆயோக் அமைப்பால் மாநிலங்கள் தங்களுக்குரிய நிதியைப் பெறுவதில் இடையூறுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## மூவலூர் ராமாமிர்தம் உயர்கல்வி உறுதித்திட்டம்

- உயர்கல்வி படிக்கும்போது மாதம் தோறும் ரூ.1,000 உதவித்தொகை
- அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை பயின்று, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ், பட்டயம், பட்டம், தொழிற்கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை, மாதம்தோறும் ரூ.1,000 உவித்தொகை அவர்களது வங்கிக் கணக்குக்கு நேரடியாக செலுத்தப்படும்.
- பிற கல்வி உதவித்தொகை பெற்று வந்தாலும் இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம்.



### நோக்கம்

- அரசுப் பள்ளி மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- பெண்களுக்கு உயர்கல்வி அளிப்பதன் மூலம் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல்.
- குழந்தை திருமணத்தை தடுத்தல்
- பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தைக் குறைத்தல்

### யார் யாருக்கு உதவித்தொகை?

- 6 முதல் 12-ம் வகுப்பு வரை தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் படித்து, இங்கேயே உயர்கல்வி பயில்பவராக இருக்க வேண்டும்.
- தனியார் பள்ளியில் கல்வி உரிமை சட்டத்தின் கீழ் 6 முதல் 8-ம் வகுப்பு வரை படித்து பிறகு, அரசுப் பள்ளியில் 9 முதல் 12-ம் வகுப்பு வரை படித்த மாணவிகளும் பயன்பெறலாம்.
- மாணவிகள் 8 அல்லது, 10 அல்லது 12-ம் வகுப்புகளில் படித்து பின்னர், முதல் முறையாக உயர் கல்வி நிறுவனங்களில் சேரும் படிப்புக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.
- இளநிலை பயிலும் மாணவிகள் மட்டுமே இதில் பயன்பெற முடியும். முதுநிலை பயிலும் மாணவிகள் பயன்பெற இயலாது.


- தொலைதூரக் கல்வி, திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் படிப்பவர்களுக்கு இது பொருந்தாது.
- 2022-23 கல்வி ஆண்டில், மாணவிகள் இளநிலை முதலாண்டு சேர்ந்த பிறகு, இணையதளம் மூலம் இத்திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

## தமிழகத்தில் சூரியமின்சார உற்பத்தி

- அகில இந்திய அளவில் தமிழகம் 4-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 12 ஆயிரம் மெகாவாட் சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து ராஜஸ்தான் மாநிலம் முதலிடத்திலும்
- 7,590 மெகாவாட் உற்பத்தி செய்து கர்நாடகா 2-ம் இடத்திலும், 7,180 மெகாவாட் உற்பத்தி செய்து குஜராத் 3-வது இடத்திலும்
- 5,067 மெகாவாட் உற்பத்தி செய்து தமிழகம் 4-வது இடத்திலும் உள்ளது.

## பாரத் நெட் திட்டம்

- பாரத் நெட் திட்டம் என்பது தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்து 525 கிராம பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை கம்பி வடம் மூலம் இணைத்து, அதிவேக அலைக்கற்றை வழங்கும் திட்டமாகும்.
- இத்திட்டம் டான்பி நெட் நிறுவனம் என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.




### துரித சேவை

- பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மின்னணு சேவைகள், இணைய வழி கல்வி, தொலை மருத்துவம், தொலைபேசி, தொலைக்காட்சி மற்றும் இணையம் ஆகிய சேவைகளை வழங்க இயலும்.
- அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் ஆகியவை அதிவேக, இணையதள சேவையை பெறுவதன் மூலம் கிராம அளவில் அரசின் பல்வேறு திட்டங்கள் மக்களை விரைந்து சென்றடையும்.
- புதிய ஊரக வேலைவாய்ப்புகளை உருவாக்கி பொருளாதார நிலை மேன்மை அடையவும்
- அனைத்து கிராம பஞ்சாயத்துகளும் பாதுகாப்பான மற்றும் விரைவான இணைய சேவைகளைப் பெறவும் நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறங்களுக்கு இடையேயான தகவல் தொழில்நுட்ப திறன் இடைவெளியை குறைக்கும்.

## சோப்தார் பதவிக்கு பெண் நியமனம்

- 1862-ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சென்னை ஐகோர்ட்டு தொடங்கப்பட்டது.
- சோப்தார் பதவி வகிப்பவர், நீதிபதிகள் தங்களது சேம்பரில் இருந்து, கோர்ட்டு அறைக்கும், சேம்பரில் இருந்து வீட்டுக்கும் செல்ல, காருக்கு செல்லும் போது, அதாவது ஐகோர்ட்டு வளாகத்தில் நீதிபதிகள் வருவதை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் விதமாக நீதிபதிக்கு முன்பு கையில் செங்கோல் ஏந்தி நடந்து செல்வார்கள்.
- அவர்கள் சீருடையாக வெள்ளை நிற ஆடையும், சிவப்பு நிற தலைப்பாகையும் அணிந்து இருப்பார்.
- இந்த பதவிக்கு முதல் முறையாக, **'திலானி'** என்ற பெண் நியமிக்கப்பட்டு உள்ளார்.

## 6.70 லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதவில்லை

- தமிழகத்தில் பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுத விண்ணப்பித்த 26.77 லட்சம் பேரில் 6.70 லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதவில்லை.
- வறுமையே பிரதான காரணமாக இருக்கலாம்
- வேலைக்குச் சென்று தினமும் பணம் பார்த்துவிட்ட மாணவர்களை, திரும்பவும் பள்ளிக்கு வரவழைப்பது என்பது எளிதல்ல.
- விளிம்பு நிலையில் வாழும் பல பெற்றோர் தம் பிள்ளைகளை பள்ளிக்குச் செல்லாமல் வேலைக்குச் செல்வதையே ஆதரிக்கிறார்கள்.
- மாணவர்கள் தேர்வு எழுதி தேர்ச்சி பெறவில்லை என்றால் கற்றல் பின்னடைவு என்று எடுத்துக் கொள்ளலாம். தேர்வு எழுதவே வரவில்லை என்பது மிகவும் கொடுமை.
- கல்வி ஒரு பேராயுதம். அதை பயன்படுத்தி நம் வாழ்வை அருமையாக செப்பனிட்டுக் கொள்ளலாம்.
- ஒரு பெண் கல்வி பெற்றால் அது அக்குடும்பம் முழுமைக்குமே பயன் தரும் என்பது ஆன்றோர் வாக்கு.

## நான் முதல்வன்

### முக்கிய நோக்கம்

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளின் திறமைகளை கண்டறிவது; ஆண்டுக்கு சுமார் 10 லட்சம் இளைஞர்களின் சிந்தனை, திறமையை மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குதலே ஆகும்.
- "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் பிளஸ் 2 முடித்த மாணவர்களுக்கு, உயர்கல்விக்கு ஒளிமயமான பாதைக்கு வழிகாட்டும் "கல்லூரி கனவு".
- மாணவர்களை கல்வி, அறிவாற்றல், படிப்பு, மரியாதை, சமத்துவம், பண்பாடு, வழிநடத்தும் திறனை கொண்டவர்களாக உயர்த்தும் திட்டம்தான் நான் முதல்வன் திட்டம்.
- 2026-ம் ஆண்டுக்குள் தமிழகத்தில் 2 மில்லியன் இளைஞர்கள் திறன் மேம்பாடு அமைய வேண்டும்.
- 2030ம் ஆண்டிற்குள் தமிழகம் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டுமென்ற இலக்கு.

